Associated with the view that memory is the knowledge produced by prior experience, U. Ś. proceeds to analyse the nature of persistent cognition, *dhārāvāhika-jñāna*. In *dhārāvāhika-jñāna*, the continuous cognition of an identical object in the second and succeeding moments is generated only by impression. If so, can persistent cognition be excluded from valid knowledge on the same ground as that of memory? U. Ś. says that in a persistent cognition there is only a possession of impression (*samskāratva*) and not generation of cognition by the impression (*samskāra-janya*). The knowledge which occurs in the second moment is not caused by the impression but by those very conditions which generated the first knowledge.[13] Therefore while *smṛti* belongs to the realm of non-valid knowledge, *dhārāvāhika-jñāna* belongs to valid knowledge.

Doubt (Saṃśaya) :

Doubt is the cognition which rests on two alternatives because of the presence of a common attribute.[14] It is a mental cognition (*mānasa-jñāna*) devoid of accurate decision

---

12. *PB*, p. 520

13 *Loc. cit*

14. *Pauṣkara*, VII. 5

avadhāraṇa-varjita. According to U. Ś., doubt mediates between indeterminate knowledge and determinate knowledge. He suggestively offers two types of interpretation for the doubtful cognition. (i) Doubt is a judgment which apprehends two alternatives as a consequence of perceiving their common character. Here also, it is only the intelligence - energy defined by the *vṛtti* that actually doubts. Between a man and a stump, the cause of alternation is the perception of height etc, common to both. (ii) Doubtful cognition arises as a result of perceiving the specific characters (*asādhāraṇa-dharma*) of two things. The apprehension at once of the specific characters of a man and a stump gives rise to mental oscillation characteristic of doubtful cognition. According to the first interpretation, *saṃśaya* is considered to be valid knowledge; it perceives the common character and to that extent, *saṃśaya* is valid. According to the second interpretation, *saṃśaya* becomes non-valid knowledge ; in respect of one of the specific characters it is sure to be erroneous since both specific characters cannot be true.[15] *Saṃśaya* as a form of cognition alternates between valid and non-valid cognition.

Error (Viparyaya) :

According to the *Pauṣkara,* error is the cognition otherwise (*anyathā*), that is, the cognition of an object as other than what it really is, for example silver in nacre. Valid knowledge consists in perceiving a thing as *what* it *really* is (*tadrūpa*). Error occurs in perceiving it as *what* it is *not* (*atadrūpa*). It is caused by cognising those attributes in a thing which are not to be actually found in it. U. Ś. explains the theory of error taking side with Nyāya-Vaiśeṣika and critically examines the theories of error proposed by other systems.[16]

---

15. *PB.*, p. 517.

16. *Ibid.*, pp. 517-20.

U.Ś.'s Criticism of Akhyātivāda and Nyāya theory of Anyathākhyāti :

Those who advocate the theory of *akhyāti* hold that error occurs due to the want of discrimination between two cognitions. Error is a composite judgment formed of two judgments , of perception and memory , having their respective contents. According to them, non-apprehension of their difference (*bhedāgraha*) results in error. U. Ś. raises an objection by saying that non-apprehension does not urge one to activity. Apprehension, inclination and activity must function in unison. Non-apprehension (*bhedāgraha*) could not be the cause of activity or inclination. If activity consists in attaining the silver element, there must be the preceding desire to have the silver which in turn pre-supposes the apprehension of it as silver. Activity involves a positive apprehension as its prompting source. The Akhyātivādin replies to this objection by saying that a mere non-discrimination of the difference between memory and perception (*bhedāgraha*) could be enough in respect of an activity which is baulked of its fruit. He maintains that the need for a prior determinate cognition (*viśiṣṭa-jñāna*) as a condition for activity arises only in the case of purposeful activity.

Every compilation is characterised by three factors, (i) sense-relation to the predicate, *viśeṣaṇa-sannikarṣa*, (ii) sense-relation to the substance-predicate, *viśeṣaṇa - viśiṣyayoḥ sannikarṣa*, and (iii) non-apprehension of an absence of sense-relation between substance and predicate, *tadubhayayoḥ - asamsargāgrahaḥ*. The last factor ultimately leads to the determinate perception (*viśiṣṭa-jñāna*). Of these three factors, the first is considered to be more fundamental because, without it, the succeeding factors could not take place. U. Ś. vindicates his point by saying that there is an actual sense-relation involved in the illusion of silver; but it does not involve the ordinary sense-contact.

There is a sort of cognitive relation (*jñāna-lakṣaṇa-sannikarṣa*) between sense and silver. That relation is not only with the subject, nacre, but also with the predicate 'silverness'. Impression of a previous experience serves as the means of contact between sense and the silver — silver which is not actually in the visual field where nacre is present, but existing elsewhere previously seen. But on this ground, it cannot be said that the perception of this nature not involving *viśeṣaṇa - sannikarṣa* is non-different from inference. In the perception of silver in nacre, no inference is involved.

The Akhyātivādin explains the cause of exertion (*pravṛtti*) on the basis of *bhedāgraha*, and the Anyathākhyātivādin explains it based on *bhedāgraha* and *viśiṣṭa-jñāna*. The view of the latter seems to be characterised both by prolixity (*gaurava*) and parsimony (*lāghava*). The Akhyātivādin says that it is non-perception of silver as different from silver that prompts one to activity. The Anyathākhyātivādin maintains that it is the perception of silver in the nacre that does so. Of these two views, U. Ś. favours the view of the Anyathākhyātivādin and says its position may be accepted by the Siddhāntin also.[17]

The exact position of Śaiva Siddhānta with regard to the concept of error is this: The elements involved in an erroneous judgment are all facts of the phenomenal world. But while they are not related facts in the world, they are somehow perceived to be related In the perceived relation which is not factual, there is the role of the impression of former experience. In the case of nacre-silver-illusion the real silver (which is elsewhere) is implicitly perceived (*alaukika-pratyakṣa*).

The system of Śaiva Siddhānta admits a distinction between truth and error from the cognitive point itself. It

17. *Ibid*, pp. 517-19.

maintains that there is an objective basis for error which cannot be set aside. Even an erroneous judgment is basically a judgment which is neither *akhyāti* nor *sat-khyāti*. "Error is real error and cancellation of error is real cancellation in knowledge".

U. Ś.'s Criticism of Dvaita view of error :

U. Ś. next takes up the views of the followers of Madhva whose theory of error is known as *abhinava-anya-thākhyāti*. The system of Dvaita partially admits *anyathā-khyati* in holding the error as cognition which apprehends one thing as of the nature of another and contends that it is apprehension of *asat* as *sat* that constitutes error. The Dvaitins maintain that when the perceived silver (in nacre) is sublated on 'this is not silver' (*nedam rajatam*), it is implied that the content of error is non-existent (*asat*). According to Madhva, the nature of illusory object is to be determined in the light of the sublating cognition (*bādhaka-jñāna*) : "There is no silver here ; only the non-existent silver has appeared to exist." For Madhva, it is absolute unreality. U. Ś., in criticism of this view, asks : "How can *asat* appear, and how can it be perceived ?" The Dvaitin replies that to know that something is not *asat* is to know *asat*. But, here the question is not if *asat* can be known by implication, but if it can be perceived. In the nacre-silver - illusion, the silver is perceived. The Dvaitin maintains his view only on the theory of *nedam rajatam*. What about the affirmative erroneous conviction as to, *idam rajatam*? How can he account for the perceptual character of error, if the content of error is non-existent ? If the Dvaitin is to answer that the sense-organ affected in some way or other gives rise to the cognition of something which does not exist at all, then it does not seem plausible with his assertion of self-validity of knowledge. If error is attributed in this way—that is, the presence of some defect is the cause for the erroneous

cognition—then his theory is in line with the view of Śaiva Siddhānta.[18]

U. Ś.'s Criticism of Satkhyāti :

According to Rāmānuja's theory, the knowledge of silver in nacre is not false or unreal but is real. The silver element perceived in the nacre is real, it exists. The presence of silver element in nacre is to be understood based on the principle known as *pratinidhi-nyāya*, according to which two things similar to each other and capable of being mutually substitutive to each other and of being erroneously taken to be each other, are so by virtue of the actual representation of each in the other.[19] Rāmānuja maintains that it is reasonable to state, based on the process of quintuplication (*pañcīkaraṇa*), that in each element are present all other elements in some measure. In the case of nacre-silver illusion, there is a small proportion of real silver in nacre itself and it is the presence of this real silver that constitutes the object of error. How can it be considered as an error, if at all something real is perceived? According to the Satkhyātivādins error consists in mistaking nacre for silver focussing the attention only on the minor portion and excluding the predominant element in the nacre. Error, here means, the insignificant perception of silver in the nacre.

In criticism of this, U. Ś. says that if silver is actually present in the nacre, then there can be no cancellation of error. If 'this' (*idam*) actually possesses the silver, how can it be subsequently cancelled? The Satkhyātivādin replies that *na rajatam* does not mean total negation,

18. *Ibid.*, p. 519.

19. *Loc. cit.* pratinidhi-śrutyanusāreṇa sadṛśadravye sadṛśadravyāntarānusyūteḥ.

but means only a partial negation: *na rajatam* means *alpa - rajatam* (i.e. insignificant silver). For U.Ś., this explanation is not convincing, because the issue is not with verbal interpretation, but with actual perception. If all things are available everywhere negatively or positively, then how does 'this is not' (*na idam*) contradict 'this exists' (*idam asti*)? And even after the cancellation of the presence of silver, one goes in search of that silver-element present in the nacre![20]

U. Ś.'s Criticism of Ātmakhyāti:

The Yogācāra idealist, who advocates the theory of *ātmakhyāti*, maintains that error consists in thinking that the idea points to an external reality. In the nacre-silver illusion, the so-called silver is only an idea. But it is imagined to be something external. The silver is not non-existent but it exists only as an idea in the mind of the perceiver. Error consists not in mistaking to be something other but in misinterpreting the nature of existence. What is internal is erroneously externalised. The cognition that 'this is not silver' cancels only the externality of the idea and establishes the subjective nature of the idea.[21]

U. Ś questions the validity of the Yogācāra idealist's theory. How can there be consciousness or cognition without the object to be cognised? Śaiva Siddhānta does not accept the view that consciousness, being real, is also constitutive of reality: "the 'this' and the 'silver' - the 'that' and the 'what' of erroneous judgment must belong to the same order on parity with any valid judgment". According to Śaiva Siddhānta, error is also judgment. "Neither

20. *Ibid*, p. 520.

21. *Loc. cit.*

of the two elements of the judgment can be absolute in the rejection of the other."[22] Knowledge cannot be excluded from the content.

As against Advaitins, who hold the view that the object of error cannot be described as either existent or non-existent and it is indescribable (*anirvacanīya*), U. Ś. argues that the notion of 'neither real nor unreal' involves a simultaneous negation of being and non-being and is therefore contradictory. He says that the substrate (shell or rope) and the superimposed (silver or snake) can be cognised independently as they really are.[23]

22. *Loc. cit.*

23. *Loc. cit.*

பௌஷ்கராகமத்தில் ப்ரமாணம்

S. P. ஸபாரத்தினம்

(கட்டுரைச் சுருக்கம்)

பௌஷ்கராகமம், பாரமேச்வராகமத்தின் உபாகமமாகும். இந்நூலிலுள்ள ஆழ்ந்த சைவசித்தாந்தக் கருத்துக்களை உமாபதி சிவம தன் பௌஷ்கராகமபாஷ்யத்தில் விளக்கமாகவும் தெளிவாகவும் கூறியுள்ளார். ப்ரமாணங்களைப் பற்றி உமாபதி சிவத்தால் கொடுக்கப்பட்டுள்ள விளக்கங்கள் குறித்து இக்கட்டுரை அமைந்துள்ளது.

ப்ரமாணங்களின் அவசியத்தைப் பற்றிய கேள்விக்கு, கடவுளைப் பற்றி ஏற்படும் ஐயங்களுக்கும், பலவித கோட்பாடு களை ஆய்வு செய்து உண்மையை அறிவதற்கும், ப்ரமாணங்கள் அவசியமானவை என்று உமாபதி குறிப்பிடுகிருர்.

ந்யாய மதத்தின் ப்ரமாண இலக்கணத்தை மறுத்து அறிவுக்கு மூலகாரணமாக விளங்குவதே ப்ரமாணமாகும் என்று ப்ரமாணத்தை நிர்ணயிக்கிருர்.

பௌஷ்கராகமத்தில் நான்கு ப்ரமாணங்களே ஒப்புக் கொள்ளப்படுகின்றன. அவை—ப்ரத்யக்ஷம், அனுமானம், திருமறைநூல், அடிக்கோள் (முற்படுதல்) என்பவை. ஆனல் சைவாகம வழிமுறைகள்படி முதல் மூன்று ப்ரமாணங்களே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. நான்காவதாக கூறப்பட்டுள்ள 'அர்த்தாபத்தி' எனும் ப்ரமாணம் 'அனுமான'த்திலேயே சேர்த்துக் கொள்ளப்படுவதால் இவ்விஷயத்தில் கருத்து வேற்றுமை இல்லையென்பதை உமாபதி சுட்டிக்காட்டுகிருர். மேலும் இம்மூன்று ப்ரமாணங்களும் இறுதியில் சித்சக்தியில் அமைந்துள்ளதால் 'ஐயம்' (ஸந்தேஹம்), 'தவருன கருத்து' (ப்ரமை), 'நினைவு' ஆகியவையில்லாத சித்சக்தியே அடிப்படை ப்ரமாணமாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது. 'ஐயம்' என்பது இரு பொருள்களுக்கிடையே உள்ள பொது குணத்தினல் இரண்டின் மேலும் ஏற்படும் அறிவு. 'தவருன கருத்து' என்பது ஒரு பொருளை மற்ருென்ருக காண்பதாகும். கடந்த காலத்தில் ஏற்பட்ட எண்ணப் படிவுகளால் ஏற்படும் அறிவே 'நினைவு' எனப்படும்.

இவ்விஷயத்தில் உமாபதி ந்யாய-வைசேஷிக மதத்தின் 'அந்யதாக்யாதி' கருத்தைப் பின்பற்றி மற்ற மதங்களின் கருத்துக்களை ஆராய்ந்து அவற்றை நிராகரிக்கிறார். இதன்படி 'அக்யாதி' (ப்ராபாகரமீமாம்ஸா மதம்), 'அபிநவ அந்யதாக்யாதி' (த்வைத மதம்), ஸத்க்யாதி (விஸிஷ்டாத்வைத மதம்), ஆத்மக்யாதி (யோகாசார பௌத்த மதம்), அநிர்வசனக்யாதி, (அத்வைத மதம்) முதலிய கருத்துக்களை மறுக்கிறார்.

இவ்வாறு பௌஷ்கராகமத்தின் உரையில் உமாபதி சிவத்தின் அனைத்து சாத்திர ஞானத்தையும் அவற்றை தெளிவாக விளக்கும் தன்மையையும், ப்ரமாண அடிப்படையில் மற்ற மதக்கோட்பாடுகளை நிராகரிக்கும் திறனையும் சைவ-சித்தாந்த அடிப்படைக் கொள்கைகளை ஸ்தாபிக்கும் சீரிய முறையையும் காண்கிறோம்.

பௌஷ்கர பாஷ்ய ஸங்கிரஹம்

K. பாலஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள்

'புஷ்கரம்' என்ருல் தாமரை மலர். அதில் தேன் இருப்பது போல், அதிக இனிமையான சைவாகம ஸித்தாந்த முக்த்யு-பாயத்தை புஷ்கலமாகவும், பூர்ணமாகவும் விளக்குவது பௌஷ்கர ஸம்ஹிதா.

'பாரமேச்வரம்' என்பது இருபத்தி எட்டு சைவாகமங்களில் முக்யமானது. அதன் ஏழு உபாகமங்களுள் ஒன்று பௌஷ்-கராகமம். உமாபதி சிவாசார்யார் இதற்கு உரை எழுதியுள்ளார். இவ்வுரை சிதம்பரத்தில் 1925-ல் கிரந்தலிபியில் பதிப்பிக்கப்பட்டது. இவ்வாகமத்தின் ஞானபாதம் மட்டுமே இன்று எஞ்சியுள்ளது. இதில் பதி (76 ஸூத்ரங்கள்), பிந்து (61), மாயா (64), பசு (170), பாசம் (93), பும்ஸ்த்வம் (355) என்கிற ஆறு மேய பதார்த்தங்கள் முதல் ஆறு படலங்களிலும், ஏழாவது படலத்தில் (88) நான்கு ப்ரமாணங்களும், எட்டாவது படலத்தில் (44) தந்த்ராவதாரமும் (மொத்தம் 951 ஸூத்ரங்கள்) விளக்கப்படுகின்றன. உமாபதி சிவம் தமது உரையில் ஆங்காங்கு வேதவ்யாஸரின் ஸூத்ரங்களின், ஸ்ரீகண்ட, சாங்கர பாஷ்யங்-களின்படி ந்யாயங்களை ஆராய்ந்து உபநிஷத், ஆகமம், புராணம் முதலிய ப்ரமாண வசனங்களைக் கூறி சைவ ஸித்தாந்தத்தை ஸ்தாபிக்கிருர். மேலும் சைவாகம ஸித்தாந்தப்படி பந்தம், மோக்ஷம் முதலியவற்றைக் காரணங்களுடன் விளக்கிக் கூறுகிருர்.

ப்ரமாண படலத்தில் க்யாதியை விளக்கும்போது, அந்யதா-க்யாதியை ஸ்தாபிப்பதும், அஸத்க்யாதி, ஸத்க்யாதி, ஆத்ம-க்யாதி, அநிர்வசனீயம் முதலிய க்யாதிகளைக் கண்டிப்பதும் சிவாசார்யரின் தர்க சாஸ்திர பாண்டித்யத்தைத் தெரிவிக்கிறது. நிரபேக்ஷம், இந்திரிய ஸாபேக்ஷம், அந்தஹ்கரண ஸாபேக்ஷம் என்று ப்ரத்யக்ஷத்தை மூன்று விதமாகக் கூறுகிருர். இவரது அனுமான நிருபணம் பல விஷயங்களை அடக்கியுள்ளது. சப்த ப்ரமாணத்தில் ஆப்த லக்ஷணங்கள் கூறப்படுகின்றன. அவைதிகதர்சனங்களும் அதிகாரி தாரதம்யத்தால் ஆதரிக்கப்-படவேண்டும். சைவாகம ஸித்தாந்தம் இதர சாஸ்திரங்களுக்கு விருத்தமல்ல என்பதை ஸ்தாபிக்கிருர். "அர்த்தாபத்தி ப்ரமாணம் அனுமானத்தில் அடங்காது, தனிப்ரமாணமாக நான்காவது"

என்ற மீமாம்ஸக ஸித்தாந்தத்தை ஸ்தாபிப்பது ஜைமினீயர்களை ஆச்சர்யப்படச் செய்கிறது. எட்டாவது படலத்தில் ''பிந்துபாதானக வர்ணங்கள் அநித்யம், வர்ணங்கள் அதிஷ்டான தேவதையோடு கூடியவை, ஈசானுதி மந்த்ரவத்தான ஸாகல்யஞன (ஸதாசிவ) போகசிவனே 28 சிவாகமாதிகளின் கர்த்தாவாக முடியும், ஸ்போடவாதத்தை நிராகரித்தல் என்ற ஸித்தாந்தம்'' முதலிய அனைத்தும் வ்யாகரணுதி சாஸ்த்ர தத்வக்ஞர் சிவாசார்யார் என்பதை நிரூபிக்கின்றன.

உமாபதி சிவத்தின் பஹுமுகமான பாண்டித்யத்தையும் சைவ விசேஷத்தையும் இனி அவர் எழுதிய பாஷ்யத்தின் சில பகுதிகளையும் சற்று விவரமாகப் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

முதல் படலத்தில் 56 ஸூத்ரங்கள், ஞானம் பெறக் கூடிய அதிகாரிகளைக் கூறுகின்றன. இந்த ஸந்தர்ப்பத்தில் ஆகமமும் வேதத்தைப் போல ப்ரமாணம் தான் என்று வெகு அழகாகக் காட்டுகிருர். முதலில் கீழேயுள்ள பூர்வ பக்ஷத்தை சாஸ்த்ர ரீதியில் கூறுகிருர் :—

1 புருஷனுலாக்கப்படாத வேதம் நித்யமாய் 'ப்ரமை' (ப்ர.) முதலிய தோஷமற்றதால் சாசுவதமான மோக்ஷத்துக்கு காரணமாகிறது. ஆனுல், ஈசுவரனுன ஒரு புருஷனுல் செய்யப்பட்டது என்பதாலும் புருஷனுக்குரிய ப்ராந்தி மோஹாதிகளுக்குட்பட்டதாலும் ஆகமங்கள் நித்யமான மோக்ஷஸாதன ப்ரமாணமாவதில்லை.

2. தர்மங்கள் சப்த மூலமானதாலும், சப்தங்கள் எதையும் அபேக்ஷிக்காததாலும் அலௌகிகமான ச்ரேயஸ் ஸாதனமான தர்ம - ப்ரம்மங்கள் வேதமொன்றினுலேயே அறியப்படக் கூடியது என்று, முன் தந்திரத்தில் சொல்லியதாலும் ஆகமங்கள் தர்மப்ரம்ஹ-ஸாதன ப்ரமாணமாக முடியாது.

3. மனு முதலிய புருஷர்களால் செய்யப்பட்ட ஸ்ம்ருதி-கல்ப ஸூத்ரங்களைப் போல் வேதத்தை மூலமாகக் கொண்டதனுல் ப்ரமாணமாக ஏற்பது போல் ஆகமங்களுக்கும் ப்ராமாண்யம் சொல்லலாமெனில், ஆகமங்களை வேத மூலப்ரமாணகமாய் ஏற்றுக் கொள்ளாததினுலும் ஆகமம் அப்ரமாணம்.

4. ஆகமங்கள் விசிஷ்ட புருஷன் செய்ததால் ப்ரமாண-மெனில் விசிஷ்ட புருஷன் சொன்னதால் ஆகமங்களுக்குப்

ப்ராமாண்யமும், ஆகமங்கள் சொன்னதால் ஈசுவரன் விசிஷ்ட புருஷன் என்றும் ஒன்றுக்கொன்று முரண்பாடு (அன்யோன்யாச்ரய தோஷம்) வரும். அதனுல் ஆகமம் தர்ம ப்ரம்ஹ ஸாதனத்தில் ப்ரமாணமாவதில்லை.

5. ஆகமங்களின்படி தர்மார்த்தங்களை அனுஷ்டித்தவர்களாகிய சாண்டில்யாதி முனிவர்களுக்கு சாபமேற்பட்டதாக புராணங்கள் கூறுகின்றன. சாபஹேதுவான ஆகமங்கள் எப்படிப் ப்ரமாணமாக முடியும்?

6. ஜீவன வ்ருத்திக்காக ஏற்பட்டதென ஸித்தமானதால் ஆகமம் அப்ரமாணம்.

7. பாத்ம புராணுதிகளிலும் வாஸிஷ்டம், லிங்கம் முதலியவைகளிலும் ஆகமங்களுக்கு மோஹகத்வம் சொல்லப்பட்டதாலும் ஆகமம் அப்ரமாணம்.

ஆகவே அலௌகிக (வைதிக) ச்ரேயஸ் ஸாதனமான தர்ம ப்ரம்ம ஞானங்களுக்கு ஆகமம் ப்ரமாணமாகாது. இந்த ஆக்ஷேபங்களுக்குரிய ஸமாதானத்தை உமாபதி பின்வருமாறு உரைக்கிருர் :-

'வேதம் அபௌருஷேயம்' என்று கூறும் உங்களது மதத்தின்படி வேதம் நித்யமல்ல, அநித்யமே. ஏனெனில் வேதம் அழிவில்லாதது என்பதற்கு ப்ரமாணம் கிடையாது. ஆகவே வேதமும் அநித்யமே. இதையே वेदस्यापि नित्यत्वे प्रमाणाभावात् என்றும், மேலும் சப்தங்களுக்கு தோற்றம், மறைவு உண்டென்பதால் சப்தங்களையே உருவமாகக் கொண்டுள்ள வேதம் அநித்யமே என்றும் நிர்ணயம் செய்கிருர். — प्रत्युत उत्पत्तिविनाशादिप्रतीतेः अनित्य एव. மேலும் 'ப்ரத்யபிக்ஞா' முறையில் எரிந்து கொண்டிருக்கும் தீபத்தில் 'அதுவே இந்தச் சுடர் ஒளி' என்று முதலில் கண்ட சுடரொளிக்கும் பின்காணும் ஒளிக்கும் ஒப்புமையைக் காண்பது போல் வர்ணங்கள் என்று கூறப்படும் எழுத்துக்கள் நித்யம். ஆகவே அவ்வெழுத்துக்களைக் கொண்ட வேதமும் நித்யம் தான் என்று கூற முடியாது. ஏனெனில் வேதங்கள் வெறும் எழுத்துக்கள் மட்டுமல்ல. எழுத்துக்களின் கோர்வை (முன்பின் இணைப்பு) காரணமாக சிறப்புடைய வேதம் கோர்வையின் நிலையற்ற தன்மையாலும் அநித்யமே.

அவ்வாறே ஓடிக்கொண்டிருக்கும் நீரோட்டத்தை நித்ய ஜீவநதி என்பது போலும் மந்த்ரங்களின் தொடர்ச்சியால் மட்டும் நித்யம் என்று சொல்வதற்கில்லை. ஏனெனில் வேதத்தில் ஸர்கம் (தொடக்கம்), ப்ரளயம் (முடிவு) என்றிரண்டும் ஸாதிக்கப்படுவதால் தொடர்ச்சியுள்ள வேதத்திற்கு 'நித்யத்வம்' கூறமுடியாது.

ஆனல் சிவனல் செய்யப்பட்டதென்பதாலே என்றும் ப்ரமாணமாகும். பரம ஆப்தனை சிவன் செய்ததாலே வேதம் ப்ரமாணமாகுமெனில் சிவனல் செய்யப்பட்ட ஆகமங்களும் ப்ரமாணமேயாகும்.

तस्मात् परमाप्तशिवप्रणीतत्वेनैव वेदानां प्रामाण्यं स्वीकर्तव्यम् । तन्न्यायेन आगमानां सर्वेषामपि प्रामाण्यम् ।

மேலும் புருஷனல் செய்யப்பட்டதென்ற வகையில் உலகாயதம் முதலான நாத்திக மதங்களுக்கும் ப்ராமாண்யமேற்படுமே என்றால் தவறல்ல. ஏனெனில் அவரவர்களுக்குரிய அறிவாற்றலை முன்னிட்டே செய்யப்பட்டதென்பதால் அதிகாரிகளின் தகுதியை (ஆதரிப்போரின் தகுதியை) முன்னிட்டு ப்ரமாணமேயாகும்.

வேதங்களைப்போல் ஆகமங்களுக்கு ஆன்ருேர்களால் ஆதரிக்கப்படும் தன்மை கிடைக்கப் பெறவில்லை என்றும் கூற முடியாது. ஏனெனில் வேதத்திற்கு அவ்வகையில் ஆன்ருேராதரவு ஏற்பட்டதால் சிவபூஜை முதலியவைகளுக்கு ப்ராமாண்யம். மேலும் இச்சிவபூஜைகளைச் செய்யும் முறைகளை இப்படித்தான் செய்யவேண்டும் என வேத வாக்யங்களின் அடிப்படையில் ஆகமங்கள் தெரிவிப்பதால், கல்பஸூத்ரங்கள் போலவே செய்முறை விளக்கங்களை மட்டும் உரைப்பதால் (விதிவாக்யைகவாக்யதயா) அவைகளும் (ஆகமங்களும்) ப்ரமாணமேயாம்.

ஆனல் மேற்கூறியவகையில் ஆன்ருேர்களால் கடைபிடிக்கப்படும் பக்ஷத்தில் கல்பஸூத்ராதிகளைப்போல் ஆகமங்களில் சொல்லப்படும் சிவதீக்ஷை முதலியவைகள் ஆன்ருேர்களால் அனுஷ்டிக்கப்படவில்லையே என்றும் சொல்ல முடியாது. ஏனெனில் ச்வேதர், உபமன்யு, அகஸ்த்யர் முதலியவர்களிட-

மிருந்து க்ருஷ்ணர், ராமர் முதலியவர்கள் தீக்ஷை பெற்றுக்கொண்டதற்கு ஹரிவம்சம், மகாபாரதம், பாத்மபுராணம் முதலியவற்றில் காணப்படும் வசனங்களே சான்ருக விளங்குவதால் தீக்ஷை போன்றவைகளின் ப்ராமாண்யம் பொருத்தமே. இருப்பினும் தீக்ஷையானது பெருவாரியான ஆதரவுடன் திகழவில்லையே என்ற கேள்விக்கு இவ்வகையில் பதிலுரைக்கப்படுகிறது: ஸன்யாஸாச்ரமத்தில் எவ்வாறு பரமஹம்ஸ ஸன்யாஸ தர்மமானது மிக மிக அரிய முறையில் ஏற்றுக் கொள்ளப்படுகிறதோ அவ்வாறு தீக்ஷையும் மிகவும் அரிதாகக் கடைப்பிடிக்கப்படுகிறது.

ஆனல் வாமாசாரத்தைப் போதிக்கும் ஆகமங்களுக்கு ப்ரமாணம் உண்டா எனில் அவைகளில் சொல்லப்பட்ட சுராபானம் போன்றவைகளுக்கு வேதத்தில் தடைவிதிக்கப் பட்டிருப்பதாலும், வேதத்திற்குப் புறம்பானதாலும் வாமாதி க்ரியைகள் ப்ரமாணமாகாது.

'இவ்வகையில் வேத - ஆகமங்கள் ப்ரமாணம் என்று நிச்சயிக்கப்பட்டபின் ஒன்றுக்கு மேன்மையும், மற்ருென்றிற்குத் தாழ்மையென்ருல் ஒன்றுக்கொன்று முரண்படுமே' என்கிற பூர்வபக்ஷத்திற்கு உமாபதி கூறுவதாவது : வேத-ஆகமங்களின் கருத்தை எடுத்துரைப்பவர்களின் மேன்மை, தாழ்மையினுலேயே அவற்றின் (வேத-ஆகமங்களின்) முரண்பாடோ, கருத்தொற்றுமையோ, ப்ரமாண-அப்ரமாணமோ நிவர்த்திக்கப்படும்.

வேத-சைவாகமங்களில் குழப்பம் முதலியன ஏற்படாதாவெனில், ஏற்படாது. இங்கு உமாபதி வ்யாஸ ஸூத்ரத்தை (பத்யதிகரணம் II. 2. 7) மேற்கோள் காட்டி தமது கருத்தை நிலைநிறுத்துகிருர். வேதத்தில் முன்னுக்குப்பின் முரண் ஏற்படுமிடத்தில் அவ்வாருன சொற்களுக்குப் புறம்பில்லாத வகையில் பொருள் அமைத்து அம்முரண்பாட்டை நீக்குவதுபோல் ஆகமங்களிலும் வேதத்திற்குப் புறம்பாய்த் தோன்றுமிடத்து அதை நிவர்த்திக்க கருத்தினை அமைப்பது பொருத்தமே. இம் முறையில் வேதஆகமங்கள் ஒன்றையொன்று பாதிப்பதில்லை. எனினும் வாமாசார ஆகமங்கள் வேதங்களுக்கு முரணுக அவற்றை நிவர்த்திக்க முடியாதபடி அமைந்திருப்பதால் வாமாசாரக்ரியைகளையுடைய ஆகமங்களும், அக்கிரியைகளையுடைய

மாஹேச்வர பிரிவைச்[1] சேர்ந்தவர்களின் வாக்யங்களும் நிரா-கரிக்கப்படுகின்றன என்று உமாபதி கருதுகிறார். முரண்பாடில்-லாத சைவஸித்தாந்தக் கொள்கைகளை ப்ராமணங்களாக ஏற்றுக் கொள்வதில் எவ்விதத் தடையுமில்லை என்றும் கூறுகிறார்.

ஆகவேதான் சிவார்க்கமணிதீபிகையின் (p.112)[2] கர்த்தாவான அப்பய்ய தீக்ஷிதரும் தமது உரையில் புராண வசனங்களை மேற்-கோளாகக் காட்டி வாமாசாரமுறைகளைக் கொண்ட பிரிவுதான் தள்ளத்தக்கது என்று குறிப்பிடுகிறார். - मोहशास्त्रत्वादिप्रसिद्धिः वामपाशुपतादिविषयेति भावः । तथा हि कूर्मपुराण एव - "निर्मितं हि मया पूर्वं व्रतं पाशुपतं शुभम् । गुह्याद्गुह्यतमं सूक्ष्मं वेदसारं विमुक्तये ॥" इत्यारभ्य "एष पाशुपतो योगः सेवनीयो मुमुक्षुभिः । भस्मच्छन्नैर्हि सततं निष्कामैरिति हि श्रुतिः ॥" इत्यन्तेन **प्रमाणभूतं वैदिकं पाशुपतमुक्त्वा** 'वामं पाशुपतं सोमं लागुडञ्चैव भैरवम् । न सेव्यमेतत्कथितं वेदबाह्यं तथेतर' दिति मोहशास्त्ररूपमवैदिकं पाशुपतमन्यत्संकीर्त्तितम् । இவ்விதம் வாமாசார முறையைக் கடைபிடிக்கும் சைவப்பிரிவே நிராகரிக்கப்படுகிறதென்றும், இன்னொரு பிரிவு வேதத்திற்குச் சமமாகக் கருதப்படுகிற-தென்றும் குறிப்பிடுகிறார்— वयं तु शिवागमयोर्भेदं न पश्यामः । वेदोऽपि शिवागम इति व्यवहारो युक्तः तस्य कर्तृकत्वात् । என்று ஸ்ரீகண்டாசார்யரின் (p. 111) வசனத்தை ப்ரமாணமாகக் காட்டுகிறார். ஆனால் வேதத்திற்கும் ஆகமத்திற்குமுள்ள ஒரு

1. மாஹேச்வர பிரிவைச் சேர்ந்தவர்கள்—சைவர், பாசுபதர், காருணிகஸித்தாந்திகள், காபாலிகர் என்று நான்கு வகையாக பிரிக்கப்படுகிறார்கள். இவர்கள் **கார்யம், காரணம், யோகம், விதி,** துக்காந்தம் ஆகிய ஐந்து பதார்த்தங்களைக் கொண்டவர்கள். இதில் கார்யமென்பது பிரதான கார்யமான **'மஹத்'** முதலானவைகள்; காரணமாவது பிரதான காரணம், ஈச்வரன்; **யோகம்** ஓங்காரம் முதலான த்யான தாரணாதிகள்; **விதி** மூன்று காலங்களிலும் (காலை, மதியம், மாலை) ஸ்னானஞ் செய்தல் முதலானவை.

2. *Brahmasūtra Bhāṣya* of Śrikaṇṭhācārya with the comm. *Śivārkamaṇi Dīpikā* of Appayya Dikṣita, Vol. II., ed., Pt. Halasyanatha Sastri (N.S. Press, Bombay, 1918).

சிறிய வேற்றுமை என்னவென்றால்—வேதம் மூவர்ணத்தாருக்கும் உரியது; ஆகமம் அனைத்து வகுப்பிற்குமுரியது. மேலும் சைவாகமங்கள் சக்தி நிபாதத்தினால்/தீக்ஷையினால் அருளப் பெற்றவர்களது விஷயம். எனவே தான் இப்படலத்தில் (பதி படலத்தில்) 6-ம் ஸூத்ரத்திற்கான உரையில் உமாபதி ‘द्विजोत्तमाः’ என்ற சொல்லுக்கு கூறும் விளக்கம், ‘‘இங்கு உபநயன ஸம்ஸ்காரத்தினால் மேன்மையடைந்த முனிவர்கள் மட்டும் குறிப்பிடப்படவில்லை, அதற்கும் மேலாக ஸமயம், நிர்வாணம் வரை தீக்ஷை பெற்றவர்களும் குறிப்பிடப்படுகிறார்கள்’’ என்பதாகும்.

எனவே இவ்வகையில் வேத-ஆகமம் இரண்டும் ஸர்வோத்தமமான ப்ரமாணங்களென்று கூறியதால் பௌஷ்கராகமத்தின் ப்ராமாண்யமும் நிரூபிக்கப்படுகிறது.

பிறகு இப்படலத்தில் (பதிபடலத்தில்) 6-வது ஸூத்ரத்தில், अधिकारी विषयः सम्बन्धश्च प्रयोजनम् । शास्त्रारम्भफलं प्राहुरनुबन्धचतुष्टयम् ।। என்று கூறியுள்ளதுபோல், படிப்பவர், (தகுதியுடைவர்), கூறப்படும் விஷயம், இவற்றின் தொடர்பு, பயன் மற்றும் நூல் துவக்க நோக்கமாகிய अनुबन्धचतुष्टयமென்பது முறையாக விளக்கப்பட்டு இப்பௌஷ்கராகமத்தின் துவக்கம், பொருத்தமே என்று கூறும் வகையில் நிரூபிக்கப்படுகிறது.

ज्ञायन्ते येन पत्याद्याः पदार्थाः षड् द्विजोत्तमाः ।

तज्ज्ञानपादमित्युक्तं साधकं देशिकात्मनाम् ।।

பதி முதலான (பதி, பிந்து, மாயா, பசு, பாசம், பும்ஸ்த்வம்) ஆறுபதார்த்தங்கள் எதனால் அறியப்படுகின்றனவோ அதற்கு ஞானபாதம் என்று பெயர். முன்னர் குறிப்பிட்டபடி ‘த்விஜோத்தமன்’ எனும் சொல் தீக்ஷை பெற்றவர்களையும் குறிக்கும் என்று கூறுவதன் மூலம் சைவ ஆகமங்களைப் படிக்கத் தகுந்தவர்கள் எவரென்று உமாபதியால் ஸூசிக்கப்படுகிறது. அடுத்து கூறப்படும் விஷயமாவது பதி முதலான ஆறு பதார்த்தங்கள். இந்த பதி முதலான ஆறு பதார்த்தங்களுக்கும், அதை விளக்கும் கிரந்தத்திற்கும் உள்ள தொடர்பானது நிலை நாட்டப்படுவதற்கும், நிலை நாட்டுவதற்கும் உள்ளது போலாகும் (प्रतिपाद्य - प्रतिपादकसम्बन्धः). மேலும் இவ்வாறு பதார்த்தங்-

களின் தொடர்பாகக் கிடைக்கப்பெறும் ஞானத்திற்கும் அந்த ஞானத்தைக் கொண்டுள்ள கிரந்தத்திற்கும் விஷய விஷயிபாவ ஸம்பந்தம் உள்ளது. ஞானத்திற்கும், மோக்ஷத்திற்கும் ஸாத்ய ஸாதனபாவ ஸம்பந்தமாகும். இவ்விதம் சாஸ்திரம் பயிலுவதற்குத் தேவையான நான்கு அடிப்படைத்துணைகள் (अनुबन्धचतुष्टयम्) விளக்கப்பட்டதால் சாஸ்திரம் துவங்கியது பொருத்தமே.

28 விதமான சைவாகமங்களில் பரஞானம் அபரஞானமென்று இரண்டு வகையான ஞானம். சிவனுடன் கூடிய சித்சக்தியான பரஞானமே முக்திக்கு ஸாதனமாகும். ஆகமங்களிலிருந்து கிடைக்கப்பெறும் ஞானமானது அபரஞானமாகும். இது மறை-முகமாக முக்தி ஸாதனமாகும். இதற்கு முண்டகோபநிஷத்தின் வசனம் (I. 1.4) 'द्वे विद्ये वेदितव्ये परा चैवापरा चेति' ப்ரமாணமாகச் சொல்லப்படுகிறது.

சாங்கர மதத்தில் ப்ரஹ்ம ஸ்வரூபலக்ஷணமான 'सच्चिदानन्दं ब्रह्म' என்பது போலவும், 'जन्मस्थिति-लय' இவற்றிற்கு காரண-மாயிருப்பதாகக் கூறப்படும் தடஸ்த லக்ஷணம் போலவும் பாஷ்யகாரர் தமது 9-ம் ஸூத்ரபாஷ்யத்தில் ப்ரஹ்மஸ்வரூப லக்ஷணத்தை இவ்வாறு கூறுகிறார்:

स्वभावात् ज्ञानक्रियास्वरूपादच्युतः (ஞானக்ரியா ஸ்வரூபத்தை விட்டு விலகாமை)

இம்முறையில் பாஷ்யகாரரான உமாபதியின் பொருட்-கூறும் திறனை 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்ப்பது' என்ற ஸ்தாலீபுலாகந்யாய முறையில் ஒவ்வொரு படலத்தின் சிறப்பினையும் சுருக்கமாகக் கவனிப்போம்.

முதலில் சைவாகமத்தில் கூறப்படும் ஆறு பதார்த்தங்களை 8-வது ஸூத்ரத்தில் குறிப்பிடுகிறார்.

पतिः कुण्डलिनी माया पशुः पाशश्च कारकः। என்று ஆறு பதார்த்தங்களை வரிசைப் படுத்துகிறார்.[3] இவ்வரிசை-

3. पौष्करे मतङ्गे षट्, सप्त स्वायंभुवे तथा। பௌஷ்கரத்திலும் மதங்கத்திலும் பதார்த்தங்களின் எண்ணிக்கை ஆறு என்றும் ஸ்வாயம்புவ ஆகமத்தில் ஏழாகவும் குறிப்பிடுவது மரபு.

யில் பதி-பசு-பாசம் என்ற ப்ரதானமான மூன்று பதார்த்தங்களுடன் குண்டலினீ (பிந்து) சக்தி, மாயா, மற்றும் காரகன் என்ற மூன்றும் இணைந்து ஆறு பதார்த்தங்களாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது. நித்யமானதும், தொடக்கம் மற்றும் முடிவுமில்லாத இந்த குண்டலினீ சக்தியே 'பிந்து சக்தி' என்று அழைக்கப்படுகிறது. இச்சக்தியே சுத்தாத்வாவிலுள்ள சிவதத்வம் முதல் வித்யாதத்வம் வரையில் உள்ள புவனங்களுக்கு லயாதி வ்யாபாரத்தை (சிவத்துடன் ஒன்றுபடும் தன்மை) உபாதானமாய் (முதற்காரணமாக) நின்று செய்வித்தலால், இச்சக்தி அசுத்தமான மாயையிலிருந்து வேறுபட்டதாக லக்ஷணம் சொல்கிறார் சிவாச்சாரியார் — "शुद्धाध्वनि लयादिव्यापारविशेषाश्रयत्व बिन्दुत्वमिति". இதன் லக்ஷணத்தில் 'விசேஷம்' என்ற சொல்லினை அமைத்ததால் பசுலக்ஷணத்தில் பரவாமலிருக்கவும் 'சுத்தாத்வா' என்ற சொல்லினுல் மாயையில் பரவாமலிருக்கவும் வழி செய்யப்படுகிறது.

மூன்ருவது பதார்த்தமான மாயைக்கு லக்ஷணம் கூறுகையில் (ஸூ. 11-பாஷ்யம்), कर्माश्रयत्वे सति शरीरेन्द्रियाद्युत्पादकत्वं என்று குறிப்பிடுகிருர். இந்த லக்ஷணத்தில் 'கர்மாச்ரயத்வம' (கர்மாவைச் சார்ந்திருக்கும் தன்மை) என்றதால் பிந்து சக்தியிலிருந்து வேறுபடுகிறது. மாயைதான் கர்மாவையாச்ரயித்து நிற்கும். சரீரேந்த்ரியாத்யுத்பாதகத்வம் (உடல் மற்றும் புலன்களை உண்டாக்கும் தன்மை) என்றதால் புத்தி என்பது கர்மாவையாச்ரயித்து வந்தாலும் அது சரீர இந்த்ரியாதிகளை உண்டு பண்ணுது. ஆகவே இந்த லக்ஷணம் புத்தியை வேறுபடுத்திக் காட்டுகிறது. இவ்விதம் தார்க்கிக முறையில் பதார்த்தங்களின் லக்ஷணங்களை உரைக்கும் உமாபதியின் திறமை பாராட்டத்தக்கதே.

பிறகு நான்காவது பதார்த்தமான பசுவினது லக்ஷணம் கூறுகிருர் :

पशुः पशुत्वसंरुद्धदृक्क्रियाप्रसरस्सदा என்ற 11-வது ஸூத்ரத்தின் உரையில் इच्छा (விருப்பம்), ज्ञानं (அறிவு), क्रिया (செயல்) என்ற சக்தித்ரயமுள்ள ஆணவமலமே 'பசுத்வம்' என்றும் ஆதலால் ஆணவமலம் கொண்டதே 'பசு' என்றும் குறிப்பிடுகிருர். மேலும் 'பசு'வானது கட்டுப்படும் தன்மையால் 'ஸகல

பசு' என்றும் 'அகல பசு'வென்றும் பிரிக்கப்பட்டு த்ரிமல, த்விமல, ஏகமலவென்றும் குறிப்பிடப்படுகிறது. 'அகலபசு' என்று குறிப்பிடுகையில் 'ப்ரளயாகல' மற்றும் 'விஞ்ஞானகல பசு'வும் குறிப்பிடப்படுகின்றனவென்று உமாபதி சிவாசார்யார் தமது உரையில் விளக்குகிறார். இவ்விதம் ஸகல, ப்ரளயாகல, விஞ்ஞானகல என்ற முறையில் மூவகை பசுக்கள் ஸூசிக்கப்படுகின்றன. இங்கு உமாபதி தத்வப்ரகாச க்ரந்தத்தை (I.8-9) ப்ரமாணமாகக் காட்டுகிறார்:

मलयुक्तस्तत्राद्यो मलकर्मयुतो द्वितीयस्स्यात् ॥
मलमायाकर्मयुतस्सकलः * * ।

ஐந்தாவதான பாசபதார்த்தத்தின் லக்ஷணமாக, कलादिक्षितिपर्यन्ता स्थिता तात्त्विकसंहतिः । என்னும் 13-வது ஸூத்ர வாயிலாக கலா தத்வம் முதல் ப்ருத்வீ தத்வம் வரையிலுள்ள தத்வஸமூகமே பாசமென்பது கூறப்படுகிறது.

भुक्तिमुक्त्यभिव्यक्तिफला क्रिया दीक्षाह्वया परा என்கிற 14-வது ஸூத்ரபாஷ்யத்தில் 'காரக'னென்னும் ஆறாவது பதார்த்தம் விளக்கப்படுகிறது. இங்கு 'புக்தி' என்பது புவனங்களில் அனுபவிக்கப்படும் போகமும், 'முக்தி'யென்பது ஆணவம் முதலான மும்மலத்தினின்று விடுதலையும், 'வ்யக்தி'யென்பது சிவத்வாபிவ்யக்தியாகிய சிவதாதாத்ம்யமும் (சிவனுடன் ஒன்றிடும் தன்மை) ஆகிய இம்மூன்று குணங்களைப் பலனாகக் (फल) கொண்டதுவே 'காரக'மென்பது. இதுவே தீக்ஷையெனும் க்ரியையாம். இங்கு 'பரா' என்பதன் மூலம் இந்த சித்சக்தியானது மோக்ஷத்திற்கு மிகவும் உகந்தது என்கிறார் உமாபதி சிவம்.

பதி லக்ஷணம் கூறும் 16-வது ஸூத்ரம்:

लयभोगाधिकाराणां न भेदो वास्तवश्शिवे ।
किन्तु बिन्दोरणूनाञ्च वास्तवा एव ते मताः ॥

என்று குறிப்பிடுவதால் லயம் போகாதிகாரம் என்பதில் ஒன்றுக்கொன்று முரணான தன்மை ஏற்பட்டு பதி ஒருவனே என்று சொல்வது பொருத்தமுள்ளதா என்ற கேள்வி எழுமே எனில்

லய-போகாதிகாரத்தினுல் ஏற்பட்ட வேற்றுமை உபாதியினுல் தோற்றுவிக்கப்பட்டதுவேயன்றி உண்மையல்ல. மேலும் அவைகள் (லயபோகாதிகாரங்கள்) பிந்து தொடர்புடைய அணுக்களு(ஜீவன்)டையவையே. உண்மையில் பதி ஒருவனே விகாரமற்றவனும் ''அதிஷ்டாதாவாக (நிருவகிப்பவனுக) விளங்குவதால் ஔபசாரிகமான வேற்றுமையுடையவனுகவும் அறியப்படுகிருன்'' என்று ரத்னத்ரய க்ரந்த வசனம் குறிப்பிடப்படுகிறது. ஸூர்யன் தாமரை மலர் மலரவும், மூடவும், வாஸனேயுடையதாகவும் செய்து அதனுல் காரணமாக இருப்பது போல் சிவனும் பிந்துவில் தன்னுடைய தோற்றத்தினுல் மட்டுமே லய-போகங்களேச் செய்து அந்தந்த செய்கையின் மூலம் வேற்றுமையையடைகிருர். அவ்விதம் வெவ்வேறு தோற்றங்களேக் கொண்டவனுகக் காணப்பட்டாலும் உண்மையில் சிவன் மாற்றமில்லாதவனுவான். शिवोऽपि बिन्दौ स्वसन्निधिमात्रेण लयभोगाधिकारान् कुर्वन् तत्तन्नाम्ना व्यवहारभेदं लभते। (ஸூ. 17-பாஷ்யம், p. 20)[4]. மேலும் ஸூர்யன் சரீரவ்யாபாரமில்லாமல் ஜீவாத்மாக்களின் கார்யங்களுக்கு ஸன்னிதியினுல் மட்டுமே ப்ரேரகத்வம் (ஊக்குவிப்பவன் என்ற தன்மை) அடைவதுபோல் சிவனும் ஸங்கல்பத்தால் மட்டுமே கர்த்ருத்வம் (படைப்பவன் என்ற தன்மையை) பெறுகிருன்.

53-வது ஸூத்ரத்தில் பதியின் ஐந்து விதமான நிலேகள் கூறப்பட்டுள்ளன. சாந்த்யதீத, சாந்தி, வித்யா, ப்ரதிஷ்டா, நிவ்ருத்தி என்ற இவ்வைந்து கலேகளிலும் அந்தந்த புவன பேதங்களுடன் ஈசானன், தத்புருஷன், அகோரன், வாமதேவன், ஸத்யோஜாதன் என்று அப்புவனங்களின் தலேமை அடிப்படையில் (அதிஷ்டாத்ருத்வத்தைக் கொண்டு) சிவனே ஐந்து முகங்கொண்ட ஸதாசிவனென்ற பெயர்களேயடைகிருன். ரத்னத்ரயக்ரந்தமும் कार्यभेदात् अधिष्ठानवशादेकैव पञ्चधा என்று வர்ணிக்கிறது.

இவ்வகையில் பதிக்கு லக்ஷணம் உரைத்து பிறகு பதி இந்த்ரியங்களுக்குப் புலப்படாதவனென்பதால் ப்ரத்யக்ஷப்

---

4. All references from the Bhāṣya are to the edition of *Śrimat Pauṣkara Saṃhitā*, Jñānapāda with the com. of Umāpati Śivācārya, Chidambaram, 1925.

ப்ரமாணத்தினுல் அறியக் கூடியவனல்ல, அனுமானத்தால் அறியப்படுகிருர். ஜகத்தானது ஜடமானதாலும் (இயங்க முடியாத தன்மையாலும்) இயக்கமின்மையாலும், தேர் போன்று இயக்குனரைச் சார்ந்து ஆச்ரயித்து இருப்பதாலும், இதனை இயங்க வைப்பவனே ஈச்வரனென்று அனுமானப்ரமாணத்தினுல் நிரூபிக்கிருர் (ஸூ. 79-80): अचेतनं जगत् प्रवृत्तिनिवृत्त्योः अस्वतन्त्रं, प्रेरकसापेक्षं रथादिवत् । மேலும் இதை உலக வழக்கில் அன்ருடம் காணக்கூடிய நிகழ்ச்சியைக் கொண்டு விளக்குகிருர். ஜடமான பால் பசுவினிடமிருந்து தானுகவே பெருகுகிறது என்பதாலும், இரும்பினை ஈர்க்கக் கூடிய அயஸ்காந்த (ஜடமான) கல்லில் நீர் கசிவதையும் கொண்டு முன்னர் கூறிய அனுமானத்திற்கு முறையின்மை (வ்யபிசார) தோஷம் ஏற்படுமேவெனில் — ஏற்படாது. பால் உயிருள்ள பசுவினிடம் தான் சுரக்குமன்றி மரித்த பசுவினிடம் சுரப்பதில்லை. அவ்வாறே அயஸ்காந்தக் கல்லிலும் சந்திர கிரணமின்றி நீர் கசியாது. அவ்விதம் ஸ்வதந்த்ரனுன சேதனனுன பரமேச்வரனே ஜகத்கர்த்தா என்று தார்கிக அணுகு முறையில் நிரூபிக்கிருர்.

ஜீவனும் சேதனனுனபடியால் ஏன் ஜகத்திற்கு காரணமாக இருக்கக் கூடாதென்பதை 86-வது ஸூத்ரம் விளக்குகிறது. குறுகிய அறிவும் பிறப்புமுடைய ஜீவன் அனைத்து அசேதனமான பொருட்களையும் படைக்க இயலாதென்பதால் தொடக்கமில்லா கார்ய காரண ஓட்டத்தை நிர்வகிக்கும் தன்மை எல்லாமறிந்த இறைவனுக்கே (ஈச்வரனுக்கே) உண்டு.

மேலும் முக்தாத்மாக்களான ஜீவன்களுக்கு இவ்வுலகைப் படைக்கும் தன்மை சொல்லக் கூடுமோவெனில் அதுவும் இயலாது. ஏனென்ருல் ஜீவன் தொடக்கத்திலேயே முக்தனு (ஆதி முக்தன்) அல்லது அவனது முக்தியானது தொடக்கமில்லாததா (அனுதி முக்தன்) என்ற கேள்வி எழும். ஆதிமுக்தனென்று குறிப்பிடப்படும் பக்ஷத்தில் அம்முக்திக்குக் காரணமான கர்த்தா ஒருவன் இருந்திருக்கக் கூடும் என்று புலப்படும்; அனுதி முக்தன் என்று குறிப்பிடப்படும் பொழுது ஸித்த ஸாதனம் —நிரூபித்த ஒன்றையே மறுமுறை நிரூபிப்பது—என்ற தோஷமேற்படும். ஆகவே நித்யமுக்தனுன ஈச்வரனே ஜகத்ஸ்ருஷ்டி கர்த்தா என்று ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

பின்னர் 93-வது ஸூத்ரத்தில் ஈசுவரனுடைய தன்மையை நிலைநாட்டுவதில் உறுதுணையாக இருக்கும் அனுமான ப்ரமாணத்தை வெகுவாக விமர்சித்து இறுதியில் அதை நிராகரிக்கிறார். அபின்ன நிமித்தோபாதான[5] காரணமான ஈச்வரன் ச்ருதி ப்ரமாணத்தாலேயே அறியப்படுபவனென்று முடிக்கிறார். இப்படலத்தின் முடிவில் நாராயண—பதத்தில் 'ண' என்ற எழுத்தின் இணைப்பால் ஏற்பட்ட சிறப்பினைக் குறிப்பிட்டு 'நாராயண' என்னும் சொல் பழக்கத்தினாலேயே விஷ்ணுவைக் குறிக்கும் சொல்லாக மாறியது என்று வெகுவாக விளக்கி இறுதியில் சிவனுடைய சிறப்பினையும் மேன்மையையும் நிரூபிக்கிறார். இந்த இடத்தில் விஷ்ணுவினுடைய மேன்மையை முதலில் பூர்வபக்ஷமாக எடுத்துக்காட்டி பின்பு சிவன் விஷ்ணு-விலும் மேன்மையானவன் என்று விளக்குவது மிகவும் ஆச்சரியமான சர்ச்சையாகும்.

द्वितीयः बिन्दुपटलः

இரண்டாவது பதார்த்தமான 'பிந்து' எனப்படும் 'குண்டலினீ' இப்படலத்தில் விளக்கப்படுகிறது. இதன் லக்ஷணமாவது— "शिवगतलयादिभेदप्रयोजकोपाधिः बिन्दुः कुण्डलिनीत्यभिधीयते" (ஸூ. 1) என்பது. லயசிவம்[6], போகசிவம்

---

5. நிமித்த காரணம் என்பது குடத்தின் தோற்றத்திற்கு அல்லது குடம் எனும் மண்ணின் விளைவிற்கு குயவன் காரண-மாயிருப்பது போலாகும். குடத்தின் விளைவிற்கு மண்தான் மூல காரணமெனினும் அதை உருவாக்குபவனென்கிற முறையில் குயவனும் ஓர் காரணமாகிறான். இதுவே நிமித்த காரணமாகும். உபாதான காரணமென்பது மண் குடத்திற்குக் காரணமா-யிருப்பது. இங்கு குடமெனும் விளைவிற்கு மண் மூலகாரணமா-கிறது. இதுவே உபாதான காரணம். இவ்வகையில் சைவ ஸித்தாந்தத்தில் உலகத்திற்குக் காரணமான இறைவன் நிமித்த காரணமாகவும், உபாதான காரணமாகவுமிருத்தலால் வேற்றுமையில்லா நிமித்த உபாதான காரணமாகிறார்.

6. இது குறித்து முன்னரே பதிபடலத்தில் 19-வது ஸூத்ரத்-திற்கான உரையில் (p. 28) உமாபதி கூறியதைக் காண்க.
.........शिवशक्तिरपि लयतत्त्वमेव । एवं बिन्दोर्वक्ष्यमाणावस्थाद्वयविशिष्टा या भोगाधिकारतत्त्वमपि सापि शिवभेदप्रयोजिका......................उपाधिभावं प्रतिपद्यन्ते ।

ஸதாசிவம், அதிகாரசிவம், மஹேசன் எனப் பல்வேறு வேற்றுமைகளுடன் அறியப்படுகிற உபாதியே 'பிந்து' எனும் சொல்லினுல் தெரிவிக்கப்படுகிறது.

निमित्तमीश्वराख्यं सहकारणम् ।

उपादानन्तु यत्सूक्ष्मं सर्वकार्येषु संस्थितम् ।

என்றும்,

निमित्तमीश्वराख्यं स्यादुपादानं स विन्दुराट् (p. 88) என்ற வகையிலும் கூறப்படுவதால் 'பிந்து'வே உபாதானமாகும். மேலும் அத்வைத மதத்தின் விவர்த்த வாதமும் நிராகரிக்கப்படுகிறது.

இப்படலத்தின் 7-வது ஸூத்ரத்தில் மாயை எவ்வாறு உபாதான காரணமாகாது என்பதற்கான அனுமானம் கூறப்படுகிறது — मायापि नात्रोपादानं मोहकत्वात् स्वतेजसा । இதற்கான உரையில் உமாபதி குறிப்பிடுவதாவது- மாயை அசுத்தமாயாவானதால் சுத்தாத்வாவிற்கு உபாதானமாகாது. இங்கு 'சுத்தாத்வா' என்ற பதத்தினுல் அனந்தேச்வரர் முதலிய தோற்றங்கள்[7] குறிப்பிடப்படுகின்றன. இவர்கள் சிவனுடைய ஒளி(தேஜஸ்)யின் மகிமையினுல் எப்பொழுதும் விழிப்புடனுள்ளவர்களாதலால், காசகாமாலே முதலிய நோய்போன்று மயக்கும் தன்மை கொண்ட அசுத்தமாயை (சுத்தாத்வாவிற்கு) உபாதான காரணமாகாது (ஸூ. 7-8) :

मायापि नात्रोपादानं मोहकत्वात् स्वतेजसा ।

यतः प्रबुद्धपुंकायकरणानां न कारणम् ॥

शुद्धाध्ववर्तिनस्सर्वे प्रबुद्धाश्शिवतेजसा ।

देहेन्द्रियादिमन्तोऽपि नाबद्धास्तेषु ते पुनः ॥

பிறகு பதினேராம் ஸூத்ரத்திலும் குண்டலினீயின் ஸ்வரூபம் வர்ணிக்கப்படுகிறது.

---

7. பதிபடலத்தில் 10-ம் ஸூத்ரத்தின் விளக்கத்தில் உமாபதி கூறுவது :

शुद्धाध्वशब्देनाशुद्धमायाधिष्ठातृत्वेन सिद्ध – अनन्तेश्वरदेहादिरुच्यते ॥

सा च कुण्डलिनी शम्भोः शक्तिश्शुद्धा जडात्मिका ।
न तादात्म्यात्स्थिता किन्तु वर्तमानपरिग्रहे ।।

என்றும்,

शिवे कर्तरि तादात्म्यात् नेयं कुण्डलिनी स्थिता ।
उपादानत्वतो हेतोः कुलाले मृत्तिका यथा ।।

என்றும் விளக்கப்படுகிறது. குண்டலினீயானவள் கர்த்தாவான சிவனிடத்தில் உபாதான காரணமாக விளங்குவதால் ஓர் கருவி அல்லது கரணம் போன்று இயங்கப்படுவபளே அன்றி சிவனுடன் தாதாத்ம்யம் கிடையாது என்பது ஓர் எடுத்துக்காட்டுடன் விளக்கப்படுகிறது. குயவன் குடங்களைச் செய்வதற்குத் தன் கரணங்களை (இந்த்ரியங்களை) நாடினாலும் வேறோர் சேதனனை நாடாமல் சுதந்திரமாகச் செயல்படுவது போல் ஈச்வரனும் தன்னிடத்தில் (அதிஷ்டேயமாக) இருக்கும் குண்டலினீயின் வாயிலாக சுத்தாத்வாவிற்கு உபாதான காரணமாகிறான். ஈச்வரன் ஸ்வதந்த்ரன்; யாராலும் இயக்கப்படுபவனல்ல.

சுத்தாத்வாவிற்கு உபாதான காரணமான பிந்துவே வர்ணங்களின் அல்லது எழுத்துக்களின் உச்சரிப்பினால் எழுப்பப்படும் ஒலிக்கும் உபாதான காரணம் என்று கூறப்பட்டுள்ளது (ஸூ. 15-6):

किञ्च शब्दानुसंविद्धाः जायन्ते प्रत्यया नृणाम् ।
तेषां यत् कारणं विप्राः स बिन्दुः बहुवृत्तिकः ।।

அவ்வொலியானது தேஹத்திலிருந்து வெளிப்படுகையில் அந்த அந்த ஒலியின் உற்பத்தி - ஸ்தானத்திற்கேற்றவாறு வைகரீ, மத்யமா, பச்யந்தீ, மற்றும் ஸூக்ஷ்மா என்று, நான்கு பிரிவாகக் குறிப்பிடப்பட்டு விவரிக்கப்பட்டுள்ளது.

மேலும் தத்வங்களுக்கும் உபாதானமாக பிந்துவை வர்ணித்து அவைகளின் ஸ்வரூபத்தை விளக்குகிறார் (ஸூ. 34)—वृत्तिः तत्त्वात्मिका चास्य चतुर्धा संव्यवस्थिता । பிந்துவினுடைய தத்வரூபமான வ்ருத்தி நான்கு வகையாகும். முதலில் சிவ-தத்வம்; இதற்கு சிவன் நிர்வகிப்பவனாக (அதிஷ்டாதாவாக) இருப்பதால் சிவதத்வம் என்று பெயர். இம்முறையில் ஸதாசிவதத்வம், ஈச்வரதத்வம், மற்றும் வித்யாதத்வம், ஆகிய

தத்வங்கள் விளக்கப்படுகின்றன. இத்தத்வங்கள் தீக்ஷையினுலே தூய்மையாக்கப்படாத பசுக்களாகையால் சுத்தாத்வபுவனங்களில் போகாதிகாரிகள் ஆகா. மேலும் சுத்தாத்வபுவனங்களுக்கு கர்மாவினுல் தோன்றும் தன்மை கிடையாது. இதன் காரணமாக சுத்தாத்வாவிலுள்ள பசுக்களுக்கு கர்மாவினுல் கட்டுப்படும் தன்மை (பந்தகத்வம் அல்லது பாசத்வம்) கிடையாது. வாஸனு பேதத்தினுல் போகமும் மாறுபடுகிறது. பிந்துவின் தத்வங்கள் சுத்தமானதால் பந்தகமாகாது, ஆகையால் கட்டுப்படுத்த மாட்டா; மாயையின் மூலம் தோன்றும் கர்மாவே கட்டுப்படுத்துமென்பதே இப்படலத்தின் ஸாராம்சமாகும்.

तृतीय: मायापटल:

மாயை சுத்தாத்வ புவனங்களிலுள்ளவர்களைத் தவிர்த்து ஸகல ப்ரபஞ்சங்களையும் மயக்குகிறது (மோஹிக்க வைக்கிறது); 'மயதி' (मयति) என்பதனுல் 'மாயா' என்னும் சொல் பொருத்தமானதாகிறது. இப்படலத்தில் 2-ம் ஸூத்ரம் மாயாவின் ஸ்வரூபத்தை விளக்குகிறது.

नित्यैका व्यापिनी वस्तुरूपा कर्माश्रया शिवा ।।,
साधारणी च सर्वेषां सकलानां मुनीश्वरा: ।। என்றும்,

முன்னர் பதிபடலத்தில் (ஸூ. 11)

भोग्यभोक्तृत्वसंपत्त्यै या शरीरेन्द्रियादिकम् ।
उत्पादयति सा माया खचिता कर्मभिर्नृणाम् ।।

என்றும் வர்ணிக்கப்பட்டுள்ளது. அணுக்களான ஜீவாத்மாக்களின் நல்வினை, தீவினைகளுக்கேற்ப அவ்வணுக்களின் போகத்திற்கு சரீரத்தை உண்டாக்குவதே மாயா[8] என்று கூறப்பட்டுள்ளது. மேலும் புண்ய-பாபங்களுக்குக் காரணமான தர்ம-அதர்ம கர்மாவானது ஜடப்பொருளாகையால் 'சித்'தான

8. कर्माश्रयत्वे सति शरीरेन्द्रियाद्युत्पादकत्वं मायाया लक्षणम् என்றும் கூறப்பட்டுள்ளதைக் (I. 11) காண்க.

நல்வினை, தீவினை (தர்மாதர்மகர்மா) ஜடப்பொருளாகையால் அதற்கு ஆச்ரயமாய் (புகலிடமாய்) இருந்து சரீரம் முதலியவற்றைப் படைக்கும் தன்மை பெற்றது மாயை.

ஆத்மாவை ஆச்ரயித்து நிற்காமல் மாயையை ஆச்ரயித்திருப்பதால் 'மாயை' நித்யமாய், வ்யாபகமாய் உள்ளதாகவும் லக்ஷணம் சொல்லப்பட்டது. 'கலா'தத்வம் முதல் 'ப்ருதிவீ' தத்வம் வரை உள்ள வெவ்வேறு தத்வங்கள் — விதையில் எவ்வாறு இலை, பூ, பழம் முதலியனவுள்ளனவோ அவ்வாறு— 'மாயா' என்கிற பதார்த்தத்தில் உள்ளன என்று உவமையின் வாயிலாக மாயா நிலைநாட்டப்படுகிறது.[9] (ஸூ. 4).

இப்படலத்தின் முடிவில் (65-ம் ஸூத்ரத்தில்) विश्वजगन्मयी என்ற சொல்லுக்கு உமாபதி अशुद्धसर्वजगदुपादानभूता என்று கூறுகிறார். அதனால் 'शुद्धजगदुपादानं बिन्दुः' என்று முன் படலத்தில் குறிப்பிடப்பட்டது தெளிவாகிறது.

இம்மாயாவென்ற பதார்த்தமானது ஸாங்க்யர்களின் மாயையிலிருந்து வேறுபட்டது. ஏனெனில் ஸாங்க்யர்களின் மாயையானது ஸத்வ-ரஜஸ்-தமஸ் ஆகிய முக்குணங்களைக் கொண்டது. சைவஸித்தாந்தத்திலோ अविभक्तत्रिगुणात्मिका என்று குறிப்பிடப்படுகிறது. இதுவே 6-ம் ஸூத்ரத்திலும் – ''गुणाविभागरूपा सा सिद्धान्ते प्रतिपादिता'' என்று கூறப்படுகிறது. இங்கு 'विभक्तं' 'अविभक्तं' என்பன 'ஸ்தூல'த்தையும் 'ஸூக்ஷ்ம'த்தையும் குறிப்பவை. சப்தம் முதலான ஐந்து தன்மாத்ரைகளும் ஸூக்ஷ்மமானவை. அவைகளைவிட ஸூக்ஷ்மம் அஹங்காரம். புத்தி அதனினும் ஸூக்ஷ்மம். புத்தியைக் காட்டிலும் ஸூக்ஷ்மதரம் ப்ரக்ருதி. கலை முதலிய தத்வங்கள் ப்ரக்ருதியைக் காட்டிலும் ஸூக்ஷ்மதமம். இவைகளுக்கெல்லாம் மாயையே காரணம். இவ்விதம் மாயை ஸாங்க்ய மதத்தின் ப்ரக்ருதியிலிருந்து வேறுபட்டதென்பது தெளிவாகிறது.

மாயை அத்வைதமதத்தில் கூறப்பட்டதுபோல் 'மித்யை' அல்ல, உண்மையான பொருளே. மேலும் மாயை 'கலாதி-

9. இப்படலத்தில் 4-ம் ஸூத்ரத்தின் உரையில் உமாபதி—

अविभक्तमिति पाठे अविभक्तं सूक्ष्मम् । अनेन साध्यनिर्देशः । तत्र हेतुः विभक्तत्वात् इति स्थूलत्वादिति यावत् । जडत्वे सति नानारूपत्वादिति हेतुनिष्कर्षः । तत्र दृष्टान्तमाह यथेति । स्कन्धः काण्डः पर्णानि पत्राणि फलादीत्यादिशब्देन कुसुमानि गृह्यन्ते । यथा वा स्कन्धपर्णफलादिकं विभक्तं बीजे अविभक्ते सत्येव भवति तद्वदिति ।

ஜனனீ' (கலை முதலியவற்றின் பிறப்பிடம்) ஆனதால் சிவன் போல் வஸ்துரூபமே அன்றி அநிர்வசனீயம் (இன்னதென்று நிர்ணயிக்க இயலாதது) அல்ல. இக்கட்டத்தில் மாயை 'மித்யை' என்ற அத்வைத மத கோட்பாட்டினை கண்டன-கண்டகாத்ய-காரர் ரீதியில் விளக்கி, பின்னர் அதனைக் கண்டித்து, ப்ரபஞ்சம் மித்யையல்ல, ஸத்யம், வஸ்துரூபமானது என்பதை மிகவும் ஆச்சரியமான முறையில் உமாபதி நிலைநாட்டியுள்ளார்.

एवं वस्त्वात्मकं विश्वं भवेत् कथमवस्तुजम् ।
तस्माद्वस्त्वात्मिका माया स्थिता विश्वस्य कारिणी ॥

என்ற 26-ம் ஸூத்ரத்தின் தாத்பர்யம்—ப்ரபஞ்சம் வஸ்துவாகவும், ஸத்தாகவுமிருப்பதால் அதன் காரணமான மாயையும் 'வஸ்த்வாத்மிகா' (பொருள் வடிவுகொண்ட தன்மை) என்பது பொருந்தும்.

மாயை அழிவில்லாதது. ஏனெனில் முன்னர் 3-ம் ஸூத்ரத்தில்[10] குறிப்பிட்ட வகையில் ப்ரளய காலத்தில் காரண சரீரத்துடன் இருக்கும் அணுக்களின் (ஜீவாத்மாக்களின்) கர்ம பயன்களுக்கேற்ப அவைகளின் மறு தோற்றத்திற்கு மாயை காரணமாக இருப்பதேயாகும். மாயை நித்யமானதென்ற பக்ஷத்தில் முக்தியெனும் பாசநீக்கம் ஏற்படாதே என்ற ஐயப்பாட்டிற்கிடமில்லை. ஏனெனில் மாயா கார்யம் நீங்கப் பெறுவதாலேயே முக்தி கிடைக்கிறது என்கிறார் உமாபதி சிவாசார்யார்.

न च मायाया नित्यत्वे पाशनिवृत्तिरूपमुक्त्यसम्भवः । मायाकार्यनिवृत्तेरेव पाशनिवृत्तित्वात् ।

இவ்விதம் ப்ரளய காலத்தில் கர்மாவுக்கு ஆச்ரயமாக இருக்கவேண்டுமாதலால் மாயா நித்ய வஸ்துவே. பிந்து கர்மாதீதமானதால் கர்மாச்ரயமாகாது என்று 28-ம் ஸூத்ரத்தில் கூறப்படுகிறது.

न चात्मनि स्थितिस्तेषां यस्मादात्मा जडो भवेत् । என்ற 29-ம் ஸூத்ரத்தில் கூறியவாறு போக்தாவான ஆத்மாவும் தர்ம-

---

10. प्रलये लीनदेहस्य कर्मिणोऽणोरहर्मुखे ।
देहादेः कारणं माया सूक्ष्मस्थूलात्मकस्य तु ॥

அதர்ம கர்மாக்களுக்கு ஆச்ரயமாகாது. பய(फल)ஞன முக்தியும், பாசநீக்கமான காரணமும் ஒரே இடத்தில் (ஸாமாஞதிகரண்யம்) இருக்க வேண்டுமென்பதும் அவசியமல்ல—
न च कार्यकारणयोः फलादृष्टयोः सामानाधिकरण्यनियमः । पुत्रकृतगयाश्राद्धादिजन्येन पुत्रसमवेतेन अदृष्टेन पितरि फलदर्शनात्, पितृकृतजातेष्टयादिजन्येन पितृसमवेतेन अदृष्टेन पुत्रे पूतत्वादिफलदर्शनाच्च ।
(p. 134) என்கிற முறையில் மகனுல் செய்யப்படும் ச்ராத்தத்தின் பயன் பித்ருக்களுக்கும், பிதாவால் செய்யப்படும் 'ஜாதேஷ்டி' யாகத்தின் பயன் மகனுக்கும் சென்றடைவதாக வேதம் கூறுவதால் கர்ம வைசித்ரயம் அங்கீகரிக்கப்பட வேண்டும்.[11]

31-32-ம் ஸூத்ரங்களுக்கான உரையில் स्वर्गनरक-भोगवैचित्र्ये यद्धेतुः विचित्रं कारणं तत् कर्म धर्माधर्मात्मकमिति मन्तव्यम् ।
தர்ம, அதர்ம, ஞான, அஞான, வைராக்ய, அவைராக்ய, ஐச்வர்ய, அனைச்வர்யமாகிய 'பாவாஷ்டக'மெனும் இவை எட்டின் உளதாந்தன்மை[12] விசித்ரமானதால் அவைகளுக்குக் காரணமான கர்மாவும் விசித்ரமானது என அங்கீகரிக்கபடவேண்டும்.

உலகமானது இயல்பாக ஏற்படுவது (आकस्मिकम्). அதற்கு புண்யமோ, பாபமோ காரணமாகாதென்ற ஸ்வபாவவாதத்தை (स्वभाववाद) நிராகரிக்கிருர் உமாபதி. மேலும் மீமாம்ஸகரான குமரிலபட்டர் எவ்வாறு அத்ருஷ்டத்தை—அதனை நிராகரித்த 13 ஆக்ஷேபங்களையும் கண்டித்து—ஸ்தாபித்தாரோ அவ்வாறு உமாபதியும் கர்மா உண்டு என்பதை அதனை மறுக்கும் ஆக்ஷேபங்களைக் கண்டித்து ஸ்தாபித்திருப்பது அவர் திறனைக் காட்டுகிறது. கர்மா அனைத்தும் மாயையில்தான் நிலை கொள்கின்றன என்பதை 60-ம் ஸூத்ரத்தின் வாயிலாக மீண்டும் குறிப்பிடுகிருர்—

मायायामेव नान्यस्मिन् संस्थितानि द्विजर्षभाः ।

---

11 கர்மவைசித்ரயத்தைப் பற்றி உமாபதி தமது உரையில் மிகவும் தெளிவான விரிவான விளக்கத்தை அளித்துள்ளார் (pp. 135-8).

12. Cf. *Tamil Lexicon*, Vol. V (University of Madras, 1982) p. 2633.

இங்கு 'பாவம்' (भाव) என்பது 'உளதாந்தன்மை', State of condition of Existence என்று குறிப்பிடப்படுகிறது.

இப்படலத்தின் முடிவில் அணுக்களாகிய ஜீவாத்மாக்கள் மாயையின் கார்யங்களில் மறைந்து நிற்பவர்கள்; சுத்தவித்யா தத்வத்தில் இருக்கும் நந்திகேச்வரன் முதலானோர், பரமேச்வரனால் நேரடியாக குருவின் வடிவில் தீக்ஷையின் மூலம் அதிகார சிவன்களாக அருளப்பட்டவர்கள் என்று கூறப்படுகிறது.

இவ்விதம் அசுத்த ஜகத்திற்கு உபாதானமாக இருக்கும் மாயை சுருக்கமாகக் கூறப்பட்டது.

चतुर्थः पशुपटलः

முதல் ஸூத்ரத்தில் பசுவினுடைய ஸாமான்யலக்ஷணம் கூறப்படுகிறது –

पशुः पशुत्वसंयोगात् न मुक्तः पशुरुच्यते ।

'பசுத்வ'மெனப்படும் ஆணவமலத்தின் தொடர்பால் ஜீவன் பசுவெனப்படுகிறது. முக்தாத்மாவான ஜீவன் ஈச்வரனைப்போல் கலை முதலானவை இல்லாதிருந்தாலும், ஈச்வரனல்ல; ஏனெனில் பரமேச்வரனால் மட்டுமே பஞ்சக்ருத்யம் இயலும், முக்த ஜீவனால் இயலாது: मुक्तात्मनः शिवसाम्येऽपि पञ्चकृत्यकारित्वाभावेन नेश्वरत्वम् । எனவே தான் जगद्व्यापारवर्जं प्रकरणात् என்ற வ்யாஸ ஸூத்ரத்திலும் (IV. 4. 17) சிவனுக்கு நிகரான தன்மை (சிவ ஸாம்யம்) முக்தாத்மாவிற்கு இருந்தபோதிலும் ஜகத்வ்யாபாரம் (ஸ்ருஷ்டி முதலானவை) கிடையாது என்று சொல்லப்படுகிறது. இதையே அப்பய்ய தீக்ஷிதரும் தமது உரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்: सिद्धान्तस्तु मुक्तानां ब्रह्मणा साम्यश्रवणेऽपि जगत्सृष्ट्यादिव्यापारवर्जमेव साम्यम् आस्थेयम् ।।[13]

இந்த பசு பதார்த்தமானது 'ஸகல', 'ப்ரளயாகல' மற்றும் 'விஞ்ஞானகல' என்று மூவகை. மலம், மாயை மற்றும் கர்மாவெனும் மூன்று பந்தமுடையது ஸகல பசு: मलमायाकर्मरूपबन्धत्रयवत्त्वं सकललक्षणम् என்று உமாபதி 3-4வது ஸூத்ரத்திற்கான தமது உரையில் குறிப்பிடுகிறார். மாயை நீங்கி மலம்,

13. *Brahmasūtrabhāṣya of Śrīkaṇṭha* with *Śivārkamaṇidipikā* vol. II. p. 496.

கர்மம் என்ற இரு பந்தகமுடையது ப்ரளயாகல பசு (मल-कर्म-रूपबन्धद्वयमात्रवत्व प्रलयाकललक्षणम्)[14]. இறுதியில் மலம் மட்டு-முடையது விஞ்ஞானகல பசு. (मलमात्रबन्धवत्वं विज्ञानाकलस्य लक्षणम्). ஆணவ மலத்தினால் ஞானசக்தி மறைக்கப்பட்டிருப்ப-தாலேயே ஜீவாத்மாக்களுக்கு விஞ்ஞானகல என்று பெயர். இவர்கள் கலா முதல் ப்ருதிவீ வரையான தத்வங்களை நிராகரிக்கும் சிவதீக்ஷை செய்து கொண்டவர்கள். மேலும் யம நியமாதிகளால் 'கர்மம்' நீங்கப் பெற்று மலம் மட்டுமுடையவர்-களென்று 13-14வது ஸூத்ரங்களில் வர்ணிக்கப்படுகிறது. இவ்விதம் ஸகல, ப்ரளயாகல, மற்றும் விஞ்ஞானகல என்று ஜீவாத்மாவான அணுக்களின் மூவகைப் பிரிவு கூறப்படுகிறது.

இவற்றுள் மலம், கர்மம், மற்றும் மாயை ஆகிய மூன்றினையும் உடைய ஸகல பசுவானது த்ருஷ்டோபபோக்யம் (दृष्टोपभोग्यं), அத்ருஷ்டோபபோக்யம் (अदृष्टोपभोग्यं), மற்றும் ஜன்மோப-போக்யம் (जन्मोपभोग्यं), ஆகிய மூன்று வித கர்மாக்களும் (ஸூ. 28-30)[15], மேலும் அதன் காரணமான மாயையும் அநுக்ரஹ-ரூபமான சக்திபாதம் ஏற்பட்டதும் நீங்கப்பெற்று விஞ்ஞானகல பசுவாகிறது. பின்பு ஆணவ மலத்தின் பொருட்களில் நாட்டங்-கொள்ளும் தன்மை (விஷய கமன சக்தி) விலகி வைராக்ய-மேற்படுகிறது (p. 166) :

---

14. பௌஷ்கர ஸம்ஹிதை, p. 153.

15. (a) அம்ருதவல்லி போன்ற மூலிகைகளைச் சாப்பிடுவதன் மூலம் ஆயுள் நீடிக்கப்படுகிறது என்ற கருத்து இப்பிறவி-யிலேயே கண்கூடாக பலிப்பதனால் த்ருஷ்டோபபோக்ய கர்மம்.

आयुर्योगो गळूच्यादि सिद्धो मन्त्रप्रभावतः ।
तज्जन्मन्येव फलदो दृष्टभोग्यं तदुच्यते ॥ (ஸூ. 28)

(b) புண்ய பாபகர்மாவினால் ஸ்வர்க நரகத்திற்கு காரண-மாக எது அமையுமோ அது அத்ருஷ்டோபபோக்ய கர்மம்: उभयत्र यौ भोगौ तयोस्संबन्धि कर्म तदुभयसाधनं कर्मद्वयमित्यर्थः। (ஸூ. 29)

(c) ஜன்மோபபோக்யம் மேலும் இருவிதம்—ஆமுஷ்மிகம், (आमुष्मिकं), ஐஹிகம் (ऐहिकं) என்று. இவற்றில் ஒன்று ப்ரபலம் (வலிமையானது), மற்றது துர்பலம் (வலிமையற்றது) (ஸூ. 30).

मलस्य आणवस्य अधोनियामिका विषयेषु दोषदर्शनप्रतिबन्धेन प्रवर्त्तिका शक्तिः निवर्तते ।

இதன் காரணமாக ஈச்வரனின் பாதகமலங்களைக் காண ஆவலுண்டாகிறது (39-40). எவர் தனக்கு சம்புவின் தர்சனம் கிடைக்க வழி செய்பவர் என்ற எண்ணம் (நினைப்பு) உண்டாகும். பிறப்பால், லக்ஷணங்களால், வயதால், நடத்தையால், ஞானத்தால் நான்கு வர்ணங்களில் ஒன்றினைச் சார்ந்திருப்பவராய் ஆசார்யாபிஷேகம் பெற்றவராக உள்ள குரு எங்கு இருக்கிறாரோ அவரை நாடிச் செல்ல வேண்டும்.

मुमुक्षोः उपसदनार्हः गुरुः जन्म - वयो - लक्षण - वृत्त - ज्ञान-विशिष्टः चातुर्वर्णिकः आचार्याभिषेकवांश्च भवेत् । என்று உமாபதி சிவாசார்யார் 40-வது ஸூத்ரத்திற்கான உரையில் குறிப்பிடுகிறார். இதையே மேலும் நன்கு ப்ரமாணங்களுடன் விளக்கி—கல்லும் சிவஸம்ஸ்காரத்தினால் புக்தி அல்லது போகம், மற்றும் முக்தியளிப்பதற்குத் தகுதியுடையதாக மாறும் பொழுது நான்காவது வர்ணத்தார் ஏன் ஆசார்யனாக முடியாது என்று ஆக்ஷேபிக்கிறார்.[16] இவ்விதம் துரீய (நான்காம்) வர்ணத்தாருக்கு ஆசார்யனாக இருக்கும் தன்மையை நிலைநாட்டி பின்பு தீக்ஷையை விளக்குகிறார். முதலில் தீக்ஷை 'ஸாதிகரணம்', நிரதிகரணமென்று இருவகை. இதில் நிரதிகரணதீக்ஷை அதிகாரபத - அப்ராபிகா (अधिकारपद - अप्रापिका) என்றும் தத்ப்ராபிகா (तत्प्रापिका) என்றும் இரு வகைப்படும் இதனையே மேலும் பல பிரிவுகளாக விளக்கி இதன் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுகிறார். உபநயன கர்மாவைச் செய்து கொள்ளாதவர்களுக்கு வேதமோத எவ்வாறு உரிமையில்லையோ அவ்வாறு சிவ தீக்ஷைப் பெருதோருக்கு ஆகமத்தை ஓதவோ, அல்லது அதில் குறிப்பிட்டதைக் கடைபிடிக்கவோ உரிமை இல்லை.[17] மேலும் வாமபாசுபத பிரிவிற்குரியவர்களான ஸ்த்ரீ, பிராம்பண ஒழுக்கத்திலிருந்து நழுவியவர்கள் (ப்ரஹ்மபந்து) மற்றும் நான்காவது வர்ணத்தவர் ஆகியோருக்கு தீக்ஷைபெறத் தகுதி-

16. पाषाणः शिवसंस्काराद्भुक्तिमुक्तिप्रदो भवेत् ।
पाषाणः शिवतां याति शूद्रस्तु न कथं भवेत् ।। (p 170)

17. अनुपनीतानां वेदाध्ययने यथा नाधिकारः, एवं शिवदीक्षारहितस्य आगमाध्ययने तदर्थानुष्ठाने च अनधिकार इत्युक्तं भवति । (p. 186)

யில்லே. ஸித்தாந்த சைவாகம தீக்ஷைக்கோ, ஒழுக்கத்திலிருந்து பிறழா அனைத்து வகுப்பினரும், கீழ் வகுப்புப் பெண்ணிடத்தில் மேல் குலத்தவன் மூலம் பிறந்த அனுலோமப் பிரிவினனும் தகுதியுடையோர் என்பது பாஷ்யக்காரர் கருத்து. (p. 183):

एवं च उक्तयुक्त्या एव स्त्रीशूद्रद्विजबन्धूनामित्यादिकमपि वामादिविषयमेव । तस्मात् अभ्रष्टानां दशानां चातुर्वर्णिकानामनुलोमानां च सिद्धान्तशैवदीक्षायामधिकार इति स्थितम् ।।

दीक्षा एव मोचयेत् पाशान् शिवत्वं च ददात्यणोः ।।

என்று குறிப்பிட்டவாறு பாசங்களிலிருந்து அணுவான ஜீவாத்மாவை விடுவித்து. சிவத்தன்மை அளிப்பது தீக்ஷையே. 'மலமோசன' மெனும்போது மலம் ஒன்ருனதால் ஒருவன் மலத்திலிருந்து விடுபடும்பொழுது அனைவரும் அவ்வாறு விடுபடக்கூடுமே என்ற கேள்வி எழாமலிருக்க, மறைக்கும் தன்மை கொண்ட மலத்தின் (ஆவாரக மலத்தின்) அழிவே இங்கு குறிப்பிடப்பட்டதாகக் கருத வேண்டும். இவ்வாவாரக சக்தி ஒவ்வொரு ஜீவனுக்கும் மாறுபடுகிறது. இவ்வகையில் குறிப்பிடுவதால் மேற்கூறிய ஐயப்பாடு விலக்கப்படுகிறது. அதனுலேயே ம்ருகேந்த்ராகமத்திலும்—

तदेकं सर्वभूतानामनादि निबिडं महत् ।
प्रत्यात्मस्थस्वकालान्तापायिशक्तिसमूहवत् ।।

என்று கூறப்பட்டிருக்கிறது. மல நிவ்ருத்தியானது பாம்பு மற்றும் முள் இவைகளைத் தவிர்ப்பது அல்லது நீக்குவது போலவேயாகும் (p 185): मलस्य दुःखसाधनत्वेन तन्निवृत्तेरपि अहिकण्टकादिपरिहारस्येव प्रायश्चित्तादिना पापनिर्हरणस्येव वा सतः पुरुषार्थत्वात् ।

கேவல ஸமய தீக்ஷா, விசேஷ தீக்ஷா என்ற இவ்விரண்டும் ருத்ர, ஈச்வரபதத்தைக் கொடுப்பவை. நிர்வாண தீக்ஷா முக்கியமல்லாதது (அப்ரதானமாவது). ஸத்யோ நிர்வாண தீக்ஷா ப்ராரப்த கர்மாவை அழிப்பது. பாலில் நனைக்கப்பட்ட மாவிலையினுல் ஜ்வரத்தை உடனே போக்க இயலும் (क्षीराक्तैः आम्रपर्णैः तु ज्वरं सद्यो विनाशयेत्) என்ற ந்யாயப்படி 'ப்ராரப்த

கர்மா அனுபவிப்பதனுல் மட்டுமே அழியக் கூடியது' என்ற கருத்து நிராகரிக்கப்படுகிறது. இந்த தீக்ஷை மேலும் चाक्षुषी (பார்வையின் வாயிலாகவும்), स्पार्शनी (ஸ்பர்சிப்பதன் வாயிலாகவும்), वाचिकी (வார்த்தைகளின் வாயிலாகவும்), मानसी (மனதாலும்), शास्त्री (சாஸ்த்ரங்களின் வாயிலாகவும்), यौगिकी (யோகத்தின் வாயிலாகவும்), हौत्री (ஹோமத்தின் வாயிலாகவும்), என்று பலவாறு பிரிக்கப்படுகிறது.

பின்பு கலா, தத்வ, புவன, வர்ண, பத, மந்த்ர என்ற ஆறு அத்வாக்கள் குறிப்பிடப்படுகின்றன. இவைகள் அணுக்களுக்கு ஒன்றிலிருந்து மற்றொன்றை முறையாக அடைந்து முக்தி கிடைக்க வழி செய்வதால் அத்வா[18] (வழி) எனப்படுகின்றன. கலையானது நிவ்ருத்தி, ப்ரதிஷ்டா, வித்யா, சாந்தி, சாந்த்யதீத என்று ஐந்து வகைப்படும். நிவ்ருத்தி கலையில் பூமி தொடர்புடைய தத்வம் ஒன்று. இதில் 108 புவனங்கள் உள்ளன. இங்கு உமாபதி சிவாசார்யார் புவனங்களின் விமர்சனத்தையும், பல்வேறு நரகங்களின் மற்றும் பாதாளங்களின் அமைப்பு, தன்மை போன்றவற்றை மிகவும் அழகாகச் சித்தரிக்கிருர். மேலும் ஜம்பூ த்வீபம் மற்றும் சாகம், க்ரௌஞ்சம், குசம், சால்மலீ, கோமேதம், புஷ்கரமென்ற த்வீபங்களையும், அங்குள்ள வெவ்வேறு மக்களின் பண்பாடு, சிறப்பு ஆகியவற்றையும் விளக்குகிருர்.[19]

இதனைத் தொடர்ந்து தீக்ஷித தர்மங்கள் கூறப்படுகின்றன- त्रिपुण्ड्रोद्धूलनरुद्राक्षधारणादिकं च दीक्षितस्य नित्यधर्मः । அதர்வசிரஸ், ச்வேதாச்வதரம், தைத்திரீயம், கைவல்யம் போன்ற உபநிஷத்துக்கள் நித்யகர்மா அனைவராலும் அனுஷ்டிக்கப்பட வேண்டுமென்று கூறுகின்றன. நடு விரல், பவித்ர விரல் அல்லது மோதிர விரல், கட்டை விரல் இவைகளால் த்ரிபுண்ட்ரம் (மூன்று கோடுகள்) கிடையாக (horizontal) பஸ்மாவினுல் தரிக்க வேண்டும். மேல் நோக்கி இருக்கும் ஊர்த்வ்புண்ட்ரமாகவோ, த்ரிசூலமாகவோ, வட்டமாகவோ, சதுரமாகவோ பஸ்மதாரணம் செய்வது பராசரோபபுராண வசனங்களை ப்ரமாணமாகக் கொண்டு தவிர்க்கப்பட்டுள்ளது. மேலும்

18. त्यक्त्वैकमेकं संप्राप्य कलादिष्वजरामरम् ।
पदमासाद्यते पुंभिरतोऽध्वानः कलादयः ॥ इति (p. 189)

19. Pp. 189-205.

மானவ புராண வசனங்களை மேற்கோள்காட்டி சங்கு, சக்கரம் இவைகளை உடம்பினில் அடையாளமிட்டுக் கொள்ளுதல் ஆகிய शङ्खचक्राद्यङ्कनं (உலோகத்தில் பொறிக்கப்பட்ட சங்கு, சக்கரமாகியவற்றின் வடிவங்களை உலையிலிட்டு அவற்றினால் உடம்பில் அடையாளமிட்டுக்கொள்ளுதல்) என்பது நிராகரிக்கப்பட்டுள்ளது. ஸூதஸம்ஹிதையும், நாரதீய புராண வசனங்களும் இதற்குச் சான்றாக இருக்கின்றன. பாஞ்சராத்ரத்திலோ தாமஸாதிகாரிகளுக்குத்தான் அடையாளமிட்டுக் கொள்ளுதல் கூறப்பட்டிருக்கிறது. பாத்ம புராணத்தில் கூறப்பட்டது வேத மூலகம் (வேதத்தை அடிப்படையாகக் கொண்டது) அல்ல.

அஞானம் என்கிற மலம் ஞானத்தினால் அல்லாமல் க்ரியா ரூபமான தீக்ஷையினால் மட்டுமே நிவர்த்திக்கப்படுகிறது என்பது தெளிவாக்கப்பட்டிருக்கிறது.[20] மேலும் ஞானதிலக ஆகமப்படி ஞானத்தினால் நிவர்த்திக்கப்படுவதுதான் மலரூப அஞானம் என்கிற கொள்கையும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. தீக்ஷா முதலியவை ஞானஸாதனமே. ஞானம் ஒன்றுதான் ஸாக்ஷாத் (நேரடியாக) மோக்ஷஸாதனம்[21] என்பது ஞானதிலகப் படியும், ஸர்வஞானோத்தராகமப்படியும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

'முக்தி' என்பது பாறையைப் போன்று செயலற்ற தன்மை கொண்டதல்ல, அது சிவத்வப்ராப்தியே (சிவத்தன்மையடைதல்) என்றும், ப்ராரப்தகர்மாவே பல பிறவிகளைக் கொடுக்கக் கூடியதென்றும் கூறப்பட்டிருக்கிறது. கஸ்தூரிகாவின் நறுமணம் எவ்வாறு வஸ்த்ரத்தில் பரவுமோ அவ்வாறு சிவனுடைய குணங்கள் மட்டும் ஜீவனிடம் பரவுவது முக்தியல்ல.[22] இங்கு காபாலிக மத ரீதியிலும், மஹாவ்ரத (பாசுபத மதத்தின் சில

20. यत् ज्ञाननिवर्त्यं दृष्टं न तन्मलः । किन्तु चक्षुःपटलवत् द्रव्यान्तरम् । ....इदञ्च दीक्षायाः क्रियारूपत्वमभिप्रेत्योक्तम् । ....तस्मात् सुष्ठूक्तं दीक्षैव मलनिर्वर्तिकेति । (pp. 228-29)

21. दीक्षाशब्दार्थनिर्वचनागमेन च दीक्षादीनां सर्वेषां ज्ञानद्वारा मोक्षहेतुत्व-प्रतिपादनाच्च । तस्मात् ज्ञानमेव साक्षान्मलनिवर्तकम् । दीक्षादिकन्तु तत्साधनमित्याहुः । (p. 230)

22. तदुक्तमभियुक्तैः-

यथा कस्तूरिकामोदः पटादिषु तथात्मनि ।
शिवस्य तद्गुणा मुक्तौ सङ्क्रामन्ति तदा स्वयम् ॥

...तस्मात् सङ्क्रान्तिसाम्यपक्षः न युक्तः । (pp. 231-34)

பிரிவினர்) மத ரீதியிலும் **மோக்ஷமென்பதைக்** குறிப்பிட்டு அவைகளை மறுக்கிருர். இறுதியில் சிவனுடன் **சமத்தன்மையைப்** பெறுவதே மோக்ஷமாகும் (परमसिद्धान्तस्तु शिवतादात्म्यमेव मोक्ष.) என்று குறிப்பிட்டு **ஸூதஸம்ஹிதை வசனத்தை** ப்ரமாணமாகக் கூறுகிருர் (p. 238):

सर्वात्मना चेत् साम्येन सर्वथा शिव एव सः ।
भेदकाकारशून्यत्वाद्भेदाभावाच्च वस्तुतः ।।
तस्माज्जीवस्स्वतस्साक्षाच्छिवस्सत्यादिलक्षणः ।।

ஜீவன்முக்தி நிலை உண்டு என்பதை ஸூதஸம்ஹிதை வசனத்துடன் நிலைநாட்டுகிருர். ஜீவன்முக்தி லக்ஷணமாக உமாபதியின் வசனம் (p. 241) — मायिकदेहादियुक्तत्वे सति निर्मलत्वम् — மாயையான உடம்பினைக் கொண்டபொழுதும் மலமற்ற தன்மை என்பதே. தீக்ஷையில் ஒரு வகையான **ஸாதிகரணதீக்ஷையினுல்** அணுவிற்கு சிவத்வம் உண்டாகிறது.

60-வது ஸூத்ரம் தொடங்கி நாஸ்திக மதமான சார்வாக மதம் கண்டிக்கப்பட்டு பின்பு ஆத்மா உண்டென்று நிலைநாட்டப்படுகிறது. 83-வது ஸூத்ரத்தில் ஸாங்க்ய காரிகை என்ற நூலில் குறிப்பிட்டவாறு ஸத்கார்யவாதம் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. பட்டபாஸ்கரருடைய கருத்து நிராகரிக்கப்பட்டு மலம் ஸ்தாபிக்கப்பட்டு அது ஆவரகமாகவும் (மறைக்கும் தன்மை கொண்டதாக), பாவரூபமாகவும் (உட்பொருளான தன்மை) அங்கீகரிக்கப்படுவதாக கூறப்படுகிறது.

மலமானது — மோஹம், மதம், விஷாதம், தாபம், சோஷம், ஸ்தப்தம், மற்றும் வைசித்ர்யம் என்று ஏழு வகைப்படும். இவை மலத்தின் கார்யங்கள். சந்தனத்தின் மணத்தை அழிக்கும் வேப்பம்பட்டை போல் இவ்வாவரக அல்லது ஆச்சாதக (மறைக்கும் தன்மையுடைய) மலத்தையும் மறைக்கக் கூடிய பொருள் மலமல்லாது த்ரவ்யாந்தரமே (வேெருரு பொருளே). இந்த மலத்தின் தொடர்பாலேயே பசுவாகிருன் ஜீவன். இதனுல் பசுபடலமான இப்படலத்தில் மலத்தை நிருபணம் செய்வது பொருத்தமே. இதுவே அணுக்களை ஸர்வஞனை சிவனிலிருந்து வேறுபடுத்துவதால்

(सर्वज्ञबाधक)[23] எல்லாம் அறிந்த தன்மைக்குத் தடையாயமைகிறது.

पञ्चमः पाशपटलः

முன்பு பதிபடலத்தில் லக்ஷணம் கூறப்பட்ட பாசமென்கிற ஐந்தாவது பதார்த்தம் இங்கு விவரிக்கப்படுகிறது. கலை முதல் ப்ருதிவீ வரை உள்ள தத்வங்களுக்கு எது இருப்பிடமாக உள்ளதோ அதுவே பாசபதார்த்தமாகும் என்று அங்கு குறிப்பிடப்பட்டது[24]. இங்கு கலை முதல் நியதி வரையிலான ஐந்து தத்வங்கள் வர்ணிக்கப்படுகின்றன (ஸூ. 2):

कला विद्या च रागश्च कालो नियतिरेव च ।
पञ्चैतानि च तत्त्वानि मायेयानि द्विजोत्तमाः ॥

இவற்றில் 'கலா' என்பது ப்ரபஞ்ச ஸ்ருஷ்டியில் உபாதான காரணமாகும். காலம், நியதி என்ற இரண்டும் கலைக்கு (कला) அங்கபூதமானவை.[25]

अणुनिष्ठ - सर्वविषयक - चिच्छक्त्येकदेशव्यञ्जका, क्रियाशक्त्युपोद्बलिका कला என்கிற லக்ஷணம்[26] ம்ருகேந்த்ராகமத்தை அனுஸரித்துக் கூறப்பட்டது. அதாவது 'கலை' என்பது ஜீவாத்மாவில் இருக்கக்கூடிய, அனைத்து வஸ்துக்களின்

---

23. ஸர்வஜ்ஞ (सर्वज्ञ) னென்பது सर्वं जानाति इति என்பதனுல் எல்லாமறிந்த தன்மையையே குறிப்பிடுகிறது. அணுவான ஜீவனுக்கு இம்மலமானது இத்தன்மையை கிடைக்கப் பெருமல் தடுப்பதால் सर्वज्ञबाधक மென்று குறிப்பிடப்பட்டது.

24. பதி படலத்தில் 13-வது ஸூத்ரம்.

25. श्रीमन्मृगेन्द्रादौ कालस्य कलानन्तरोद्देशस्तु कलाया एव प्रपञ्चसृष्टयादावुपादानत्वेन प्राधान्यात् । कालनियत्योस्तु तदुपसर्जनत्वाभिप्रायेण । p. 306.

26. மேலும் मलशक्तेः कलनात् निवर्तनात् क्षेपणाद्वा कलेत्यर्थः என்றும், कर्तृशक्त्यभिव्यञ्जकत्वं कलात्वं என்றும் 3-ம் ஸூத்ரத்திற்கான உரையில் குறிப்பிடப்படுகிறது.

தன்மைகளையும் ''முழுமையின்றி''[27] ஓர் பகுதியளவில் வெளிப்படுத்தக் கூடியதும், அணுவினுடைய செயல்திறனைத் தூண்டக் கூடியதுமாகும்.

அணுவான ஜீவாத்மாவிற்கு சித் சக்தியை சிறிது வெளிப்படுத்தும் தன்மை கொண்ட கலையினால் அனுபவிக்கும் (போகத்வம்) தன்மை கிடைக்கிறது. இது முதல் பந்தகமாகும்.

एकदेशेन मलनिवर्तनद्वारा चैतन्यव्यञ्जकत्वेन भोगहेतुत्वम् । किञ्च प्राथमिकञ्च । (p. 308)

மேலும் ஜீவாத்மாவிற்கு அறியப்படும் தன்மை (ज्ञत्वं) செயல்படும் தன்மை (कर्तृत्वं) ஆகியவை கிடைக்காது என்ற காரணத்தினாலேயே முன்னர் अणुनिरुं என்ற லக்ஷணம் கூறப்பட்டது.

கலை தத்வத்திற்குப் பின் வித்யாதத்வம் அணுவினுடைய போகத்திற்காக தோன்றியது. கலை (தத்வம்)யினால் செயல்திறன் வெளிப்படுத்தப்பட்டதான (அணுவினுடைய) புத்தியை ஆதாரமாகக் கொண்ட செயலுக்கு க்ரஹிக்கத் தக்கப் பொருட்களை அறிவிப்பதற்காகத் தோன்றியதே வித்யா தத்வம் (p. 310): बुद्धिलक्षणकर्मण: बुद्ध्यात्मकस्य कर्मण: ग्राह्यस्य आलोकने ग्रहणे । तेन बुद्धिग्रहण - करणत्वं विद्यातत्त्वम् इति लक्षणम् । இவ்விதம் புத்தியின் அறியும் தன்மைக்கு காரணமாயிருப்பது வித்யா தத்வமே. புத்தியானது மட்பாண்டம் முதலியவை போன்று வஸ்துக்களை ஆத்மாவிற்கு உணர்த்துவதால் ஜடம் போன்றது (p. 311): ग्रहणयोग्यत्वं परप्रकाश्यत्वं जडत्वमिति यावत् । என்று 10-ம் ஸூத்ரத்திற்கான உரையில் உமாபதி குறிப்பிடுகிறார்.

---

27 ஒவ்வொரு ஜீவாத்மாவிற்கும் ஆவரக (மறைக்கும்) மலமானது தனித்தனியே இருந்து அதனைக் கலை நிவர்த்தி செய்யுங்கால் சித்சக்தி (चिच्छक्ति) முழுமையாக வெளிப்பட்டு (புலப்பட்டு) 'எல்லாம் அறிந்த தன்மை' கிடைக்கப்பெறும் என்ற ஐயப்பாட்டிற்கு இடங்கொடாவண்ணம் ''முழுமையின்றி சிறிதளவே'' (मनाक्) என்று உரைக்கப்பட்டது. இதனையே 5-ம் ஸூத்ரமும் விளக்குகிறது.

க்ரஹண கர்மாவை (அறிவிக்கக் கூடிய அல்லது க்ரஹித்துக் கொள்ளக்கூடிய ஆற்றலை) கொண்டது புத்தி; வித்யையை (உப)கரணமாகக் கொண்ட புத்தியில் வஸ்துக்களின் தன்மை அறியப்படுகிறது. இந்த வித்யாதத்வமானது ஆத்மாவின் இரண்டாவது பந்தமாகும்.

கலையினல் வெளிப்படுத்தப்பட்ட செயல் திறனைக் (கர்த்ருசக்தி) கொண்ட மனிதன் மலத்தினல் மறைக்கப்பட்டு புத்தியினில் கிரகிக்கப்பட்டிருக்கும் வஸ்துவினது தன்மையை தன்னல் சுயமாக உணர இயலாது கண்களின் துணையை நாடுகிருன். அப்பொழுது புருஷனுக்கு உதவும் பொருட்டு வித்யா எனும் கருவியை அனந்தேச்வரர் படைத்தார் (p. 316):

कलाव्यक्तकर्तृशक्तिः पुरुषः, गोचरं बुद्ध्याख्यं तदुपारूढं बाह्यमर्थं वा मलावृतत्वेन स्वयं द्रष्टुमसामर्थ्यात् दृशोऽनुग्रहमपेक्षते । तदर्थं तस्य पुरुषस्य उपकाराय ईशः अनन्तेशः विद्याख्यं व्यवहितविषयघटादिग्राहकचक्षुराद्यपेक्षयाऽव्यवहितविषयबुद्धिग्राहकत्वादात्मनः परं करणम् असृजत् ।

பிறகு ராகம் முதலான மற்ற மூன்றின் தோற்றத்தை விவரிக்கிருர். கலை, வித்யை ஆகிய இரண்டின் தன்மையினல் விஷயங்களில் நாட்டங்கொண்ட மனிதனுடைய அந்த அந்த விஷயங்களின் மீதான விருப்பத்தை உண்டாக்கவே 'ராகம்'[28] என்கிற மூன்ருவது பந்தகதத்வம் தோன்றியது (p. 316):

कलाविद्याभ्याम् उक्तप्रकारेण विषयेषु प्रवृत्तस्य पुंसः प्रसक्त्यर्थं विषयेच्छाशक्त्यभिव्यक्त्यर्थं रागतत्त्वमपि प्रवर्तते ।

'காலம்' என்கிற நான்காம் பந்தகம் லவம்[29], க்ஷணம் (நொடி), பகல், இரவு, நாள் போன்ற தன் உட்பிரிவுகளால்

28. इच्छाशक्त्यभिव्यक्तिकरणत्वं रागतत्त्वस्य लक्षणम् । (p. 318)

29 ஹேமசந்த்ராசார்யரின் அபிதான சிந்தாமணி II. 50-51:
கண் இமைக்கும் நேரத்தை 'நிமேஷம்' என்பர். இவ்விதம் 18 முறை இமைத்தால் அது 'காஷ்டா' என்றும், இரு காஷ்டைகளுக்கான நேரத்தை 'லவம்' என்றும், 15 லவங்களைக் கொண்டது ஒரு 'லேசம்' என்றும், இரு லேசங்களைக் கொண்டது ஒரு க்ஷணமென்றும்....... கூறுவர்.

மனிதனுடைய வினைப் பயனை அனுபவிக்க அவனைத் தூண்டு-வதேயாகும். மேலும் பானை (கடம்) முதலான உலகத்திலுள்ள அனைத்துப் பொருட்களின் கடந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்-காலத் தொடர்புக்கும்[30] (செய்கைக்கு அல்லது வ்ருத்திக்கு) காரணமாயிருப்பதுவே காலம். (ஸூ. 48-49):

अतीतवर्तमानैष्यद्वृत्तीनां कारणं तु यत् ।।
स काल इति मन्तव्यो भोग्यार्थोत्पादको नृणाम् ।

என்பது கால லக்ஷணமாகும்.

வாஸனாத்மகமான (மனதில் பதியும் விஷயங்களின் அறிவு தொடர்பான எண்ணங்கள்) ராகம், நிரந்தர சிவத்யானத்-தினாலோ அல்லது ஈச்வர சக்தி ரூபமான தீக்ஷையினாலோ அழிவதால் மனிதன் விருப்பு வெறுப்பற்றவனாக (விரக்தனாக) ஆகக் கூடும் என்று 43-ம் ஸூத்ரம் கூறுகிறது.[31]

முன்னர் கூறியவாறு பொருட்களின் உற்பத்திக்கு காரணம் காலமே. இது குறித்து 49 முதல் 52 வரையிலான ஸூத்ரங்-களுக்கான உரையில் உமாபதி குறிப்பிடுவது (p. 329):

इदानीं जायमानो घटः, इतःपूर्वं दण्डचक्रादिसकलकारणसमवधाने सत्यपि...... என்ற முறையில் கால வேற்றுமையினால் பானை போன்ற பொருட்களின் உற்பத்தி விளக்கப்படுகிறது— काले तु मति जायेरन् सर्वे भावाश्च सर्वथा ।। (ஸூ. 52) என்பது காலம் இருப்பதற்குச் சான்று (ப்ரமாணம்). அந்த அந்த காலத்தில் உரியவை தோன்றுகின்றன. வஸந்த காலத்தில் பலாச புஷ்பம் (புரசம் பூ) கிடைக்கிறது. மழைக்காலத்தில்தான் தாழம்பூ கிடைக்கிறது.

---

30. பானையானது செய்யப்படுவதற்கு முன் மண்ணுருண்டை-யாகவும், செய்யப்பட்ட பின் பானையாகவும், பின் அழிந்த பிறகு வேறோர் மாற்றமடைந்ததாகவும் காணப்படுவதற்குக் காரணம் காலம் என்பது கருத்து (ஸூ. 50-51).

31. ईश्वरप्रणिधानेन दीक्षया क्षपितेन वा ।
राागो निवर्तते पुंसस्सर्वथा नैकदेशतः ।।

பாலே முதலியவற்றின் உற்பத்தி விநாசத்திற்கு காலம் தான் காரணமென்று கூறப்பட்டதை ஆக்ஷேபித்து கர்மா தான் காரணமென்கிற வாதத்திற்கு இவ்வாறு ஸமாதானமளிக்கப்படுகிறது. (p. 329): कालं विना कर्ममात्रस्य कार्यजनकत्वे यागानन्तरमेव स्वर्गोत्पत्तिप्रसङ्गः । तथा च कालसहकृतस्यैव कर्मणः उत्पादकत्वमिति । யாகம் (ஜ்யோதிஷ்டோமம் முதலானவை) செய்த பின்பு தான் அவற்றிற்குப் பலன் கிடைக்கிறது. அவ்வகையில் காலத்தினுடைய துணையினலேயே கர்மாவிற்கு தோற்றுவிக்கும் தன்மை சேருகிறது.

இறுதியில் 'நியதி' (விதிமுறை அல்லது கட்டுப்பாடு) எனப்படும் ஐந்தாம் பந்தகம் விளக்கப்படுகிறது. செயல் (க்ரியா), பார்வை (த்ருக்), விருப்பம் (இச்சா) ஆகியவற்றின் தோற்றத்திற்குக் காரணமாயமைந்த கலே, வித்யை முதலிய பந்தகங்களினுல் மனிதன் போகத்தில் ஈடுபடுகிருன். அவனுடைய விளேகளுக்கு அவன் ஈட்டிய பயன் மற்றவர்களேச் சென்றடையாமல் அவனேயே அனுபவிக்க வைப்பதுவே நியதி எனும் பந்தகம். இது சிவனுடைய கட்டளேயினுல் இயங்குகிறது.[32] மேலும் வினேயைச் செய்தவன் விருப்பப்படாவிடினும் அப் பயனே அனுபவிக்கவும், செய்யாதவன் விருப்பப்பட்டாலும் அப்பயனேப் பெற இயலாதிருக்கவுமே 'நியதி' இயங்கப்படுகிறது. எப்படி அரசனுடைய கட்டளேயின்றி திருடர்கள் பிறர் ஈட்டியதைத் திருடுகின்றனரோ அவ்வாறு நியதி இல்லேயேல் ஒருவன் செய்த நற்செயலின் பயனே மற்றொருவன் அனுபவிக்கக் கூடும். ஆகவே இந்நியதி என்பது வினேப்பயன்களே அவற்றிற்குரியோர் அனுபவிப்பதற்கேற்ப வழி வகுக்கும் ஓர் விதிமுறை (भाग्य नियामकम्). ஆதலால் இது ஐந்தாம் பந்தகமாக அங்கீகரிக்கப்படுகிறது. மேலும் பார்வைக்கு அப்பாற்பட்ட பயனேக் கொண்ட வினேயுள்ளவர்களுக்கு அதற்கேற்ப பயன் கிட்டுகிறது— तस्मान्नियतितत्त्वन्तु पुंसां भाग्यनियामकम् ॥ என்று இறுதியில் ஜீவனுடைய போகத்தைக் கட்டுப்படுத்தும் அல்லது முறைப்படுத்தும் பந்தகம் நியதி தத்வம் என்று இப்படலத்தை முடிக்கிருர்.

---

32. भोगायाभिप्रवृत्तस्य कलाविद्यादिवृत्तिभिः ।
कर्मणामार्जितानां तु फलापहरणे सति ॥
तद्विनाशे प्रवृत्ते यन्नियतिः शिवशासने । (ஸ. 80-1)

षष्ठः पुंस्तत्त्वपटलः

கலை முதலான ஐந்து பந்தகங்களை விளக்கிய பின் இவ்வைந்தினால் பின்னப்பட்ட (தொகுக்கப்பட்ட) வடிவமான 'பும்ஸ்தத்வ'மெனும் ஆறும் பதார்த்தம் இப்படலத்தில் விளக்கப்படுகிறது. முதலில் 'புருஷன்' என்பதன் இலக்கணம் கூறப்படுகிறது —

पञ्चकञ्चुकसंयुक्तः प्रकृतिं भोक्तुमुद्यतः ।
अविद्यादिसमायुक्तः पुरुषः परिकीर्त्तितः ।।

கலை, வித்யை, ராகம், காலம் மற்றும் நியதி ஆகிய ஐந்து சட்டைகளைக் கொண்டும் அவித்யை முதலியவைகளைக் கொண்டும் ப்ரக்ருதியை அனுபவிக்க முனைவதே 'புருஷ'னென்பது. ப்ரக்ருதியின் இலக்கணம் கூறுமிடத்தில் (ஸூ. 17) :

तच्च मायोदभवं यस्मात् कलातः स्थूलतां गतमिति ।

என்று குறிப்பிடப்படுகிறது. அதாவது மாயையின் பிறப்பிற்கு எது காரணமோ, அல்லது மாயை எதனின்று தோன்றுகிறதோ அது ப்ரக்ருதி எனப்படும். இப்ப்ரக்ருதி தத்வத்திலிருந்து குணம் முதலான தத்வஸமூகம் (தத்துவங்களின் தொகுப்பு) நேரடியாகவும் (साक्षात) முறையாகவும் (परम्परया) தோன்றுகின்றன. மேலும் பரமேச்வரனான சிவனுடைய சக்தி விசேஷங்களால் எது முதன் முதலில் அசைக்கப்பட்டதோ அதுவே ப்ரக்ருதி எனப்படுகிறது. இவ்விதம் குணங்களின் (குணம் முதலான தத்துவங்களின்) உபாதான காரணமாகவும் ஸ்ரீகண்டனான சிவனின் முதல் அசைவுக்குட்பட்டதாகவும் இருப்பது ப்ரக்ருதி.[33]

இவ்வாறு 'ப்ரக்ருதியுடன் இணைந்திருக்கும் தன்மையுடையவன்' (प्रकृत्यालिङ्गितः पुरुषः) எனும் புருஷன் ஸகல பசுவே.[34] விஞ்ஞானகலரும், ப்ரளயாகலரும் இத்தத்வத்தில்

33. एवं च गुणादितत्त्वोपादानत्वं श्रीकण्ठप्रथमक्षोभ्यत्वंच
प्रकृतितत्त्वस्य लक्षणद्वयं द्रष्टव्यम् ।। (p. 360)

34. न विज्ञानाकलस्तेन नापि प्रलयकेवलः ।।
पुरुषाख्यां लभते यस्मान्नाविद्यादिविवर्जितः ।
तस्मात् सकला एवाणुर्लभते पुरुषाह्वयम् ।। ஸூ. 2-3

சேர்த்தியல்ல. 'கலை' முதலான ஐந்து பந்தகதத்வத்தின் அமைப்புதான் புருஷனெனில் ப்ரக்ருதியின் போகத்திற்கு அவைதான் காரணம் எனும் ஐயப்பாடு உரிய முறையில் நிராகரிக்கப்படுகிறது. இதே போல் அவித்யை முதலியவையும் (ப்ரக்ருதி போக காரணம்) நிராகரிக்கப்படுகின்றன (pp. 352-53). ஜீவனுக்கு இப்ப்ரக்ருதி தொடர்பில் எந்த அவித்யை உள்ளதோ அது 'பும்ஸ்த்வமல'மென்று கூறப்படுகிறது. பும்ஸ்தத்வத்திலுள்ள கலை முதலான தத்வங்களும், ப்ரக்ருதி தத்வத்திற்கும் சுத்தி (தூய்மையடைவித்தல்) தனித்தனியே விதிக்கப்பட்டுள்ளதை 10-ம் ஸூத்ரம் விளக்குகிறது.

ஸ்ரீ கண்டபுவனத்திற்கு ஆதாரமாயிருக்கும் ப்ரக்ருதி தத்வத்திலிருந்து பசுவை (ஸகல பசுவை) விடுவித்து, ஆசார்யன் நியதி தத்வத்தில் இணைக்கிருர். ஸ்தூல, ஸூக்ஷ்ம என்ற இரு விதமான பும்ஸ்த்வமலத்தில் ஸ்தூல ரூபமானது - கால, அக்னி, ருத்ர, ஆகிய புவனங்களில் தூய்மைப்படுத்தப்படும் பொழுது முழுமையாக அறுபடுகிறது. ஸூக்ஷ்ம ரூபமோ ப்ரக்ருதி தத்வத்தில்தான் துண்டிக்கப்படுகிறது. ஆகையால் ப்ரக்ருதி தத்வத்தின் சுத்தி (தூய்மை படுத்தல்) நடைபெறும் வரை ப்ரக்ருதியுடன் இணைந்திருப்பதால் புருஷ தத்வமென்று கூறப்படுகிறது (ஸூ. 16):

एवं पुरुष आख्यातः प्रकृत्यालिङ्गितः सदा ॥

மேலும் 'ப்ரக்ருதியென்பது ஸத்வ-ரஜ-தம ஆகிய முக்குணங்களின் ஸமமான நிலையே என்னும்போது அக்குணங்களுக்கு உபாதானமாய் இருப்பது ப்ரக்ருதி என்ற வாக்யம் எவ்வாறு பொருந்தும்?' என்கிற பூர்வ பக்ஷம் இவ்வாறு பதிலளிக்கப் படுகிறது: சைவ ஸித்தாந்தத்தில் 'குணங்களின் ஸமநிலையே ப்ரக்ருதி' என்பது அங்கீகரிக்கப்படவில்லை. இதனின்று வேறுபட்டதே ப்ரக்ருதி. ஏனெனில் ஸமநிலை என்பது ஒன்ருன போதிலும் அது குணங்களின் நிலையைக் குறிப்பதாலும், குணங்கள் ஒன்றிற்கு மேற்பட்டதாலும், ஜடமாகவும், அசேதனமாகவும் இருப்பதாலும், பானையைப் போன்று காரணம் இருக்கக்கூடிய தன்மையுடையதாலும்[35] (कारणपूर्वत्वम्)

35. மண் என்ற காரணத்தின் விளைவு அல்லது மாற்றமே (கார்யம்) பானை என்பதால் அது (பானை) காரணத்தை முதலில் உடைய/கொண்ட தன்மை என்று குறிப்பிடப்படுகிறது.

குணங்களின் காரணமே ப்ரக்ருதியாகும். அதனுல் அது குணங்களிலிருந்து வேறுபட்டது.

ஸத்வம், ரஜஸ், தமஸ் ஆகிய முக்குணங்களின் தன்மைகளாக ப்ரவ்ருத்தி, நிவ்ருத்தி ஆகியவை குறிப்படப்படுகின்றன. ஒரு செயல் ஏற்பட ஸத்வ குணமும், அச்செயலில் ஈடுபட ரஜோ குணமும், செயலிலிருந்து விலக (அல்லது செயலின் அழிவுக்கு) தமோ குணமும் காரணமாக அமைகின்றன என்று முன்னர் உரைக்கப்பட்டது. இம்மூன்றினுடைய தன்மைகளும் இயல்பாகவே இருக்கும் பொழுது ஸ்ரீகண்டனுன பரமேச்வரனின் முதல் அசைவுக்கு உட்படும் தன்மை எங்ஙனம் பொருந்தும் என்பது நன்கு விளக்கப்பட்டு முடிவில், ஸ்ரீகண்ட பரமேச்வரனின் அசைவுதான் குணங்களின் தன்மைகளான ஈடுபடுதலுக்கும் (प्रवृत्ति), விலகலுக்கும் (निवृत्ति) காரணமென்று நிர்ணயிக்கப்படுகிறது.

மேலும், மேற்கொண்ட செயலில் உறுதியாயிருக்கும் தன்மை (स्थैर्यम्), மலை போன்று அசையாமலிருக்கும் தன்மை (धैर्यम्), விரைந்து செயல்படும் தன்மை (दाक्ष्यम् = क्षिप्रकारित्वम्), மென்மை (मार्दवम्), இலேசாகவிருக்கும் தன்மை (लघुता), — அதாவது தேஹத்தை நிற்கவும் நடக்கவும் விரைவாக இயக்கும் தன்மை போன்றவை ஸத்வ குணத்திஞலேற்படும் விளைவுகள் (सत्वगुणकार्यम्); வீரம் (पराक्रमम्), குரூரம் போன்றவை ரஜோ குணத்தினுல் ஏற்படும் விளைவுகள்; அவ்வாறே தாமதம், விருப்பமின்மை ஆகியவை தமோ குணத்தின் கார்யங்கள் என்று இவை 37 முதல் 40 வரையிலான நான்கு ஸூத்ரங்களில் வரிசைப்படுத்தப்படுகின்றன.

முதலில் ப்ரக்ருதி, பின் ப்ரக்ருதியிலிருந்து குண தத்வங்கள், அதன்பின் குணதத்வங்களிலிருந்து புத்தி தத்வமென்று தத்வங்களின் தோற்றம் விளக்கப்படுகிறது. சைவ சாஸ்த்ரத்தில் புத்தியின் இலக்கணம் இவ்வாறு கூறப்படுகிறது: ''முயற்சி செய்யும் தன்மை கொண்டதே புத்தி தத்வம்'' (p. 370) अध्यवसायव्यापारकत्वं बुद्धितत्त्वमिति लक्षणम् । என்று ரஜஸ், தமோ குணங்கள் அடங்கியும் (அழுந்தியும்) ஸத்வ குணங்கள் மேலோங்கியும் இருக்கக்கூடிய குண தத்வத்தின் ஒரு மாற்றமே புத்தி எனப்படுகிறது. புத்தி தத்வம் இருப்பதென்பதை வேருேர் முறையிலும் கூறுகிருர். ஒவ்வொரு செய்கையினுலும் மனதில்

ஏற்படும் கருத்துப் பதிவு (संस्कार) சார்ந்திருக்க 'புத்தி' ஓர் அடித்தளமாயமைகிறது. இக்கருத்துப் பதிவே 'அபூர்வ'மென்று குறிப்பிடப்படுகிறது. இக்கருத்துப் பதிவானது அது தொடர்பான செய்கைகள் முடிந்த பின்பும் (அதற்கு) தக்க பலன் கிடைக்கும் வரை தொடர்கிறது.[36] இவ்விதம் புத்தியே கருத்துப் பதிவிற்கு அடித்தளமாக அமைவதால் புத்தியின் உளதாந்தன்மை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.

உழவுத் தொழில் வயலில் நடைபெறுகிறது, உழவனிடமல்ல. அவ்வாறு ஒரு செயலினால் ஏற்படக்கூடிய கருத்துப் பதிவு புத்தியைத்தான் சாருமேயன்றி, ஒரு மாறுதலுமில்லாத புருஷனைச் சாராது. ஆகவே எங்கு செய்கைகள் கருத்துப் பதிவினை ஏற்படுத்துகின்றனவோ, அது புத்தியென்றும் அது அக்கருத்துப் பதிவிற்கு அடித்தளமாக விளங்குகிறதென்றும் முடிக்கிறார் (p. 372):

यत्र क्रियास्संस्कारं कुर्वन्ति सा मतिरिति, तदाश्रयत्वेन मतिसिद्धिरित्यर्थः ।

புத்தியின் உட்பொருள் தன்மை அதன் எட்டு குணங்களின் உளதாந்தன்மையினாலும் நிலை நாட்டப்படுகிறது. தர்மம், அதர்மம், ஞானம், அஞானம், வைராக்யம், அவைராக்யம், ஐச்வர்யம், அனைச்வர்யம் எனும் எட்டு குணங்களும் புத்திக்கே உரியவை. தவிர, இவ்வெட்டு குணங்களும் தமது தோற்றத்தினால் புத்தியை தமக்குரிய வகையில் வேறுபடுத்திக் காட்டுவதால் 'பாவாஷ்டக'மென்று கூறப்படுகின்றன.

முதலில் 'தர்ம'மென்பது 'யம', 'நியம'மென்று இரு வகைப்படும். இதில், சாஸ்த்ரத்தில் சொல்லப்படாத கர்மாக்களை விடுத்து மனதைக் கட்டுப்படுத்துவதே 'யம'மாகும். இது அஹிம்சை, ஸத்யம், திருடாமை (अस्तेयं), மனத் துறவு (ब्रह्मचर्यं), எண்ணற்ற குற்றம் புரிந்தோரிடமும் தூயமனதுடன்

---

36. எடுத்துக்காட்டாக குளம் வெட்டுதல், யாகஞ் செய்தல் போன்ற நற்பணிகள் அவை முடிக்கப்பட்ட பின்னரும் அதற்குரிய பலன்களாகிய 'ஸ்வர்கபதவி' போன்றவை அடையப் பெறும்வரை 'கருத்துப்பதிவு' அல்லது 'ஸம்ஸ்கார'மென்பது தொடர்கிறது. இதை 46-ம் ஸூத்ரம் விளக்குகிறது.

அன்பாக, ஸமமாக பழகும் தன்மை (अकल्कता) ஆகிய முறையில் ஐந்து வகைப்படும்.[37] அவ்வாறே 'நியம'மென்பது, சாஸ்த்ரத்தில் சொல்லப்பட்ட நித்ய (பூஜை முதலிய அநுஷ்டானங்கள்), நைமித்திக (ஜ்யோதிஷ்டோம ஹோமம் முதலியவை) கர்மாக்களில் புலன்களை ஈடுபடுத்துவதாகும்.

देवतादर्शनादिज्योतिष्टोमादिषु नित्यनैमित्तिककर्मसु विषयेषु योऽयम् इन्द्रियाणां ज्ञानकर्मेन्द्रियाणां स्थापनं स नियमः ।

கோபமின்மை (अक्रोधः), குருவிற்கு பணிவிடை புரிதல் (गुरुशुश्रूषा), நீரினாலும், மண்ணினாலும் உடம்பைத் தூய்மைப் படுத்தல் (शौचम्), பொருள் கிட்டினாலும், கிடைக்காத நிலையிலும் நிலையான மனமகிழ்ச்சி (सन्तोषः), தீய நோக்கத்துடன் பிறரால் ஏற்படுத்தப்படும் பாதிப்பினை அறிந்தும், அறியாதது போலும், ஊமை போலும் அனுபவித்தல் (आर्जवम्), ஆகிய ஐந்தும் நியமங்கள்.[38] இவ்விதம் தர்மம் பத்துவிதமாகும்.

பின்னர் எண்பது வகை ஞானத்தை விளக்க முதலில் 'ஞான'மென்பதின் இலக்கணம் கூறப்படுகிறது. இதுவே மோக்ஷத்திற்குக் காரணமாயிருப்பதால் இதற்கு 'ஸித்தி' என்றும் பெயர் (p. 377):

तस्मादेव ज्ञानात् कैवल्यस्य मोक्षस्य संसिद्धिरिति कृत्वा ज्ञानमपि सिद्धिरित्युच्यते ।

எட்டு குணங்களின் வரிசையில் மூன்றாவதான வைராக்யம் 88-ம் ஸூத்ரம் முதல் விவரிக்கப்படுகிறது. இது காரணத்தை அடிப்படையாகக் கொண்ட வகையில் பத்து விதமாகும்.

நான்காவதான ஐச்வர்யம் 98-ம் ஸூத்ரம் முதல் விளக்கப்பட்டுள்ளது. இது மொத்தம் 64 ஆகும். அதாவது அணிமா முதலான எட்டு அடிப்படை ஐச்வர்யங்கள்[39] வெவ்வேறு வர்கத்-

---

37. *PB* pp. 373-75 ஸூ. 53-60.
38. *Ibid.*, pp. 374, 376-77.
39. அணிமா முதலான எட்டு ஐச்வர்யங்களின் லக்ஷணத்தை 99-ம் ஸூத்ரம் முதல் 104-ம் ஸூத்ரம் வரையில் விளக்குகிறார் (pp. 388-90).

திற்கு—பிசாசர்கள், ராக்ஷஸர்கள், தெய்வமாகக் கருதுவதற்குகந்த யக்ஷ, கந்தர்கள், இந்திரலோகத்திலிருப்போர், சந்திரலோகத்தினர், ப்ரம்மலோகத்தினர், நான்முகன்—என்று அந்த அந்த இடத்திற்கேற்ப மாறுபட்டு 64 வகையாகக் கணக்கிடப்படுகிறது.

இறுதியில் புத்தி தத்வ விளக்கமானது 124-ம் ஸூத்ரத்தில் மீண்டும் சுருக்கமாகக் கூறப்படுகிறது.

धर्मो दशविधो, ज्ञानमशीतिः, शतसंख्यया ।
विरागोऽष्टधैश्वर्यम्, अधर्मो दशधा मतः ।।

अज्ञानं तु चतुष्षष्टिः, अवैराग्यं शतं भवेत् ।
अष्टसंख्यमनैश्वर्यं, षट्त्रिंशच्चतुश्शतम् ।।

தர்ம, அதர்ம, ஞான, அஞான, வைராக்ய, அவைராக்ய, ஐச்வர்ய, அனைச்வர்ய ஆகிய 'பாவாஷ்டக'மெனும் இத்தொகுதியில் தர்மம் பத்து, அதர்மம் பத்து, ஞானம் எண்பது (காரண வேறுபாட்டினுல் அடிப்படை ஞானங்கள் எட்டும் ஒவ்வொன்றும் பத்து வகை), அஞானம் அறுபத்தி நான்கு, விராகம் அல்லது வைராக்கியம் பத்து; அவையும் காரண வேறுபாட்டினுல் ஒவ்வொன்றும் பத்துவகை. இவ்விதம் வைராக்கியம் நூறுவகை. அதேபோல் அவைராக்கியமும் நூறுவகை. எட்டு விதமான ஐச்வர்யங்கள் ஒவ்வொன்றும் எட்டு விதமான இடத்திற்கு மாறுபடுவதன் மூலம் அறுபத்தி நான்கு. அனைச்வர்யம் எட்டுவகை. இவ்விதம் புத்தியின் இயற்கூறுகள் (mental states) விவரிக்கப்பட்டுள்ளன.

தர்மம் முதலான எட்டு ஆரைகள் (spokes) கொண்ட புத்திதத்வத்தின் பெரிய ஆழியில் அணுக்களான ஜீவாத்மாக்கள் முடிவினைக்காணுது மீண்டும் மீண்டும் உழல்கின்றனர். முதலில் புத்திதத்வத்திலிருந்து அஹங்காரம் (நான், எனது, எனும் தன்மை)என்ற தத்வம் தோன்றுகிறது. இந்த அஹங்காரம் ஸத்வ குணம் மேலோங்கியிருக்கும் பொழுது தைஜஸம் (तैजस) என்றும் ரஜோ குணம் மேலோங்கியிருக்கும் பொழுது வைக்ருதம் (वैकृत) என்றும், தமோகுணம் மிகுதியாயிருக்கையில் பூதாதி (भूतादि)-யென்றும் மூவகைப்படும் (ஸூ. 140—142).

ஸாத்விகமான தைஜஸ அஹங்காரத்திலிருந்து 'மனஸ்' மற்றும் உணர்தற்குரிய ஐம்பொறிகள் (ஞானேந்திரியங்கள்) செவி, தோல், கண், நாக்கு, மூக்கு ஆகியவை தோன்றுகின்றன.

ராஜஸாஹங்காரமான வைக்ருதத்திலிருந்து தொழில் புரிதற்குரிய இந்திரியங்கள் (கர்மேந்திரியங்கள்) 'வாக்' எனும் வாய், கை, கால், மற்றும் மலம் வெளியேறும் இந்திரியங்களான பாயு, உபஸ்தம் ஆகியன தோன்றுகின்றன.

தமோகுணம் மிகுந்த பூதாஹங்காரத்திலிருந்து பஞ்ச மஹா பூதங்களுக்குக் காரணமான ஓசை (शब्द), ஊறு அல்லது ஸ்பரிசம் (स्पर्श), ஒளி (रूप), சுவை (रसन), மணம் (गन्ध) ஆகிய ஐந்து தன்மாத்ரைகள் தோன்றுகின்றன.

தைஜஸாஹங்காரத்திலிருந்து தோன்றிய 'மனஸ்' மத்திம பரிமாணமுடையது. இங்கு நையாயிகர்களுடைய கொள்கையான 'மனஸ் அணுபரிமாண' மென்பதும் 'எங்கும் இருப்பது' என்பதும் நிராகரிக்கப்படுகிறது. அணுவாகவோ, மஹத்தாகவோ இருக்கும் பக்ஷத்தில் எல்லா இந்திரியங்களுடனும் ஒரே ஸமயத்தில் தொடர்பு கொண்டு எல்லாவித ஞானமும் ஏற்படக் கூடும் என்பதனல் 'அணு' என்ற பக்ஷமும் 'மஹத்' என்ற பக்ஷமும் நிராகரிக்கப்படுகின்றன.

மெய் (त्वक्), வாய் அல்லது நாக்கு (रसना), மூக்கு, இவை மூன்றும் தத்தம் இடத்திலிருந்தே முறையே ஊறு (स्पर्श), சுவை, மணம் ஆகியவற்றை அநுபவிக்கக் கூடியவை. அவ்விதமல்லாமல் அவை வஸ்து அல்லது விஷயமுள்ள இடத்திற்குச் சென்று அவ்விஷயத்தைக் கிரஹிக்கக் கூடியவை எனும் வாதமும், கண் தேஜஸ்ஸானபடியால் அதுவும் பொருளைச் சென்றடைந்து உருவத்தைக் கிரஹிக்கக் கூடியது எனும் வாதமும் பொருத்தமல்ல. செவி ஒன்றுதான் ஓசை எங்கிருந்து கேட்கப்படுகிறதோ, அங்கு சென்று ஓசையைக் கிரஹிக்கிறது. ஆகவேதான் ஒரு மனிதனுக்குத் தன் வீட்டிலிருந்து கொண்டே நாற்றிசையிலும் ஏற்படும் ஓசையைக் கேட்கும் அநுபவம் கிடைக்கிறதென்று சிலர் கருதுகின்றனர்.

சைவ ஸித்தாந்தத்தில் வீசீதரங்க ந்யாயம்[40], கதம்ப முகுல ந்யாயம்[41] ஆகியவற்றின் அடிப்படையில் மூலசப்தத்திலிருந்து தொடர்ச்சியாக (பரம்பரையாக) செவியருகில் வரும் ஓசையே அறியப்படுகிறது எனும் நியாய மத சித்தாந்தம் ஏற்றுக் கொள்ளப்படுகிறது (ஸூ. 188-89). ஆகவே அத்வைத மதத்தில் குறிப்பிட்டவாறு சப்தம் எங்கிருந்து கேட்கப்படுகிறதோ, செவி அங்கு சென்று கிரஹிக்கிறது எனும் கொள்கை மறுக்கப் படுகிறது (pp. 426-27).

श्रोत्रं प्राप्तः शब्द एव गृह्यते । स एव बाणादिपातवत्, यथा बाणादिपाते सति तत्तत्पातविशेषेण तत्तद्देशीयत्वादिकमनुमीयते, तद्वदिहापि तत्तद्देशीयानुकूलवाय्वादिना शब्दस्यापि तत्तद्देशीयशब्द-प्रभवत्वादिकमनुमातुं शक्यत इत्यर्थः ॥

கண் முதலான ஞானேந்திரியங்கள் ஆத்மாவின் சித்சக்தியை மட்டுமே வெளிப்படுத்த முயலுமேயன்றி கிரியா சக்தியை வெளிப்படுத்த இயலாது. எனவே கிரியா சக்தியை வெளிப்-படுத்த கர்மேந்திரிய பஞ்சகமான வாக் (வாய்), கை, கால், பாயு மற்றும் உபஸ்தம் ஆகியவை அங்கீகரிக்கப்படுகின்றன (ஸூ. 197). அனாதியான மலத்தினால் மறைக்கப்பட்டு, தமோ குணத்-தினால் ஞான-க்ரியா சக்திகளை வெளிப்படுத்த இயலாமல் பாறை போல் ஆத்மா விளங்குகிறது. ஆத்மாவை மறைக்கும் சக்தியை விவேகத்தால் நீக்கி மனிதன் ஞான-க்ரியா சக்திகளை அறிவதால் இந்திரியங்கள் பொருட்களின் தன்மையை வெளிப்படுத்தக் கூடியவை (अभिव्यञ्जकानि) என்று கூறப்படுகிறது.

---

40. ஒரு குளத்தில் சலனமற்றிருக்கும் நீரின்மேல் எறியப்படும் ஓர் சிறிய கல்லினால் ஏற்படும் சலனம் ஓர் அலையை ஏற்படுத்தி தொடர்ந்து பல அலைகள் உருவாகக் காரணமாகின்றது. அது போல் மூல சப்தத்திலிருந்து ஓசையானது தொடர் வரிசையில் செவியை அடைகிறது என்பதே இதன் கருத்து.

41. கதம்பமெனப்படும் மரத்தின் மொட்டுக்கள் அனைத்தும் ஒரே நேரத்தில் மலரும் தன்மை கொண்டவை. இதன் கருத்து யாதெனில் சமகால நிகழ்ச்சி என்பதாகும். வெளியில் இருக்கும் வெவ்வேறு ஓசைகள் ஒரே நேரத்தில் எழும்பி முன்னர் குறிப்-பிட்டவாறு தொடர்வரிசையில் செவியை அடைகின்றன-வென்பதை விளக்குவதே இந்ந்யாயத்தின் நோக்கமாகும்.

215-ம் ஸூத்ரம் முதல் பௌத்தர்களின் க்ஷணிகவாதம்[42] விளக்கப்பட்டு பின்னர் 218-ம் ஸூத்ரத்தில் நிராகரிக்கப்படுகிறது.

ஸாங்க்யர்களின் ஸத்கார்யவாதம் சைவசாஸ்த்ரத்திலும் அங்கீகரிக்கப்படுகிறது. ஒரு பொருள் முதலில் காரணமாக இருந்துகொண்டு பின்னர் கார்யமாக மாறுவதே ஸத்கார்யமெனப்படுகிறது. எடுத்துக்காட்டாக முதலில் விதை காரணமாக இருந்து பின்பு மரமாக மாறுவதுபோல் காரணத்தின் உருமாற்றமே கார்யமாகத் தோற்றமளிக்கிறது (p. 441):

यद्वस्तु कार्यकारणरूपेण भवेच्चेत् पूर्वक्षणे कारणात्मना उत्तरक्षणे कार्यात्मना वर्तते चेत् तदेव वस्तु तत्कार्यं प्रति कारणं भवेदित्यर्थः ।।

இங்ஙனமிருக்கையில் க்ஷணிகவாதம் அங்கீகரிக்கப்பட்டால் காரண கார்ய விளைவான ஸத்கார்ய வாதத்திற்கு பங்கம் ஏற்படும் என்பதனுல் க்ஷணிகவாதம் நிராகரிக்கப்படுகிறது (p. 442):

यतः क्षणिकवादाङ्गीकारे उपादानोपादेययोर्भेदाभेदपक्षद्वयेऽपि कार्यकारणभावव्यवस्था कार्यकारणभावो नोपपद्यत अत इत्यर्थः ।।

233-ம் ஸூத்ரத்தில் புத்தியே வெளியில் காணப்படும் பொருளாகத் தோற்றமளிப்பது என்று கூறி விளக்கப்படுகிறது. புத்தி அவ்வாறு தோற்றமளிக்கையில் அந்தந்தப் பொருளின் நிறத்துடனும் வேற்றுமையின்றி காணப்படுகிறது. நிறம் என்று குறிப்பிடப்படுவதை ஞானத்திலிருந்து வேறுபடுத்த இயலாதென்பது மேற்கோளுடன் நிலைநாட்டப்படுகிறது.

सहोपलम्भनियमादभेदो नीलतद्धियोः ।। என்று குறிப்பிடப்பட்டவாறு ''பொருளின் நிறமும் அதனைக் குறித்து ஏற்படும் அறிவும் இணைந்திருப்பதால் நிறத்திற்கும் அறிவிற்கும் வேற்றுமையில்லை.'' ஆனுல் ஓர் நிறங்கொண்ட பொருளின் அறிவும், மற்ருேர் நிறங்கொண்ட பொருளின் அறிவும் மாறக் கூடும்.

42. 'தோற்றமுடையதெல்லாம் நொடிப்பொழுதுதான் நிலைக்கும்' எனும் இக்கருத்தையுடையவர் பௌத்தர்களில் ஒரு பிரிவினராவர். இவர்கள் 'மாத்யமிக'ரெனப்படுவர்.

இங்கு வேறுபடுத்துவது நிறமே. எடுத்துக்காட்டாக பூமாலை ஒன்ருக இருப்பினும் பூக்களிலிருந்து கோர்க்கப்பட்ட நார் அல்லது நூல் வேறுபடுகிறது. அதுபோல் ஓர் பொருளின் தன்மையே அறிவிலிருந்தும் தனித்து அமைகிறது (p. 452) :

एवञ्च ज्ञानगतभेदहेतुत्वेन ज्ञानातिरिक्तो हेतुस्सिद्धः ।।

இவ்வாறு பொருளின் தன்மையென்பது அறிவிலிருந்து தனித்து நிலைநாட்டப்பட்டதன் நோக்கம் 240-ம் ஸூத்ரத்தில் கூறப்படுகிறது. அறிவிலிருந்து வேறுபட்ட இப்பொருளின் தன்மையே க்ஷணிகமானதால் மாத்யமிகர்கள் தமது கொள்கையை இவ்விதம் அமைத்துக் கொள்வதே பொருத்தமானதென்று உரைக்கப்படுகிறது (p. 453) :

ज्ञानातिरिक्तार्थस्य माध्यिनत्वात् तत्क्षणिकत्वेन ज्ञानस्य क्षणिकत्वं माध्यमिकादिभिरभ्युपगन्तुमुचितं न तु स्वतः प्रत्युत नित्यत्वव्यापकत्वयोस्साधितत्वात् इति भावः ।।

நீர், நிலம், நெருப்பு, வாயு, ஆகாயம் ஆகிய பஞ்சபூதங்களின் குணங்கள் (தன்மாத்ரைகள்) சுவை, மணம், ஒளி, ஊறு மற்றும் ஓசை என்று முன்னர் குறிப்பிடப்பட்டது. இத்தன்மாத்ரைகள் ஸ்தூலாவஸ்தையிலுள்ள பஞ்சபூதங்களின் ஸூக்ஷ்ம ரூபங்களே என்று 245-ம் ஸூத்ரத்தில் அறிவிக்கப்படுகிறது.

ந்யாய மதத்தின் கொள்கையான குணங்களுக்கும் அவற்றைக் கொண்ட 'குணீ' என்பதற்கும் வேற்றுமையுண்டு என்பது சைவஸித்தாந்தத்தில் மறுக்கப்பட்டு, ஓசை முதலியவை மாறுதலின் காரணமாக 'குணம்' என்ற குறிப்பினையும், 'குணீ' என்ற குறிப்பினையும் பெறுகின்றன என்று

वैचित्र्यात्परिणामस्य गुणा एव गुणो गुणी ।। எனும் 253-வது ஸூத்ரத்தில் நிர்ணயிக்கப்படுகிறது. தனித்திருக்கையில் 'குண'மென்றும் கூட்டாக இருக்கையில் 'குணீ' என்றும் குறிப்பிடப்படுகின்றன.

ஸ்தூல அவஸ்தையிலிருக்கும் நிலம் (पृथिवी) முதலான ஐந்து பூதங்களுக்கு ஸூக்ஷ்மமான தன்மாத்ரைகள்தான் காரணம் என்ற தமது கொள்கையை நிலைநாட்ட வைசேஷிகர்-

களது பரமாணுகாரணவாதத்தை நிராகரிக்கிறார். உமாபதி (ஸூ. 258-79).

பின்னர் தன்மாத்ரைகளிலிருந்து பஞ்ச பூதங்கள் தோன்றுவதை முதலில் விளக்குகிறார். 'சப்த' தன்மாத்ரையிலிருந்து தோன்றும் ஆகாசம் என்பது உயிர்களுடைய இயக்கத்திற்கு (சலனத்திற்கு) தேவையான இடப்பரப்பிற்குக் காரணமாகும் (p. 469) :

यस्मिन्नवकाशे सत्येत्र नृणां गमनागमनादिव्यापारो जायते, तस्यावकाशस्य हेतुभूतमाकाशाख्यं भूतमिष्यताम् ॥

மேலும் உலகாயதர்களின் கொள்கையான ''ஆகாசமென்பது நிலம் போன்ற அடர்த்தியான அல்லது நெருக்கமான ஓர் உட்பொருளின் (भावपदार्थ) இன்மையே'' என்பதும் நிராகரிக்கப்படுகிறது. அதற்கு ஸமாதானம் கூறுகையில், ''இன்மை'' (अभाव) என்பது ஒரு பொருளின் முதற்காரணம் அல்லது உபாதான காரணம் கார்யமாக வெளிப்படாமல் அதனுடைய தன்மை அல்லது ஆற்றல் (शक्ति) வடிவமாக இருப்பதாகும். உளதாந்தன்மை (भाव) என்பது பொருளின் ஆற்றல் கார்யமாக வெளிப்படுதலேயாகும் (p. 473):

अभावो नाम उपादानस्य शक्त्यवस्था शक्त्यवस्थात्मना कार्यानभिव्यक्त्यात्मना अवस्थानं, भावश्च अभिव्यक्तकार्यात्मना अवस्थानम् ।

மேலும் ஒரு பொருளின் தனிச் சிறப்புப் பண்பு (धर्म), அதனைக் கொண்டுள்ள பொருளினிடத்தில் (धर्मि) இருப்பதுவே பொருத்தம். இதுபோல் 'இடப்பரப்பு' (आकाश) என்பது எங்கும் பரவியிருக்கும் தன்மையைக் குறிக்குமேயன்றி ஒரு பொருளின் 'இன்மை'யல்ல. ஏனெனில் 'இடப்பரப்பு' உயிர்களின் இயக்கத்திற்குத் தேவையான இடத்திற்குக் காரணமாகிறது (p. 474) :

सोऽयं यः प्राणिगमागमादिहेतुत्वेन सिद्धः आकाशसाधकः पूर्वोक्तावकाशस्सोऽयं सर्वत्र व्यापी दृश्यते, अतो न मूर्ताभाव इति ।

இவ்வாறு நிலைநாட்டப்பட்ட ஆகாசத்தின் ஓசை (शब्द)-குணம் 299-ஆம் ஸூத்ரம் முதல் விளக்கப்படுகிறது. முன்னர் 'பிந்து' படலத்தில் ஓசைக்கு 'பிந்து' எனும் குண்டலினியே உபாதானமென்று கூறப்பட்டதைச் சுட்டிக்காட்டி இங்கு ஆகாசத்தின் குணமே ஓசை என்று குறிப்பிடப்பட்டதையும் ஆக்ஷேபித்து பின்னர் விளக்குகிறார் (ஸூ. 305). த்வனிரூபமான சப்தங்கள் தான் ஆகாசத்திலிருந்து தோன்றுமேயன்றி எழுத்தமைப்புக்கொண்ட (வர்ணாத்மகமான) சப்தங்கள் தோன்றா. இவ்வெழுத்தமைப்புக்கொண்ட சப்தங்கள் தோன்ற பிந்துவே காரணமென்று 307-ம் ஸூத்ரத்தில் கூறப்படுகிறது.

'வர்ணம்' (எழுத்து) என்பது யாதென்று 310-ம் ஸூத்ரம் விவரிக்கிறது. 'அ' முதல் 'க்ஷ' வரையுள்ள எழுத்துக்களின் பிரிவுகளைக்கொண்ட 'நாத'மென்பதே வர்ணமெனப்படும் (p. 484):

वर्णो नाम विभागात्मा यो नादः स एवार्थस्य वाचक इत्यर्थः ॥

'அ' முதல் 'க்ஷ' வரையுள்ள எழுத்துக்கள் ஐம்பது. கருதியிருக்கை (आकाङ्क्षा), தகுதி (योग्यता), நெருங்கிய தன்மை (सन्निधि) ஆகியவற்றால்[43] அமைக்கப்பட்ட இவ்வைம்பது எழுத்துக்களின் தொகுதியே வாக்யமெனப்படும். வாக்யத்தின் பொருளானது வர்ணங்களினால்தான் ஏற்படுகிறது. எனவே, 'வாக்யமானது சொற்களின் தொகுதி; சொற்களின் பொருளே வாக்கியத்தின் பொருள்' எனும் ந்யாயமதக் கொள்கை நிராகரிக்கப்படுகிறது.

---

43. ஒரு சொல் உச்சரிக்கப்பட்டபின் மறுகணம் உச்சரிக்கப்படும் சொல்லின அறிவதில் உள்ள ஆவலே கருதியிருக்கை. அதாவது சொற்பொருள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று பரிமாற்றம் செய்து ஒன்றின் பொருளும் அதிலிருந்து பெறப்படும் கருத்தும் மற்றொரு சொல்லைத் தொக்கி நிற்பதாக இருக்கும் தன்மை. 'தகுதி'யென்பதை பொருத்தமெனவும் கொள்ளலாம். பொருத்தமல்லாததைக் கூறாதிருக்கும் தன்மையே 'தகுதி'. சொற்கள் ஒவ்வொன்றும் நெருங்கிய தன்மையுடையதாக அமைவது 'ஸன்னிதி' என்று குறிப்பிடப்படுகிறது.

சொற்களைக்கொண்ட நாதமானது முன்பின் கோர்வையான விசேஷ அமைப்பினால் (आनुपूर्वीविशेषविशिष्ट) வேறுபடுத்தப்பட்ட எழுத்துக்களின் மூலமாகவே வெளிப்படுகிறது என்று 315-ம் ஸூத்ரத்தில் கூறப்படுகிறது. உமாபதியும் தமது உரையில் இதையே கூறுகிறார் (p. 486):

एवञ्चानुपूर्वीविशेषविशिष्ट - तत्तद्वर्णविशेषाभिव्यक्तनादस्य तत्तदर्थविशेषप्रत्यायकत्वमुपपद्यत इति न पूर्वोक्तातिप्रसङ्गो न पदार्थवाक्यार्थयोरविवेकप्रसङ्गश्चेति भावः ॥

செவியை வந்தடையும் நாதமென்பது எவ்வாறு கருத்து வெளிப்படும் தன்மை (वाचकता) உடையதாக இருக்கும் எனும் கேள்விக்கு கீழ்க்கண்டவாறு பதில் அளிக்கப்படுகிறது:

'முதல் நிலை பொருட்குறிப்பு' எனும் சக்தி(शक्ति)யை அங்கீகரிப்பதன் மூலம் சொற்பொருள் அறியப்படுகிறது. இந்த சக்தியே எல்லா உட்பொருளுக்கும் காரணமாகிறது (ஸூ. 329) எடுத்துக்காட்டாக நெருப்பிற்கு 'சுடும் சக்தி' காரணமாயமைகிறது. அதுபோல் ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வோர் சக்தி உள்ளது. உலகத்திற்கு மூலகாரணம் மாயை. இது எண்ணிக்கையற்ற பல்வேறு சக்திகளின் தொகுதியாக இருப்பதால் பல வகைப்பட்ட செயல்களை நிரம்பவும் ஏற்படுத்தக்கூடிய தன்மையுடையதாகிறது. இவ்விதம் 'சக்தி'யெனும் சொற்பொருள் தனியாக அங்கீகரிக்கப்படுகிறது (p. 497):

उक्तयुक्तिभ्यः अशेषार्थवर्तिनी समस्तवस्तुमात्रनिष्ठा शक्तिर्गम्यताम् अभ्युपगम्यताम् ॥

'சப்தஸ்போட'(शब्दस्फोट)மெனும் ஓசையின் முதற்பொருள் குறிப்பும் பாவஸ்போட(भावस्फोट)மெனும் எண்ணத்தின் முதல் நிலைக் குறிப்பும் சைவஸித்தாந்தத்தில் அங்கீகரிக்கப்படுகின்றனவென்று 346-ம் ஸூத்ரத்தில் குறிப்பிடப்படுகிறது.

'சக்தி'யை (முதல்நிலைபொருட் குறிப்பு) ஏற்றுக் கொள்வதால் ஒவ்வொரு பொருளுக்கும் உள்ள திரை (आवारक) நீங்க இயலும் என்பது மறுக்க முடியாததாகும். இல்லையேல் 'ஆணவ

மலம்' ஒன்றுனதால் ஒருவருக்கு ஏற்படும் 'ஆணவமல நீக்கம்' அனைவருக்கும் ஏற்பட்டு அதனுல் அவர்கள் 'முக்தி' என்ற பலனைப் பெறக் கூடும். இக்குறைபாட்டைத் தவிர்க்கவே 'சக்தி' பல்வேருக ஒப்புக் கொள்ளப்படுகிறது (p. 500) :

किञ्च शक्त्यनङ्गीकारे मलस्यैकत्वेन एकमुक्तौ सर्वमुक्तिप्रसङ्गः। शक्त्यङ्गीकारे तत्तदावारकशक्तिविनिर्गमेन तत्तन्मुक्तिव्यवस्था उपपद्यत इति सङ्क्षेपः ॥

இவ்விதம் ஐந்து பூதங்களில் முதலான 'ஆகாச'மென்பது விளக்கப்பட்டு, பின்னர் தொடர்ந்து 'வாயு' ஆகியவை விளக்கப்படுகின்றன. பின்னர் 355-ம் ஸூத்ரத்தில் 'புர்யஷ்டகம்' விமர்சிக்கப்படுகிறது 'புர்யஷ்டகம்' ஒவ்வோர் ஜீவனுக்கும் உரிய நல்வினை, தீவினைகளுக்கான பலனை அனுபவிக்கக் காரணமாயிருப்பதாகும். 'புர்யஷ்டக'மென்பது ஐந்து தன்மாத்ரைகளும், புத்தி, மனஸ், மற்றும் அஹங்காரம் என்ற இவைகளைக் கொண்டதாகும். இந்த 'புர்யஷ்டக'த்துடன் கூடிய தேஹ விளக்கத்தை ஆகம வசனத்துடன் நிருபித்து இப்படலம் முடிக்கப்படுகிறது.

सप्तमः प्रमाणपटलः

प्रत्यक्षमनुमानञ्च शब्दोऽर्थापत्तिरेव च ॥ என்று முதலில் நான்காம் ஸூத்ரத்தில் குறிப்பிட்டவாறு ப்ரத்யக்ஷம், அனுமானம், சப்தம் மற்றும் அர்த்தாபத்தி என்று நான்கு ப்ரமாணங்கள். அறியப்பட வேண்டிய பதார்த்தங்கள் ஆறு — முன்னர் விளக்கப்பட்ட 'பதி' முதல் பும்ஸ்தத்வம் வரையுள்ளவை. 'மான'மெனும் 'அறிவு' என்பது ஐயப்பாடின்றி அல்லது ஐயப்பாட்டுக்கு அப்பாற்பட்ட சித்சக்தியே ஆகும் – संशयादिविनिर्मुक्ता चिच्छक्तिः मानम् । என்பதுவே இதன் லக்ஷணம். ஐயப்பாடு என்பது இரண்டினைத் தழுவிய புத்தியாகும். அதாவது ஒரே உருவமைப்புக்கொண்ட இரு வெவ்வேறு பொருட்களையும் ஒன்ருகக் கருதும் தன்மை. எடுத்துக்காட்டாக, வயல்பரப்பில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் மரகம்பத்தை தொலைவிலிருந்து காணும்போது மனித உருவமோ என்று எண்ணும் அறிவே ஐயப்பாடு எனப்படும்.

ஒரு பொருளை அதன் இயல்பான தன்மையுடன் கூடினதாக அறியாமல், உருவ அமைப்பில் ஒத்த வேறோர் பொருளாகக் காணுதல் 'விபர்யயம்' எனப்படும். எடுத்துக் காட்டாக மங்கலான வெளிச்சத்தில் மணலில் (சிறிது புதைந்து) காணப்படும் கிளிஞ்சலை வெள்ளியாகக் காணுதல். இந்த அறிவு 'விபர்யய' மாகும். உணரப்பட்ட பொருட்களின் தன்மையைக் குறித்ததான கடந்தகால அறிவு, நினைவு அல்லது ஸ்ம்ருதி எனப்படும். இவ்விதம் ஐயம் (संशय), வேறாகக் கருதுதல் (विपर्यय), நினைவு (स्मृति) ஆகிய மூன்றுமில்லா சித் சக்தியே ப்ரமாணமெனப்படும்.

இந்த ப்ரத்யக்ஷ ப்ரமாணம், இந்த்ரியங்களின் உதவியை அடிப்படையாகக் கொண்டும், மனதினை அடிப்படையாகக் கொண்டும் முறையே இந்த்ரிய ஸாபேக்ஷம் (इन्द्रिय-सापेक्ष), நிரபேக்ஷம் (निरपेक्ष), அந்தஃகரணஸாபேக்ஷம் (अन्तःकरणसापेक्ष), என்று மூவகைப்படுகிறது. ப்ரத்யக்ஷத்திற்குக் காரணமான 'ஸன்னிகர்ஷ'மெனும் தொடர்பு (பொருட்களோடு இந்த்ரியங்களுக்கு ஏற்படும் தொடர்பு) ஆறு வகை.[44] இவை 33 முதல் 35 வரையுள்ள ஸூத்ரங்களில் விளக்கப்பட்டு ப்ரத்யக்ஷப்ரமாண உரை முடிக்கப்படுகிறது.

இரண்டாவதாக அனுமானப்ரமாணம் விளக்கப்படுகிறது. दृढव्याप्त्या परोक्षार्थावबोधकमनुमानम् ।। நிலையான வ்யாப்தி[45]-யுடன் பார்வைக்கப்பால் இருக்கும் பொருளை அறிவிக்கக் கூடியது அனுமானமெனப்படும். இவ்வனுமானம் தன்னால் உணரப்படுவது ஸ்வார்த்தானுமானம் (स्वार्थानुमानम्) என்றும் பிறரால் உணர்த்தப்படுவது பரார்த்தானுமானம் (परार्थानुमानम्)

---

44. संयोग, संयुक्तसमवाय, संयुक्तसमवेतसमवाय, समवाय, समवेतसमवाय, विशेषणविशेष्यभाव என்பவை.

45. 'வ்யாப்தி' என்பது ஒருங்கிணைந்து இயலும் தன்மை (साहचर्यनियम) ஆகும். இது ஒரு பொருளின் உளதாந்தன்மை நிலைநாட்டப்படுகின்றபொழுது அப்பொருளின் தனிப் பண்பு மாறாமல் அடிநிலைக்கூறினுள் (substratum) எவ்வாறு உள்ளதோ அவ்வாறு நிலைநாட்டப்படுவதிலும் இருப்பதே ஆகும். இது (வ்யாப்தி) எதிர்மறையல்லா இணைநிலை (अन्वय), மற்றும் எதிர்மறை இணைநிலை (व्यतिरेक) என்று இருவகைப்படும்.

என்றும் இருவகைப்படும். இதில் பரார்த்தானுமானமென்பது முன்மொழிவுரை (प्रतिज्ञा), காரணம் (हेतु), எடுத்துக்காட்டு (उदाहरणम्), எடுத்துக்காட்டின் வாயிலாக முன்மொழிந்த தமது உரையின் ஒப்புமைத் தொடர்பைக் குறிப்பிடுதல் (उपनय), தீர்மானம் (निगमनम्) என்ற ஐந்து அங்கங்களைக் கொண்டது. இவ்வைந்து அங்கங்களும் 37-39ம் ஸூத்ரங்களின் உரையில் விளக்கப்படுகின்றன.

பொதுவாக ந்யாய மதத்தில் குறிப்பிடப்பட்டவாறு அனுமான ப்ரமாணம் அதன் பிரிவுகளுடனும் எடுத்துக்காட்டுக்களுடனும் விளக்கப்படுகிறது.

பின்னர் 60-வது ஸூத்ரம் முதல் சப்தப்ரமாணம் நிருபிக்கப்படுகிறது.

आप्तोक्तिः आगमः என்பது சப்தப்ரமாண லக்ஷணம். உள்ளதை உள்ளபடி பொய்மையின்றி உரைப்பவனே ஆப்தன்[46] என்பவன். மேலும் இவனால் உரைக்கப்படும் வாக்யமானது கருதியிருக்கை (आकाङ्क्षा), நெருங்கிய தன்மை (आसक्ति) உடைய சொற்களாலமைக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும். இங்கு ந்யாயம் முதலிய பிற மதத்தில் அங்கீகரிக்கப்படும் 'தகுதி' (योग्यता) என்பதன் தேவையை மறுக்கிறார். நம்பத்தகுந்ததை, பொருத்தமானதைக் கூறுபவன் ஆப்தன் என்பதால் தகுதியென்பது தனியாக அங்கீகரிக்கப்பட வேண்டியதல்ல:

वाक्यञ्चात्राकाङ्क्षासक्तिमत् पदकदम्बकम् । नतु योग्यतागर्भमपि आप्तपदेन तल्लाभात् ॥[47]

இறுதியில் குறிப்புடன் இணைந்து பொருளை உணர்த்துவதே சப்தப்ரமாண லக்ஷணமென்று உமாபதி தமது உரையில் கூறுகிறார் (p. 553): सङ्केतसाचिव्येन अर्थबोधकत्वस्य शब्दप्रमाण-

46. ஆப்தனுடைய லக்ஷணம் 60-61 ஸூத்ரங்களில் கூறப்படுகிறது.

प्रत्यक्षेणानुमानेन यदि वार्थं सुनिश्चितम् ।
यो वक्ति सोऽयमाप्तस्स्यात् * * * * ॥

47. *PB*. p. 551.

लक्षणत्वात्...... । பொருள் மாருத நிலையில் மரபார்ந்த போதனை-யும் (ऐतिह्यं) சப்தப்ரமாணத்திலேயே அடங்கும். இவ்விதம் கூறுவதால் வேதமும் ஆகமங்களும் ஆப்தனுல் கூறப்படுவதாகக் கொண்டு ப்ரமாணமாகின்றன. ऐतिह्यमबाधितार्थकं शब्द एवान्त-र्भूतं बाधितार्थकं तु अप्रमाणमेवेति सर्वं समञ्जसम् । ननु मोक्षादिपरो-क्षार्थकबोधके वेदागमादौ अस्मदादिप्रणीतत्वासम्भवादव्याप्तिरित्यत आह सोऽपीति । सोऽपि वेदागमादिरपि आप्तप्रणीत एवेति ।

இம்முறையில் அந்தந்த அதிகாரிகளுக்கேற்றவாறு காமிகம் முதல் வாதுலம் வரையிலான ஆகமங்கள் ப்ரமாணமாகின்றன. ஏனெனில் இருவகையான ஆகமங்களும் (வாமாசாரம் மற்றும் சுத்த சைவ ஆகமங்கள்) சிவனுல் படைக்கும் காலத்தில் இயற்றப்பட்டன (p. 555) :

भगवान् शिवः सदाशिवोऽपि सदाशिवात्मना स्थितः सन् पुनः नादरूपतया आगतं पत्यादिषट्पदार्थप्रतिपादकं तदेव ज्ञानं शिवशास्त्र-मनेकच्छन्दः नानाविधच्छन्दोरूपेण ग्रथयित्वा पूर्वतः पूर्वं दशसंख्यातं शिवभेदं शिवनामकं शास्त्रं तथाष्टादशविधमपरं रौद्रं च तेभ्यः ....अनन्तादिभ्यः कृपालुत्वादवादीत् उपदिष्टवान् । இவற்றில் புகழுரையைத் (अर्थवाद) தவிர்த்த பௌஷ்கராகம-மான இவ்வாகமம் புவியில் நிலைநாட்டப்பட வேண்டுமென்று பரமேச்வரனுல் உரைக்கப்பட்டது. அவ்வாறே இவ்வாகமம் பயில்வதற்குகந்தோர் எவரென்றும் பரமேச்வரனுல் குறிப்பிடப்-படுகிறது. இதை உறுதிப்படுத்த உமாபதி சிவாசார்யார் நிச்வாஸாகம வசனத்தை மேற்கோளாக அளிக்கிருர் (p. 556).

மேலும் வழிவகை (उपाय) யில் ஒன்றுக்கொன்று முரண்-படாத வரையில் அல்லது ஓர் வழிவகை மற்ருென்றை பாதிக்-காத வரையில் சைவமல்லாத ப்ராஹ்ம, வைணவ ஆகமங்-களும், மற்றும் உபநிடதங்களும் ப்ரமாணமே. இதன் பொருட்-சிறப்பு யாதெனில், அனைத்துக் கிளை பிரிவிலுமுள்ள முதல் மூன்று வர்ணத்தாருக்கும் வேத-சைவாகமங்கள் அவரவர்கேற்ப ப்ரமாணம்; மற்றவர்களுக்கு சைவாகமம் ப்ரமாணமாகும். எனவே, நான்காவது வர்ணத்தாருக்கும் சிவாகமம் பயில, ஆசார்யாபிஷேகம் பெற தகுதியுண்டு என்பது கருத்து (p. 557).

நான்காவதாக [40]அர்த்தாபத்தியெனும் ப்ரமாணம் 80ம் ஸூத்ரம் முதல் வர்ணிக்கப்படுகிறது. இதன் நோக்கம் யாதெனில் நாஸ்திக (மறுமை என்பதில்லை என்ற கருத்துடைய) மதங்களில் சார்வாக, பௌத்த, ஜைன மதங்களில் விளக்கப்படும் மோக்ஷ தத்வத்தின் தவருன கருத்தை நிராகரித்து அதன் உண்மையான தன்மையை விவரிப்பதே ஆகும் (p. 564):

बुद्धाद्यागमेषु संसिद्धं पठितं यन्मोक्षतत्त्वोपदर्शनं भूतादिप्राप्तीनां मोक्षत्वोपदर्शकं वाक्यं तस्मात् बुद्धाद्यागमोपदर्शितमोक्षतत्त्वात् परम् उत्कृष्टं शिवसाम्यादिरूपं यच्छिवतन्त्रेण बलवता बोधितं परममुक्तितया बोधितं........................कल्पयति तदर्थापत्त्याख्यं प्रमाणमित्यर्थः ।

ஆகையால் இவ்வர்த்தாபத்தியின் லக்ஷணம் — अनुपपद्यमानअर्थपरिज्ञानात् तदुपपादकम् अर्थान्तरकल्पनमिति । — ஒரு வாக்யம் உரைக்கப்படும் பொழுது அதன் பொருள் பொருத்தமில்லாவிடில் அதனை விடுத்து பொருத்தமான மற்ரெரு பொருளைக் கருதுதல் — என்று 82-ம் ஸூத்ரத்தின் உரையில் உமாபதி சிவாசார்யார் குறிப்பிடுகிருர்.

இது கேட்கப்பட்டது (श्रुत), பார்க்கப்பட்டது (दृष्ट) என்று இருவகைப்படும். அர்த்தாபத்தி கூறப்படும் பொருளின் அடிப்படையிலும், வினையின் அடிப்படையிலும் அனுமானப்ரமாணத்திலிருந்து வேறுபடுகிறது என்று 83-ம் ஸூத்ரத்தில் குறிப்பிடப்படுகிறது.

இப்படலத்தின் இறுதியில் உலகத்தின் மீட்டுப்பேறு (उपसंहार) முறை நிலை நாட்டப்படுகிறது (ஸூ. 84—88). இவ்விதம் அனைத்தும் அதனதன் முதற்காரணத்தில் ஒடுங்கிய-

40. ஒரு சொல்லினை உச்சரித்தபின் அதன் பொருளை உணர்ந்து அதற்கேற்ப மற்ரெரு சொற்பொருள் அமையும் என்று கருதுதல். எடுத்துக்காட்டாக - 'பெருத்த உருவமுள்ள தேவதத்தன் பகலில் உண்பதில்லை' என்ற வாக்யத்தைக் கேட்டபின் அவனது பெருத்த உருவ அமைப்பின் காரணமாக அவன் இரவில் உண்பவன் என்று கருதுதலே அர்த்தாபத்தி எனப்படும். ஒரு சொல்லின் பொருளை அறிந்து மற்ரென்றை ஊகித்தல்.

பின் மீண்டும் 'பிந்து'விலிருந்து இவ்வுலகத்தின் தொடக்கம் நிகழ்கிறது என்று இப்படலத்தை முடிக்கிருர்.

पुनः संहारानन्तरमपि प्राणिकर्मपाकानुसारेण बिन्दुमारभ्य आनुलोम्येन सर्वं जगत् प्रवर्तते उत्पद्यत इत्यर्थः ।।

अष्टमः तन्त्रावतारपटलः

இப்படலத்தின் தொடக்கத்தில் ஆகமங்களின் தோற்றமும், அதில் உள்ள மந்த்ரங்களின் உள் அடங்கிய ஆற்றலும் வேற்றுமைகளுடன் உரைக்குமாறு முனிவர்கள் வினவ, 'உயிர்களை அனுக்ரஹிக்கும் பொருட்டு தம்மால் தம் விருப்பத்திற்கேற்ப நாதரூபமான சாஸ்த்ரம் தோற்றுவிக்கப்பட்டது, என்று விளக்கத் துவங்குகிருர் பரமேச்வரர் (p. 570):

..................शिवेच्छया शिवसङ्कल्पानुसारेण नादबिन्द्वादीनां सर्वेषामुत्पत्त्यर्थं योगमायया समवेतशक्त्या क्षोभितमभूत् । तत्क्षोभतः बिन्दुक्षोभाच्छिवसङ्कल्पानुसारेण नादस्वरूपतः नादात्मकं शास्त्रं सञ्जातं समुत्पन्नम् ।

நாதத்திற்குப் பின் பிந்து தோன்றியது. 'அபரபிந்து'வெனும் இது பரபிந்துவெனக் குறிப்பிடப்படும் குண்டலினியிலிருந்து வேறுபட்டது. இலையுதிர்கால நிலவின் வெண்மைக்கு ஒப்பானது (शरच्चन्द्रसमप्रभः) என்று 7-ம் ஸூத்ரத்தில் குறிப்பிடப்பட்டதால் குண்டலினியைக் காட்டிலும் தூய்மையானது (p. 571):

अस्य च शरच्चन्द्रसमप्रभ इत्यनेन अतिशुद्धात्मकत्वं लक्ष्यते ।

மேலும் இது (அபரபிந்து) சிவனின் விருப்பத்திஞல் அசைவுக்குட்பட்டு நான்கு விதத்தில் தோற்றமளிக்கிறது. முதலில் 'அம்பிகா' எனப்படும் பிறைச்சந்திர வடிவிலும், பின்பு 'வாமா', 'ஜ்யேஷ்டா', 'ரௌத்ரீ' என்று மூன்று சக்திகளாகவும் பரிணமிக்கிறது. இவற்றில் 'வாமா'வென்பது உறங்கும் அரவ வடிவிற்கு ஒப்பாகவும் (सुप्तस्य नागेन्द्रस्य सन्निभा), ஜ்யேஷ்டா என்பது தண்டம் அல்லது கோல் வடிவத்திற்கொப்பாகவும் (दण्डवत्),

ரௌத்ரீ என்பது கொம்பு வடிவத்திற்கிணையாகவும் (शृङ्गाङ्गवत्) விளங்குவதாக வர்ணிக்கப்படுகின்றன.

இதற்கு அப்பால் மீண்டும் இவ்வபரபிந்துவின் மாற்றம் (परिणाम) பதினாறு சக்திகளாக[41] வர்ணிக்கப்படுகிறது (ஸூ. 10-12). இவைகளிலிருந்து தான் ஐம்பது எழுத்துக்கள்[42] தோன்றின. எடுத்துக்காட்டாக 'அ' 'ஆ'வென்ற இரு எழுத்துக்களின் தோற்றம் குறிப்பிடப்படுகிறது.

பின்பு இந்த சக்திகளின் வேறுபட்ட தன்மைக்கேற்ப எழுத்துக்களுக்குத் தனித்தனியே முதற்காரணம் இருக்கக் கூடுமோ என்ற கேள்விக்கு பதிலளிக்கப்படுகிறது. ஐம்பது எழுத்துக்களுக்கும் பரமேச்வரனுடன் இணைந்த சக்தியே (परमेश्वरसम्बन्धिनी समवेतशक्तिः) பிறப்பிடமென்றதாலும், அதுவே பிந்துவை அசைவுக்குட்படுத்தியதாலும் அது அடிப்படைக் காரணமாகும். பிந்து உபாதானகாரணமானாலும் பிறப்பிட-(योनि)மான சிவனுடன் இணைந்த சக்தி உபாதானகாரண-மாகாது (p. 574):

परमेश्वरसम्बन्धिनी समवेतशक्तिः सा परा योनिः बिन्द्वादिक्षोभकतया प्रथमं कारणमित्यर्थः । न तु योनिशब्दस्योपादानमर्थः उपादानं सबिन्दुराडिति तस्याग्रे पृथगभिधानात् ।

இதையே 19-ம் ஸூத்ரத்தின் பிற்பகுதியும் உறுதிப்படுத்து-கிறது:

उपादानम् अतो बिन्दुः यस्माद्वर्णा न तद्विना ॥

---

41. *PB.*, p. 572.

42. இங்கு 'ள' (ळ) எனும் எழுத்து 'ட' (ड) என்பதிலேயே அடங்கியுள்ளதால் எண்ணிக்கை ஐம்பதாகும். ஆகவேதான் சிவனல் உபதேசிக்கப்பட்ட எழுத்துக்களின் திரட்டான பாணினி இலக்கணத்திலும் 'ள' எழுத்து காணப்படவில்லை. அதே சமயம் 'க்ஷ' என்ற எழுத்தும் அங்கு குறிப்பிடப்படவில்லையே எனில் பரமேச்வரனல் ஆகமத்தில் 'அ' முதல் 'க்ஷ' வரையுள்ள எழுத்துக்கள் अकारादि क्षकारान्ता वर्णा पञ्चाशदेव तु என்று குறிப்-பிடப்பட்டதால் ஐம்பதாகும்.

இவ்வைம்பது எழுத்துக்களும் ஒலிவடிவமான உலகத்திற்குத் தாய் போல் (मातृवत्) திகழ்வதால் மாத்ருகா (मातृका) என்று வழங்கப்படுகின்றன. பின்னர் 22-23 ஸூத்ரங்களில் உயிரெழுத்து, மெய்யெழுத்துக்களின் தெய்வங்கள் குறிப்பிடப்படுகின்றன. ஒலிவடிவ உலகிற்கு உபாதானமாய் இருக்கும் மாத்ருகா, பரமேச்வரனின் ஞான சக்தியாகத் திகழ்பவள். பரமேச்வரனும் மாத்ருகாவின் துணையுடன் காமிகம் முதலான பல்வேறு ஆகமங்களைத் தோற்றுவிக்கிறான் என்பது 24 முதல் 26 வரை உள்ள ஸூத்ரங்களின் கருத்து.

ஈசான, தத்புருஷ, அகோர, வாமதேவ, ஸத்யோஜாத ஆகிய ஐந்து மந்த்ரங்களையே அங்கங்களாகக் கொண்ட முறையில் பரமேச்வரன் ஸகலனாகிறான். ஸகலனென்கிற பொழுது பரமேச்வரனும் பசுக்களைப்போல் ஸகல-பசு அல்ல. ஏனெனில் பரமேச்வரனின் உபதேசிக்கும் தன்மையினாலேதான் ஸகலன் என்ற குறிப்பு கிடைக்கப் பெறுகின்றதேயன்றி ஸகல-பசுவின் தன்மைகளினால்ல (p. 579): पशुप्रयोजनसिद्धये परमकारुणिकस्य शिवस्य तन्त्रस्योक्तोपदेशकर्तृत्वाय साकल्यपरिग्रह इति भावः।

இங்கு ஈசானன் எனும் மந்த்ரம் தலையாகவும், தத்புருஷம் முகமாகவும், அகோரம் இதயமாகவும், வாமதேவம் மர்மஸ்தானமாகவும், ஸத்யோஜாதம் மொத்த உருவமைப்பாகவும் வர்ணிக்கப்படுவதால் ஸகலமென்பது பரமேச்வரனுக்குப் பொருத்தமே (p. 579): एवंविधो देवस्सदाशिवस्सकल इति शास्त्रेषु पठ्यते। என்று 32-ம் ஸூத்ரத்திற்கான உரையில் உமாபதி கூறுகிறார். மேலும் இந்த ஸதாசிவமூர்த்தியே அனுஷ்டுப் விருத்தத்தில் பல கோடி பாக்களால் அமைந்த பதி முதலான ஆறு பதார்த்தங்களை விளக்கும் இச்சைவ சாஸ்திரத்தை இயற்றியருளியதாகச் சொல்லப்படுகிறது.

எழுத்துக்கள் அநித்யமானாலும் அவைகளின் வாயிலாகக் குறிப்பிடப்பட்ட பொருளானது நித்யமானது. இவ்விதம் பொருளைப் புலப்படுத்தும் தன்மை (स्फोट) ஸ்போடமெனப்படுகிறது. இது குறித்து முன்னர் பும்ஸ்தத்வ படலத்தில் 346-ம் ஸூத்ரத்தில் குறிப்பிடப்பட்டதைக் காணலாம்.

ஸ்போடம் எழுத்துக்களிலிருந்து உருவாக்கப்பட்டதால் அவ்-வெழுத்துக்களிலிருந்து வேறுபட்டதல்ல என்று உமாபதி 36-ம் ஸூத்ரத்திற்கான தமது உரையில் கூறியுள்ளார்.

இவ்விதம் மந்த்ரங்களின் பொருட்குறிப்பு பரமேச்வரனுல் அருளுடன் உணர்த்தப்பட்டது. அவ்விதம் உணர்த்தப்பட்டதில் பல தத்துவங்கள் காமிகம் முதலான ஆகமங்களில் நிலேயான இடம் பெற்று விட்டன என்று கூறி இப்படலத்தை உமாபதி முடிக்கிருர்.

राष्ट्रिय संस्कृत संस्थान
जयपुर परिसर, जयपुर
पुस्तकालय
क्रमांक..........
15280

PAUṢKARĀGAMABHĀṢYA-SAṄGRAHA

K. BALASUBRAMANIA SASTRIGAL

(Synopsis)

Pauṣkarāgama is one of the seven Upāgamas of the *Pārameśvarāgama*, an important text among the twenty-eight Śaiva Āgamas. It is called *Pauṣkara*, since, like the lotus (*Puṣkara*) with sweetness and capacity to spread its fragrance, the text contains the essence of Śaiva Siddhānta and expounds the means to attain salvation. Unfortunately only its Jñāna-pāda in eight *paṭalas* is extant and Umāpati Śivācārya (U.Ś.) has written a commentary on it (Chidambaram Edition, 1925). The present article gives the highlights of the *bhāṣya*.

1. Pati Paṭala

त्वं श्वः प्रभृत्यनुदिनं तदुमापतेस्तु काष्ठं ददेति हविषः पचनादुवाच॥ 57

परदिनादि यथापुरमन्वहं वनमुपेत्य महासिविभेदितम्।
बहुलकाष्ठमनार्द्रमुदूहयन् मठमहानसपाय ददावसौ॥ 58

एवं सूतः पञ्चपञ्चाशदब्दान् काष्ठं दत्त्वोमापतिर्ज्ञानितृप्तेः।
अहन्येकस्मिन् वृष्टिभिः क्लिष्टदेहो नादात् काष्ठं मन्दतामाप पाकः॥ 59

मठाधिनाथस्तु शिवार्चनान्ते निवेदनान्यानयतेत्यवोचत्।
आहूतिमात्रेण महानसस्थो निधापयामास हविः प्रधानम्॥ 60

शेषं सर्वं शीघ्रमद्यानय त्वं त्वित्युक्त्वा तं प्रेक्षमाणे मुनीन्द्रे।
वक्ष्ये पश्चादद्य पूजासमाप्तिः कार्येत्युक्त्वारालिकोऽवाप गेहम्॥ 61

समाप्य पूजां सह शिष्यवर्गैर्भुक्त्वासनं तद्गतवत्यमुष्मिन्।
आरालिकस्तं गुरुमेत्य भक्त्या कृताञ्जलिः प्राह विलम्बहेतुम्॥ 62

नीचः कश्चिदुमापते तव पदाम्भोजं हृदब्जे स्मरन्
सूतो नाम नरस्स्वधर्मनिरतः पञ्चोनषष्टीस्समाः।
शुष्कं काष्ठमुदूह्य मन्मठवरं संप्राप्य दत्ते स्म य-
स्सोऽस्मिन् वर्षभिया दिने तु भगवन्नायाति नन्दोपमः॥ 63

नीचे तस्मिन् श्वः प्रभाते मठान्तं प्राप्ते तं त्वं त्वानय प्राङ्मदन्तम्।
इत्युक्त्वा तं प्रेषयामास विप्रो भृत्यस्सोऽयं तद्वचस्येव तस्थौ॥ 64

सूते परस्मिन् दिवसे स्वगेहाद्वनं समागत्य तरुं विभिद्य।
सार्द्रं च काष्ठं द्विगुणं गृहीत्वा मठालयं प्राप्तुमुपागतेऽस्मिन्॥ 65

यतिवरतनुमाप्तश्शंकरो मार्गमध्ये स्वकरलिखितपत्रं किञ्चिदस्मै प्रदत्वा।
त्वमिदमधिकभक्त्या स्वामिने यच्छ शीघ्रं तदनु मुनिकटाक्षैर्मत्परं प्राप्स्यसीति॥ 66

उक्त्वाथान्तर्धिमाप प्रभुरतिमहिमा शम्भुराकाशमध्ये.
नीचो गत्वा मठान्तं शिरसि विनिहितं द्वैगुणं काष्ठभारम्।
त्यक्त्वा भूमौ मठान्ते पचनकृतधिपं विप्रमाहूय मन्दं
पत्रं दत्वा तदस्मै मुनिवरकरयोर्यच्छ चेत्येनमूचे॥ 67

आदाय पत्रं गुरुनाथहस्ते दत्वाद्य नीचेन विनीतिभाजा।
प्रदत्तमेतत्परिपश्यतामित्यवोचदार्यस्तदपश्यदादौ॥ 68

तत्पत्रमाघ्राय निधाय मस्ते हृदम्बुजे नेत्रयुगे महात्मा।
दृष्ट्वा पपाठेश्वरहस्तपङ्केरुहेण दत्तं लिखितं पुरस्तात्॥ 69

उमापते भक्तविधेय-नामा नटोऽहमद्यत्वमिदं प्रदृष्ट्वा।
त्वच्छक्तिपातादमुमन्त्यजातिं सूतं कुरुष्वाद्य विमुक्तिभाजम्॥ 70

इत्थं सभेशवचनं परिगृह्य मूर्ध्ना चानाय्य नीचमतिधीरमुदारभावम्।
दृष्ट्वा स्वशक्तिपतनात् परमात्मतेजो नीचं स्म वेशयति बोधवतां वरिष्ठः॥ 71

सूतस्य दारसुतबन्धुजनाश्च सर्वे वृत्तान्तमेतदखिलं वचसो जनानाम्।
श्रुत्वा मठाधिपतिमेत्य महन् द्विजेन्द्र सूतोऽगमत् क भवदङ्घ्रिसरोजभक्तः॥ 72

मुक्तिं गतो निर्मलचित्तभाक् स भक्तश्शिवे तत्कृपयान्त्यजन्मा।
किमद्य कर्तव्यमिति ब्रुवाणे मुनीश्वरे चोलमहीपमापुः॥ 73

श्रुत्वा चोलस्तैस्समं प्राप्य नाथं भक्त्या नत्वा सूतवृत्तान्तमेतत्।
किञ्चिज्जाने त्वं वदस्वाद्य सर्वं चेत्युक्त्वान्ते तिष्ठति स्म स्वभक्तैः॥ 74

तत्पुत्रपत्न्यादिजनैश्श्रुतं यत् त्वयाद्य नैव प्रबलैश्च पुण्यैः।
अवाप मुक्तिं परमां स सूत इति ब्रुवन् ध्यानपरो बभूव॥ 75

शृणुष्व मद्वाक्यमिदं महात्मन्नन्यं तथैवाद्य जनं प्रकुर्याः।
इत्युक्तवत्यात्तभयेऽपि चोले न चित्तशुद्ध्यन्वितभक्तिभाजः॥ 76

तथापि मद्गेहपुरः प्रदेशे स्थितश्च मह्यं प्रददौ तरुर्यः।
वार्ताकशाकं च दिने दिनेऽसौ तं मुक्तिभाजं प्रकरोमि पश्य॥ 77

इत्युक्त्वा परमात्मविन्मुनिवरो वार्ताकवृक्षान्तिमात्
शक्त्या वीक्ष्य तरुं परात्महृदयो ज्योतिर्गतं तं व्यधात्।
पश्यत्स्वेषु जनेष्वसौ तरुवरो भस्मावशेषो ह्यभूत्
ते सर्वेऽपि महात्मनश्चरणयोर्नत्वा स्म तिष्ठन्त्यमी॥ 78

सूरेश्वरो नाम मुनिर्महात्मा वार्ताकवृक्षादुदभूत्तदेव।
दृष्ट्वा मुनिं तत्पदयोः प्रणम्य स्तुत्वाथ चित्रं स्वमुदन्तमूचे॥ 79

आमूलाग्रसुकण्टकान्वितमहद्वार्ताकवृक्षाधरे
श्रीमान् वत्समुनिः पुरा किल तपः कृत्वा गिरीन्द्रं गतः।
अन्योऽस्मिंस्तपति ह्यसौ तरुतनुं यात्वित्ययं शप्तवा-
नज्ञात्वा तदहं मखीश्वरमहंस्तद्वृक्षमूले शुभे॥ 80

तप्त्वान्येन महात्मना श्रुतमिमं शापं प्रबुद्ध्वा तदा
वत्साख्यं मुनिमाप्य वन्द्यचरणे पृष्टश्च शापो मया।
आप्त्वाप्यस्य तरोस्तनुं मुनिवरज्ञानी क्षणाद्भस्मसा-
द्भूत्वा तत्क्षण एव विप्रतनुतां प्राप्यास्य मन्त्रस्मृतेः॥ 81

स्वशिष्यवृन्दरक्षणेषु बद्धकङ्कणस्य वै कदाचिदस्य भक्तिशाल्युमापतेर्मखीशितुः।
मनूपदेशतो जनास्स्वपूर्वपुण्यपक्वतस्सलोकतां समीपतां सरूपतां प्रपेदिरे॥ 98

अन्तेवासिष्वन्तिमः कुम्भमाषश्शम्भोरङ्घ्रिं तत्पदं ध्यायमानः।
आर्यादासं पञ्चवर्णं जपित्वा कैलासाद्रिं प्राप देहान्तिमेऽसौ॥ 99

अनुदिनमभिजित्सु स्वं प्रपश्यत्खगेशत्वमुपगतवतेऽस्मै योगिवर्याय सोऽयम्।
शिवमनुमुपदिश्य प्रत्यहं तज्जपात्तं प्रमथपतिनिवासं प्रापयामास शैलम्॥ 100

आचार्याज्जातबोधा भुवि सुखमखिलं प्राप्य देहावसाने
सायुज्यं केचिदापुः परमशिवतनौ चित्तशुद्ध्या महान्तः।
केचित् सौवर्णसंसत्प्रभवशिखिमहाज्योतिरापुस्स्वशिष्याः
केचित् ब्रह्मत्वमापुस्स्वकृतसुकृततः क्षत्रविड्विप्रशूद्राः॥ 101

स्वमुक्तिकालं नटराट्कटाक्षैर्ज्ञात्वा कदाचित् तमुमापतिस्सः।
स्वपीठमारोपयितुं सुशीलं कञ्चित् समालोचयति स्म शिष्यम्॥ 102

शिष्येष्वेकं स्वामिनाथाह्वयन्तं पद्भ्यां जातं पण्डितं ज्ञानवन्तम्।
स्वस्मिन् पीठे स्थाप्य पट्टाभिषेकं कृत्वा ब्रह्मध्यानचित्तो बभूव॥ 103

चतुस्सहस्रेषु गतेषु वर्षेष्वस्मिन् कलावीश्वरवत्सराद्ये।
उमापतिर्नाम महान् मुनीन्द्रो ब्राह्मं परंज्योतिरवाप शान्तम्॥ 104

श्रुत्युक्तकर्माचरतस्तनूजश्श्रुत्यन्तविज्ञानसुनिश्चितार्थः।
श्रुत्यन्तविश्रान्तपरात्मदृष्टिश्श्रुत्युक्तनामा श्रुतिगोचरोऽभूत्॥ 105

छन्दोगवंशोद्भवमौक्तिकाय नृत्तेशपादाब्जहृदम्बुजाय।
विचित्रचारित्रमहामहिम्ने नमोऽस्त्वथोमापतिशर्मणे नः॥ 106

नानादिगाम्नायशरत्स्वतीता स्वस्मिन् कलौ षष्टिसमादिमाब्दे।
साक्षात्कृतज्योतिरुमापतेस्सुचरित्रमेतद्ग्रथितं यथावत्॥ 107

औमापत्यचरित्रमद्भुततरं श्लोकैश्शतेनाङ्कितं
भक्त्या विट्पदभूश्च बाहुजनिमा विप्रो यतिर्वान्वहम्।
प्रागास्यो भसिताक्षमाल्यविलसद्धर्मा शुचिर्यः पठेत्
सोऽद्यैवाखिलसौख्यमाप्य चरमे मुक्तिं प्रयाति ध्रुवाम्॥ 108

॥ इति श्रीमद्दहरविद्योपासकशिवानन्दनाथदीक्षितविरचितः
श्रीराजेन्द्रपुरमाहात्म्यं नाम श्रीमदुमापतिशिवाचार्यविजयः संपूर्णः॥

ராஜேந்திரபுர மான்மியம்

என்னும் ஸ்ரீமதுமாபதி சிவாசார்ய புராணத்தினது ஸங்கிரஹம்*

தில்லைவாழந்தணர்களுள் சந்தோகவம்சத்தில் வேதவேதாங்க-முதலிய ஸகலசாஸ்திரங்களிலும் வல்லவராகிய நடராஜதீக்ஷிதர் என்பவர் ஒருவரிருந்தார். அவருக்கு ஒரு புத்திரர் வந்தவதரித்தார். அபபொழுது புத்திரப்பேற்றிற்குரிய ஸகலவைதிக-கர்மங்-களையும் செய்து அவருக்கு உமாபதிதீக்ஷிதர் என்று நாமகரணஞ்-செய்தார்கள். புத்திரருக்குப் பிதா வேதம் புராணம் அங்கங்கள் ஸ்மிருதி முதலிய ஸகலகலைகளையும் ஓதுவித்து அவற்றின்-கண்ணே அவரை நிபுணராக்கிவைத்தார். உமாபதிதீக்ஷிதர் உரிய-காலத்திலே விவாஹம்செய்து இரண்டு புத்திரர்களையும் ஒரு புத்திரியையும் பெற்றார். அவர் வேதபாரங்கதராயிருந்து ஸகல-வைதிக யஜ்ஞங்களையும் செய்துவரவே அவருக்கு ஐம்பது வயதாயிற்று. அதன்மேல் ஐம்பத்தாறாவது வயதில் புரட்டாசி மாசத்தில் திருவாதிரை நக்ஷத்திரத்தில் சோமவாரத்தில் வியதீபாத யோகத்தில் அவருக்குச் சித்ஸபையில் பூஜைமுறை வந்துசேர, அவர் மத்தியான்ன பூஜையை முடித்துக்கொண்டு தந்தச்சிவி-கையின்மேலேறிக் கொண்டு ஸ்வர்ணமயமாகிய விருஷபத்-தடியையும் தீவர்த்தியையும் பரிசாரகர்கள் பிடித்துவரப், புத்திரர்-களும் சீடர்களும் பக்கத்திலே வேதபாராயணம் செய்து வரத் தமது திருமாளிகையை நோக்கித் திருவீதியில் வருவாராயினர்.

---

* Pp. 137-49, Introduction to *Pauṣkara Saṃhitā* (Jñānapāda), Chidambaram, 1925.

1. **பார்த்தவனமான்மியத்தில்** உமாபதிதீக்ஷிதருடைய பிதாவின்பெயர் சம்புதீக்ஷிதரென்று சொல்லி இங்கே **ராஜேந்திரபுரமான்மியத்தில்** நடராஜ தீக்ஷிதரென்று அவருக்குப் பெயர் கூறியது ஒன்றிற்கொன்று விரோத-மாயிற்றன்றே எனின், ஒருவர்க்கே ஸம்ஸ்காரநாமம் ஒன்றும் வழக்க-நாமம் ஒன்றுமாக இருபெயர் வழங்கப்படுவது உலகத்தில் காணப்-படுதலின் அதுகொண்டு விரோதமில்லை என்பது தெளிக.

அப்பொழுது தமது சிஷ்யர்களோடு வீதியில் ஒருபக்கத்திலிருந்து மறைஞானஸம்பந்த சிவாசார்யர் தீவர்த்திமுதலிய வரிசைகளோடு சிவிகையில் வருகின்ற உமாபதி தீக்ஷிதரை நோக்கித் தமது சீடர்களை விளித்துப் 'பகற்குருடன் செல்லுகின்றான்; பார்மின்' என்று அருளிச்செய்தார். அங்ஙனம் ஆசார்யர் அருளிச்செய்தது உண்மை என்று கண்டு உமாபதிதீக்ஷிதர் சிவிகையை விட்டிறங்கி அவரது இரண்டு திருவடிகளிலும் வணங்கி அவர் உட்கொண்ட உணவினது சேடங்களால் தமது வயிற்றை நிரப்பி அவரை ஞானாசார்யராக மதித்து மூன்றுவருஷம் காத்திருந்தார். அதன்மேல் தீக்ஷிதேந்திரகுலத்தில் உதித்த பரிபக்குவராகிய அவருக்கு ஞானோபதேசம் செய்து ஆசார்யவர்யராகிய மறைஞானஸம்பந்தசிவாசார்யர் பரசிவஸாயுஜ்யத்தை அடைந்தார். அதன்பின் உமாபதிசிவாசார்யர் சிதம்பரத்தின் தென்கீழ்த்திசையதாகிய "ராஜேந்திரபுரம்" என்னும் கொற்றங்குடியில் தம்பொருட்டு வீரவர்மசோழனால் கட்டப்பட்ட மடாலயத்தில் சீடர்களோடு வசித்தார்.

இதன்மத்தியில் தில்லைவாழந்தணர்கள் உமாபதிசிவாசார்யரது இந்த விருத்தாந்தத்தைக் கேள்வியுற்றுத் தேவஸபையில் பொதுக்கூடி அவருடைய புத்திரர்களாகிய ஸ்ரீமூலநாத தீக்ஷிதர் விருஷபத்துவஜ தீக்ஷிதர் என்னும் இருவரையும் அழைத்து 'உங்களுடைய பிதா தம்முடைய வைதிககர்ம முழுதையும் கைவிட்டு ஞானிபாதத்தைச் சரணாகதி அடைந்து பந்துக்களையும் கைவிட்டு அந்த ஞானியினால் சொல்லப்பட்ட மார்க்கத்தைக் கைக்கொண்டனர். ஆதலால் இனிமேல் அவரை அழைத்தலையும் அவரோடுண்ணுதலையும் அவரை வணங்குதலையும் புத்திரரும் புத்திரியும் பத்தினியுமாகிய நீங்கள் கைவிடக்கடவீர்கள்' என்று கட்டுப்பாடு பண்ணினார்கள். இங்ஙனம் தில்லை வாழந்தணர்களாகிய பொதுவார்கள் கட்டுப்பாடு பண்ணியதைப் பிள்ளைகளிருவரும் தாயாரிடத்தில் வந்து தெரிவித்து அந்தப்பிரகாரம் கட்டுப்பட்டிருந்தார்கள்.

அதன்பின் சிலநாள்கழித்து ஒருநாள் உமாபதி சிவாசார்யர் சிற்ஸபைக்கு வருவாராகத் தீக்ஷிதர்கள் 'நீர் இங்கே பிரவேசித்தல்

கூடாது' என்று அவரை விலக்கினார்கள். அடுத்தநாட்காலையில் பூஜைமுறைகாரர்கள் திருக்கதவம் திறந்து பார்க்கும்பொழுது ''அழகிய சிற்றம்பலமுடையார்'' என்னும் சந்திரமௌளீசுவரர் எழுந்தருளியிருக்கும் பொற்பெட்டகக்கோயில் காணாமற்போயிற்று. அதன்மேல் பூஜைமுறைகாரர்கள் வெளியே வந்து சேவகர்களை அனுப்பித் தில்லைவாழந்தணர்களெல்லாரையும் வருவித்துத் தேவஸபையில் பொதுக்கூட்டப் பொதுவார்கள் பூஜைமுறைகாரரை அழைத்து 'நிகழ்ந்ததென்னை' என்று கேட்கத், திருக்கதவந்திறந்து பார்த்த அளவில் சந்திரமௌளீசுவரரது பெட்டகக்கோயில் காணப்படவில்லை என்பதைத் தெரிவித்து அம்முறைகாரர் பூஜைக்குப் போயினர். அதன்மேல் பொதுவார்கள் ஸ்ரீமந்நடராஜராஜரைத் தியானித்துப் பஞ்சாக்ஷரத்தை ஜபம் பண்ணினார்களாக. ராஜராஜர் ஓர் விருத்தப்பிராமணராய் வெளிவந்து 'நான் சித்ஸபேசனே' என்று சொல்லி உமாபதிதீக்ஷிதருடைய விருத்தாந்தமுழுதையும் கூறுவாராயினர். அவர் கூறியருளியது முழுதையும் முனீசுவரர்களெல்லாரும் பரபக்தியோடு கேட்பார்களாக. அவர்களுள் ஒரு இளைஞர் அது முழுதையும் ஏடுபிடித்து எழுதுவாராயினர்.

சித்ஸபேசர் கூறியதாவது: ''உமாபதி மஹாவிவேகி; ஞானி; என்னுடைய அம்சன்; என்னுடைய அனுக்கிரஹத்தினாலே விதிவிலக்கு இரண்டையும் ஸமமாகக்கண்டு பூமியில் ஸஞ்சரிக்கின்றான் என்பதை, அந்தணர்களே, அறிந்துகொள்ளுங்கள். அவன் கைலாசத்தில் நமது செம்பொற்றிருக் கோயிலிலே நமது ஆஞ்ஞையை வஹித்து நம்மைப் பிரியாது பணிபூண்டிருப்பவன். அவனைப் 'பூமியிலே சிதம்பரத்திலே தில்லைவாழந்தணர்களது குலத்திலே நீ பிறக்கக்கடவாய்' என்று நாம் கட்டளையிட்டருளினோமாகக், கைலையைவிட்டு மண்ணுலகத்திற்போய்ப் பிறக்கலாமா என்று அவன் துக்கத்தை அடைந்தான். அதுகண்டு 'துக்கிக்காதே, மண்ணுலகிற்பிறந்த உன்னை உனது அபரவயசில் நாம் வந்து சுந்தரனைப்போல ஞானிகளுள் சிரேஷ்டனாக்குவோம்' என்று நாம் அருளிச்செய்தோம். அவன் அதை நம்பி அங்ஙனம் வந்து பிறந்தான். அவன் ஞானஸ்வரூபன், மஹாத்மா,

அவனை மதிமறந்தவன் ஆசார சூன்னியன் என்று. முனீந்திரர்களே, ஒருக்காலும் அவமதிக்காதீர்கள். எனது சிவலிங்கப் பெட்டகக்கோயில் எனது ஆஞ்ஞையினாலே என்னுடைய ஸ்வரூபனாகிய உமாபதியினது நிர்மலமான ஆசிரமத்தில் போயிருக்கின்றது. அவனிடத்தில் எல்லாரும் போய்க் கேட்டு வாங்கிக் கொண்டுவாருங்கள்' என்பதாம். என்று இங்ஙனம் கட்டளையிட்டருளிச் சிற்சபாநாயகர் மறைந்தருளினர்.

தில்லைவாழந்தணர்களெல்லாம் ஸபாநாயகரது வசனத்தைக் கேட்டவுடன் நாங்களெல்லாரும் சிவஞானச்செல்வராகிய உமாபதி சிவாசார்யரிடத்தில் போய் அவரது பதகமலங்களில் பணிந்து ஸபாநாயகரது வசனத்தைத் தெரிவித்துச் சிவலிங்கப் பெட்டகக்கோயிலைக் கேட்டு வாங்கிக்கொண்டு வருவோமென்று ஆலோசித்துச் சுவேததடாகமென்னும் வெள்ளைக்குளக்கரையில் கொற்றங்குடிமடாலயத்தில் வசிக்கின்ற உமாபதிசிவாசார்யரை அடைந்து நமஸ்கரித்து 'ஸ்வாமீ, நாங்கள் மஹாபராதிகளாய்விட்டோம், ஸபாநாயகருடைய அருளுபதேசத்தால் உம்முடைய பிரபாவத்தை இப்பொழுதுதான் அறிந்தோம்' என்பதைத் தெரிவித்தார்களாக. 'நீங்களெல்லாரும் இப்பொழுது இவ்விடத்தில் வருதற்குக் காரணமென்னை' என்று ஆசார்யர் கேட்டருள, 'நேற்றிரவு சித்ஸபைநடுவே வைத்திருந்த சந்திரமௌளீசுவரரது பெட்டகக்கோயில் இன்றுகாலையில் காணாமல் மறைந்து விட்டதாக, நாங்களெல்லாரும் விசாரமுற்றிருந்தகாலையில் ஸபாநாயகர் விருத்தப்பிராமண வடிவங்கொண்டுவந்து அது தேவரீருடைய மடாலயத்திலிருப்பதாகக் கட்டளையிட்டருளினார்'' என்று தில்லைவாழந்தணர்கள் நிகழ்ந்த ஸமாசாரத்தைத் தெரிவித்தார்கள்.

அதுகேட்டு ஆசார்யர் ''நான் எங்கே! சந்திரமௌளீசுவரலிங்கம் எங்கே! சித்ஸபை எங்கே! பெட்டகக்கோயில் எங்கே! நடராஜராஜருக்குத் துல்லியர்களாகிய நீங்கள் எங்கே! நான் ஒன்றுமறியேன்!! ஆயினும் பெட்டகக் கோயிலைத் தேடிப்பார்க்கின்றேன்'' என்று தமது பூஜைக்கட்டிற் புகுந்து பெட்டகக்கோயிலைக் கண்டெடுத்து அதனைத் திருக்கதவு நீக்கி அதனுள்

சந்திரமௌளீச்வரலிங்கத்தைத் தரிசித்து அதனை மீட்டும் திருக்காப்பிட்டுத் தில்லைவாழந்தணர்கள்பால் ஒப்பித்தார். தில்லைவாழ்ந்தணர்கள் அதனை ஏற்றுக்கொண்டு ஸபையில் கொண்டுவந்து சேர்த்து முன்போலப் பூஜித்து வருவாராயினர். உமாபதிசிவாசாரியரும் பிராதக்காலத்தில் ஸ்நாந ஸந்தியாவந்தன முதலிய ஸத்கர்மங்களை முடித்தும், மத்தியாந்நத்தில் வேத-பாராயணமும் தமிழ்வேதபாராயணமும் சங்கம் வேணு வீணை தாளம் கண்டாமணி முதலிய வாத்தியகோஷங்களும் நிகழ ஸ்ரீசிவகாமசுந்தரிக்கும் ஸ்ரீசித்ஸபேசருக்கும் மூலலிங்கத்துக்கும் யந்திரநாயகருக்கும் ஆராதனம் செய்தும், அபராந்நகாலத்தில் புதியனவாகிய நூல்களை இயற்றியும், ராத்திரியில் சீடர்களுக்குக் கர்மகாண்ட ஞானகாண்டங்களை உபதேசித்தும் சிவத்தியானதற்-பாராயிருந்துகொண்டு வருவாராயினர்.

அவர் அருளிச்செய்த அருணூல்களாவன: வடமொழியில் சிதம்பர பூஜோத்ஸவ விதாயகமாகிய **பாதஞ்சலசூத்திரம், நடராஜஸஹஸ்ரநாமம், ஸ்ரீருத்திரம், சமகம்** என்பனவற்றிற்கும் **வாயுஸம்ஹிதைக்கும், கர்ஷணம்**முதலிய எட்டுஸம்ஹிதைகளுக்கும் தனித்தனி பாஷ்யமும், **நடராஜத்துவனி மந்திரஸ்தவமும், யந்திரவிதானடீகையும், குஞ்சிதாங்கிரிஸ்தவமும்,** முதலியன பலப்பலவாம்.

இனித் தாந்திரிகர்களுள்[2] ச்ரேஷ்டர்களாகிய பரிபக்குவ சீடர்கள் சிலர் பல்காலும் ஆசார்யரை அடுத்து வணங்கிச் சைவாகமங்களிலொன்றாகிய **பௌஷ்கரத்து**க்கு விருத்தியாகிய **பாஷ்யம்** ஒன்று இயற்றியருளல் வேண்டும் என்று பெருந்தாக-முடையவர்களாய் மூன்று மாஸங்களாகப் பிரார்த்தித்துக்கொண்டு வந்தார்கள். ஆசார்யரும் அவர்கள் பிரார்த்தித்ததே வியாஜமாகக்-கொண்டு **பௌஷ்கரஸம்ஹிதை**யினது நான்காவதாகிய ஞான-பாதத்துக்கு விருத்தியாகிய **பாஷ்யத்**தை இயற்றியருளினார்.

---

2. ஈண்டுத் தாந்திரிகர்கள் என்றது வேதபாஹ்யர்களாகிய கேவல-தாந்திரிகர்களையன்று. ''सनकादिमुनीन्द्रेभ्यो वेदान्तार्थागमानदात्'' ''ஸனகாதி

இன்னும் தமிழில் திருத்தொண்டர் புராணஸாரம் முதலாகப் பதினைந்து அருணூல்களை உலகமுய்யும்பொருட்டுத் தாமாகவே அருளிச்செய்தனர்.

இங்ஙனம் நிகழ்ந்துகொண்டுவருநாளில் திருவிடைமருதூரிலே வேத வேதாங்க முதலிய நூல்களில் வல்லவரும் வைதிகாநுஷ்டானநிரதரும் சாம்பமூர்த்தியிடத்தில் பரபக்திசெய்பவரும் பிரமபாவனையுடையவரும் ஸர்வ ஜனங்களாலும் கொண்டாடப்படுபவருமாகிய ஒரு ஸற்பிராமணர் தமது ஸத்கர்மங்கள் ஒன்றும் வழுவாது அநுட்டித்து வசித்துக்கொண்டிருந்தார். அவர் சில

முனீந்திரர்கள் பொருட்டு வேதாந்தார்த்தங்களாகிய ஆகமங்களை அளித்தார்'' என்னும் வியாஸஸூக்தியினாலும் ''सिद्धान्तो वेदसारत्वात्'' ''வேதஸாரமாதலால் ஸித்தாந்தம்'' என்றற்றொடக்கத்த சிவாகமஸூக்திகளாலும் வேதஸாரமாகிய ஸித்தாந்த சைவாகமங்களை ஓதியுணர்ந்து துறைகண்ட உபயசுருதி ஸம்மதர்களாய்க் கிருதார்த்தர்களாகிய வைதிக தாந்திரிகர்களை என்க. தந்திரமெனினும் ஸித்தாந்தமெனினும் ஒக்கும். இது ''तन्त्रं प्रधाने सिद्धान्ते सूत्रवाये परिच्छदे'' என்னும் அமரகோசத்தாலுணர்க. தந்திரம் என்னும் ஸித்தாந்தத்தை ஓதினவன்றான் உணர்ந்தவன்றான் தாந்திரிகனென வழங்கப்படுவான். இது 'तान्त्रिको ज्ञातसिद्धान्तः' என்னும் அமரகோசத்தால் உணர்க. இவ்வுண்மை ஈண்டு ஆசார்யர் பௌஷ்கரபாஷ்யகாரர் வேதத்துக்குப் பிராமாண்யம் கூறி அதனது ஸாரமாதலால் ஸித்தாந்த சைவாகமத்துக்கு உத்தமப்பிராமாண்யம் கூறிய பிரகரணத்தின் வைத்துக் கடைப்பிடிக்க.

''ஒரும் வேதாந்தமென்றுச்சியிற்பழுத்த
ஆராவின் பவருங்கனி பிழிந்து
சாரங்கொண்ட சைவசித்தாந்தத்
தேனமுதருந்தினர் சிலரே.''

என்று பண்டார மும்மணிக்கோவையில் குமரகுருபரசுவாமிகள் வெளிப்பட விளக்கியருளியவாற்றுலும் இவ்வுண்மை தெளிதரப்படும்.

பாபவசத்தால் கௌரியாச்சிரமம்[3] என்னும் ஸ்தலத்தில் நீசர் குலத்தில் வந்துபிறந்து சூதன்[4] என்னும் நாமமுடையராய் அகத்தே ஞானபரிபக்குவசீலராய் நந்தனாரை ஒத்த சரியையாளராய் மன்மதனை ஒத்த அழகையுடையராய்ப் பஞ்சப்புலன்களைப் போரில் வென்றவராய் வாக்கில் மௌனியாய் நீசவிருத்தியைக் கைவிட்டு நல்ல விருத்தியுடையராய் வாழ்ந்துகொண்டுவந்தார். இங்ஙனம் வாழ்ந்துவருநாளில் அவருக்கு இருபத்தைந்து வயசாக ஒருநாள் ஸ்ரீமந்நடராஜராஜர் அவரது கனவின்கண் எழுந்தருளி அவரது அஞ்ஞான சுழுத்தியினின்றும் அவரைத் தட்டி எழுப்புவாராய்ச் 'சூதனே, நீ இதுதொடுத்து நமது சிதம்பரத்தை அடைந்து புவிமடுவில் அனுதினமும் ஸ்நானம் செய்து பஸ்ம ருத்திராக்ஷங்களைத் தரித்துத் திருவீதியைப் பிரதக்ஷிணம்செய்து நமது பாகசாலைக்காக விறகுகட்டுக்கொண்டுவந்து ஸமர்ப்பித்தலாகிய பணிபுரிந்துவரக்கடவாய்'' என்று கட்டளையிட்டு மறைந்தருளினார். அப்பொழுது சூதர் விழித்தெழுந்து ''ராஜராஜரது திருவருள் இத்தனைக் கெளிவந்தவாறு என்னை!!'' என்று வியந்து அடுத்தநாள் கௌரியாச்சிரமத்தினின்று சிதம்பரத்துக்கு வந்து ராஜராஜர் கட்டளையிட்டருளியபடி வழுவாதொழுகிவந்தார்.

இங்ஙனம் ஒழுகிவருநாளில் ஒருநாள் சூதர் வழக்கம்போல விறகுகட்டுச் சுமந்துகொண்டுவரும் மார்க்கத்தில் ராஜராஜர் காஷாயவஸ்திரம் தரித்த ஒரு நான்காம்வருணத்துச் சன்னியாசியாய் வந்து 'கொற்றங்குடியில் வசிக்கும் உமாபதிசிவாசார்யரது

---

3. கௌரியாச்சிரமம் சிதம்பரத்திற்குக் கிழக்கே நாலுநாழிகைவழி தூரத்திலுள்ளது. அது இப்பொழுது 'கவரப்பட்டு' என்று மருவிவழங்கி வருவதாயிற்று. கௌரிபற்று என்பது அதற்குப் பொருள்.

4. சூதன் எனினும் பெற்றான் எனினும் பொருள் ஒன்றேயாம். அதனோடு சாம்பான் என்னும் ஜாதிப்பெயர் சேர்ந்து பெற்றான்சாம்பான் எனப்பெயர் வழங்கப்படுவதாயிற்று. ராஜராஜரது சீட்டுக்கவியில் வைத்து வழங்கப்படுதற்கு அதற்கு அமைந்த மஹிமையன்றோ மஹிமை! அஹோ!! ஆச்சர்யம்!!!

பாகசாலைக்கு உபயோகமாகவும் அனுதினமும் விறகுகட்டுக்கொண்டுபோய் ஸமர்ப்பிக்கக்கடவாய்' என்று கட்டளையிட்டு மறைந்தருளினார். அவரது கட்டளைப்படி சூதர் அடுத்தநாள் தொடக்கமாக உமாபதி சிவாசார்யரது கொற்றங்குடி ஆச்சிரமத்தில் சமையற் பரிசாரகனிடத்தில் விறகுகட்டுக்கொண்டுவந்து கொடுத்து வருவாராயினர்.

இங்ஙனம் சூதர் ஐம்பத்தைந்து வருஷகாலமாக உமாபதி சிவாசார்யரது திருவுளத்தில் திருப்தி உண்டாகிறவரை விறகு-கட்டுக் கொடுத்துக்கொண்டு வந்தார். இங்ஙனம் நிகழுநாளில் ஒருநாள் மிக்க மழைபெய்தமையினால் சூதருக்கு வழக்கப்படி விறகுகட்டுக் கொண்டுவந்து கொடுக்கமுடியாமற் போய்விட, அன்று மடைப்பள்ளியில் பாகம் தாமசமாயிற்று. அப்போது மடாதிபதியாகிய உமாபதி சிவாசார்யர் சிவாராதனத்தின்முடிவில் நிவேதனங்களைக் கொண்டுவரும்படி கட்டளையிட்டருளினாராக, பாசகன் வியஞ்சனங்களில்லாமே அன்னத்தைமாத்திரம் கொண்டுவந்துவைத்தான். அதுகண்டு 'எஞ்சிய பதார்த்தங்களையும் முடித்துக் கொண்டுவந்துவைக்கக்கடவாய்' என்று ஆசார்யர் கட்டளையிட, 'அது முடியாமைக்குக் காரணம் பின்பு தெரிவிப்பேன். இப்போது இம்மட்டில் பூஜையை முடித்துக்கொள்க' என்று பாசகன் விண்ணப்பம் செய்தனன். ஆசார்யரும் அங்ஙனம் பூஜையை முடித்துச் சீடர்களோடு திருவமுதும் செய்துமுடித்து ஆசனத்தில் வந்தெழுந்தருளியிருந்தார். பாசகன் ஆசார்யரை நமஸ்கரித்துத் 'தேவரீர் திருவடிகளில் இடையறாத் தியானமுற்றவனாய் நந்தனாருக்கு ஒத்தவனாகிய சூதனென்னும் நீசனொருவன் தனது ஒழுக்கத்தில் தவறாதவன் ஐம்பத்தைந்து வருஷகாலமாகப் பாகத்துக்கு உபயோகமாக உலர்ந்த விறகு-கட்டைக் கொண்டுவந்து கொடுத்துவந்தான். இன்று மிக்க மழைபெய்தமையினால் அவன் விறகுகட்டுக் கொண்டுவர-முடியாமை நேர்ந்தது' என்று விண்ணப்பித்தான். அது கேட்டு 'அந்த நீசன் நாளைக்காலையில் மடத்துக்கு வரும்பொழுது அவனை நமது சமீபத்தில் அழைத்து வரக்கடவாய்' என்று

ஆசார்யர் கட்டளையிட 'அங்ஙனமாகுக' என்று பாசகன் ஒப்புக்கொண்டான்.

இஃதிங்ஙனமாக, சூதர் அடுத்தநாள் வனத்திற்போய் இரண்டு மடங்கு ஈரவிறகுகளைக் கட்டிக்கொண்டு கொற்றங்குடியை நோக்கிவரும் மார்க்கத்தில் ஸ்ரீமந்நடராஜராஜர் ஓர் சன்னியாசியாய் வந்து தமது திருக்கரத்தால் எழுதிய சீட்டுக்கவி ஒன்றைக் கொடுத்து 'அன்பனே, இதனை உமாபதி சிவாசார்யரிடத்தில் சேர்ப்பிப்பாயாக. அவருடைய கடாக்ஷத்தினாலே நமது பதத்தை அடைவாய்' என்று அருளிச்செய்து மறைந்தருளினார். சூதரும் மடத்தின் வாயிலில் விறகுகட்டைக் கொண்டுவந்து சேர்த்துவிட்டு ஆசார்யரிடத்தில் சீட்டுக்கவியைக் கொடுக்கும்படி விப்பிரனாகிய பாசகனை வேண்டிக்கொண்டார். பாசகன் அந்தச் சீட்டுக்கவியைக் கொடுத்தஅளவில் ஆசார்யர் அதனை ஏற்று அது ராஜராஜரது சுகந்த கரகமலங்கொண்டு எழுதப்பட்டமையினால் அது நிரதிசயமாகிய தைவிகநறுமணங் கமழ அதனை முகர்ந்துபார்த்து உச்சியின்மேல் வைத்து மார்பிலும் இருகண்ணிலும் ஒற்றிக்கொள்வாராய் ராஜராஜரது ஸ்வஹஸ்த லிகிதமாகிய அச்சீட்டுக்கவியை வாசிப்பாராயினர். அதில்

''அடியார்க்கெளியன்சிற்றம்பலவன்கொற்றங்
குடியார்க்கெழுதியகைச்சீட்டுப்—படியின்மிசைப்
பெற்றான்சாம்பானுக்குப்பேதமறத்தீக்கைசெய்து
முத்திகொடுக்கமுறை.''

என்று எழுதப்பட்டிருந்தது. ஆசார்யரும் ராஜராஜரது இச்சீட்டுக்கவியை மீட்டும் சிரமேற்கொண்டு மஹாதீரனும் உதாரபுத்திமானுமாகிய சூதனென்னும் பெற்றான்சாம்பானை அவனது சக்திநிபாதத்துத்தமபரிபாகம் கண்டு மகிழ்ந்து அவனுக்குச் சாக்ஷுஷதீக்ஷைசெய்து உடனே முக்திகொடுத்தருளினார்.

அதன்பின் பெற்றான்சாம்பானுடைய மனைவி மக்கள் சுற்றத்தார்கள் ஜனங்களுடைய வதந்தியினால் இந்த விருத்தாந்தமுழுதையும் கேள்வியுற்று உமாபதி சிவாசார்யரிடத்தில் வந்து

'பெற்றான்சாம்பான் உம்முடைய திருவடிக்கன்பனாய் ஒழுகிவந்தானே! அவன் எங்கே?' என்று கேட்டார்கள். அதற்குச் 'சிவபக்தனும் நிர்மலசித்தனுமாகிய அவன் சிவானுக்கிரஹத்தால் முக்தியை அடைந்தான். இனிச் செய்யற்பாலது யாது' என்று ஆசார்யர் விடை அளித்தார். அதில் நம்பிக்கை பிறவாமல் அவர்கள் சோழராஜனை அடைந்து தெரிவித்தார்கள்.

சோழனும் அது கேட்டு அவர்களோடு கூடிக் கொற்றங்குடியில் வந்து ஆசார்யரை வணங்கி 'ஸ்வாமீ, பெற்றான்சாம்பானது செய்தி சிறிது அறிவேன். அவனது செய்திமுழுதையும் தேவரீர் அருளிச்செய்தல் வேண்டும்' என்று அஞ்சலியஸ்தனாய் நின்று கேட்டான். அதற்கு ஆசார்யர் 'அவனது மனைவி மக்கள் சுற்றத்தார் சொல்லுவது அவனது உண்மையாகிய செய்தியன்று. அவன் பிரபலமாகிய புண்ணிய பரிபாகத்தால் முக்தி அடைந்தான்' என்று அருளிச்செய்து சிவத்தியானத்தில் அமர்ந்தருளினார். அவ்வளவில் விடாது சோழனும் 'தேவரீர் அடியேனது விண்ணப்பத்தைத் திருச்செவி சாத்தியருளுக. இன்னுமொரு ஆன்மாவுக்கு இந்தப்பிரகாரம் முத்திகொடுத்தருளல்வேண்டும்' என்று பயத்தோடு கூடியவனாயினும் மீட்டும் துணிந்து கேட்டானாக, அதற்குச் 'சித்தசுத்தியோடு கூடிய பக்திமான்கள் கிடைத்தற்கரியர். ஆயினும் நமது மடத்தின் முகப்பிலிருக்கின்ற முள்ளங்கத்தரிமரம், நமக்குக் கத்தரிக்காய் உபகரித்துவந்த மகிமை படைத்ததாதலால் அதனை முத்திபெறுதற்குரிய பக்குவமுடையதாகச் செய்கின்றோம், பார்க்கக்கடவாய்' என்று அதற்குரிய பார்வையை அரசனுக்குக் கொடுத்துப் பரமாத்மஞானியும் முனிவருமாகிய உமாபதி சிவாசார்யர் முள்ளங்கத்தரி மரத்துக்கு ஸமீபமாகப் போய்நின்று தமது உதாரகாருண்ணிய ஞானசக்தியினாலே அதைப் பார்த்துப் பரமாத்ம பாவனையினாலே அதற்கு ஜோதி வடிவத்தைக் கொடுத்தருளினார். எல்லாரும் பார்த்துக்கொண்டிருக்கவே அம்முள்ளங்கத்தரிமரம் தனது மரவடிவம்போய்ப் பஸ்மமாயிற்று. அரசன் முதலிய எல்லாரும் அந்த அற்புதச்செயல்கண்டு ஆசார்யர் பெருமானுடைய திருவடிகளில் விழுந்து நமஸ்கரித்து ஆச்சர்ய பரவசர்களாய் நின்றார்கள்.

அப்பொழுது பஸ்மமாய்ப்போன முள்ளங்கத்தரி மரத்தினின்று சுரேசுவரர் எனப் பெயரிய முனிவர் ஒருவர் தோன்றி ஆசார்யர் பெருமானைத் தரிசித்து அவரது பதகமலங்களில் விழுந்து நமஸ்கரித்துத் துதித்துத் தமது வியக்கற்பாலதாகிய வரலாற்றைத் தெரிவிப்பாராயினர். ''ஸ்வாமீ, இங்கே முன்னாளில் முள்ளங்கத்தரி மரத்தினடியிலே வத்ஸமுனிவர் தவம் செய்துகொண்டிருந்து மலையைநோக்கிச் சென்றனர். அவர் செல்லுங்கால் வெறுமனே செல்லாது இந்த மரத்தடியில் இன்னுமொருவர் வசித்திருந்து தவம் செய்வாரானால் இந்த மரவடிவத்தை அடையக்கடவர்'' என்று சபித்து விட்டுப்போயினர். அதனை அறியாமல் நான் இந்த மரத்தடியில் தபசு பண்ணிக்கொண்டிருந்த அளவில் ஓர் மஹான்மாவினால் வத்ஸமுனிவர் அங்ஙனம் சபித்துப்போன விருத்தாந்தத்தைக் கேள்வியுற்று அவரை அடைந்து நமஸ்கரித்து அவரிட்ட சாபவரலாற்றைத் தெரிவித்து அதற்கு விடுதலை எங்ஙனமுளதாம் என்று பிரார்த்தித்து நின்றேன். அதற்கு அவர் ''சுரேசுவர, நீ மரவடிவத்தை அடைந்தாலும் ஞானி ஒருவரது பார்வை மாத்திரத்தால் பஸ்மரூபனாய் அக்கணத்திற்றானே பிராமண சரீரத்தை அடைந்து அவருபதேசித்த மந்திரத்தியானத்தால் பிறப்பிறப்பற்ற பெருவாழ்வாகிய முத்தியை அடைவாய்'' என்று விடை அளித்தார். அப்பொழுதே நான் முள்ளங்கத்தரி மரவடிவத்தை அடைந்து உம்முடைய பூஜோதகங்களால் வளர்க்கப்பெற்றவனாய் இப்பொழுது மரவடிவத்தை விட்டுப் பிராமணவடிவத்தை அடைந்து மந்திரோபதேசத்திற்குரியனாயினேன்'' என்று இங்ஙனம் தமது வரலாற்றைத் தெரிவித்தார். உடனே காருண்ய ஞானகுருவாகிய உமாபதி சிவாசார்யர் அவரது வரலாறுமுழுதுங்கேட்டு முக்திபஞ்சாக்ஷரமென்னும் மஹாமந்திரத்தை உபதேசித்தருளினார். சுரேசுவர முனிவரும் அந்த மந்திரத்தியானத்தினால் உடனே சிவமாந்தன்மைப் பெருவாழ்வாகிய முக்தியின்பத்தை அடைந்தார். இங்ஙனம் ஸத்யோமுக்திப்பிரதராகிய உமாபதி சிவாசார்யரது இம்மஹிமையை அரசன் முதலியோரும் ஐயநீங்கக் கண்ணாரக்-

கண்டு அவரை வணங்கி உய்திபெற்றுத் தத்தமிருப்பிடம் போய்ச்சேர்ந்தார்கள்.

இஃதிங்ஙனமாக, ஒருகாலத்தில் மார்கழிமாஸத் திருவாதிரைத்திருநாள் வந்துசேர, முதலாவது கொடியேற்றத் திருநாளில் தில்லைவாழந்தணர்களுள் உத்ஸவாசார்யர் இடபக்கொடியை ஏற்றும்பொருட்டு அதனை இரண்டுகையாலும் இழுத்தனர். அந்தக்கொடி அவரது யத்தினத்தால் நிலத்தைவிட்டு ஏறாதிருந்தது. அப்பொழுது தில்லைவாழந்தணர்கள் எல்லாரும் சேர்ந்து கொடியேறாமைக்குக் காரணம் என்னை என்று விசாரமுற்று ஆலோசித்து நின்ற ஸமயத்தில், ''முனிவர்களே, கொற்றங்குடி உமாபதியை இப்பொழுது வருவிக்கக் கடவீர்கள்' என்று ராஜராஜரது திருவருளால் ஒரு அசரீரிவாக்கு எழுந்தது. அதுகேட்டு முனீந்திரர்களாகிய தில்லைவாழந்தணர்கள் கொற்றங்குடி மடத்துக்குப் போய் உமாபதிசிவாசார்யரது சரணபங்கஜங்களைப் பணிந்து நிகழ்ந்த ஸமாசாரத்தைத் தெரிவித்து ஆசார்யரைச் சிவிகையின் மேல் ஏற்றித் தாமே சுமந்துகொண்டு ஆலயத்துக்கு வந்துசேர்ந்தார்கள்.

உமாபதி சிவாசார்யர் துவஜாரோஹண ஸன்னிதியை அடைந்து தமிழில் அர்த்தகம்பீரங்களாகிய நாலு செய்யுட்கள் கொண்டு 'கொடிக்கவி' என்னும் சித்தாந்தநூலினால் ஸ்ரீமந்நடராஜராஜரைத் துதித்துநின்ற அளவில், ராஜராஜரது திருவருளினால் இடபக்கொடி தில்லைவாழந்தணர்கள் முதலிய எல்லா மஹாஜனங்களும் ஆனந்தபரிபூர்ணர்களாய் இமை கொட்டாது பார்த்தபடி நிற்க, ஆசார்யர்பெருமானது மஹிமையால் ஒருவரும் இழுக்காமலே நிலத்தைவிட்டுக் கிளம்பித் தானாகவே சீக்கிரம் ஏறுவதாயிற்று. இங்ஙனம் கொடியேற்றுற்சவம் செவ்வே நிகழ்வதாயிற்று.

அதன்மேல் சிவமே தாமாய் அருள்வடிவங் கொண்டவதரித்தருளிய ஸ்ரீமதுமாபதி சிவாசார்யரை மடாலயத்தினின்றும் அழைத்துவந்த வெள்ளிச்சிவிகையின்மேல் தில்லைவாழந்தணர்கள் மீட்டும் ஏற்றிச் சுமந்துகொண்டு அவரது மடாலயத்தை

அடைந்து அவரிடத்தில் அனுமதிபெற்றுக்கொண்டு தத்தம் திருமாளிகைக்கு வந்துசேர்ந்தார்கள்.

இங்ஙனம் ஆசார்யர் கொடிக்கவிபாடிக் கொடியை ஏற்றிய ஐந்தாவது வருஷத்தில் வைகாசிமாசத்தில் குருவாரத்தில் ராத்திரி-யில் பூஜைமுறைகாரர் வழக்கம்போலப் பூஜைசெய்யும்-பொருட்டுச் சித்ஸபையினது திருக்கதவம் திறந்து பார்க்கும்-பொழுது சிவகாமசுந்தரிஸமேதராகிய சித்ஸபேசர் காணப்-படாதவராயினர். இந்த ஆச்சர்யமான ஸமாசாரத்தைத் தில்லை வாழந்தணர்களெல்லாம் பூஜைமுறைகாரரால் தெரிந்து தேவ-ஸபையில் பொதுக்கூடி இதைப்பற்றி ஆலோசித்துக்கொண்டிருந்-தார்கள். அப்பொழுது ஸ்ரீமந்நடராஜராஜர் சிதம்பரமத்தியில் நிர்க்குணராயிருப்பது தமது இயற்கையாயினும் தமது திரு-வடியைப் பாவிப்பார் பாவனைக்கு எளிவந்து நின்று அவரவர்க்-கேற்ற ஸகுணவடிவங்கொண்டருளுதல் அவரது வற்றாக்கருணை வள்ளன்மையாதலின் தம்மவர்களாகிய தில்லைவாழந்தணர்-களுக்கு எளிவந்துநின்று ''முனிவர்களே, உமாபதிதீக்ஷிதனால் செய்யப்பட்ட ஆலய புராணமென்னும் கோயிற்புராணத்தின்-மத்தியில் தங்குவேனாய் அவனது பூஜைமடத்தினடுவில் வைக்கப்பட்ட ஸ்வர்ணப்பெட்டகக்கோயிலினடுவே சிவகாமி-யோடியைந்து வசிக்கின்றேன். அவனை நீங்களெல்லாரும் அழைத்துவந்து எனது ஸந்நிதி மணிமண்டபத்தினடுவே பீடத்தின்மேல் அவனை வீற்றிருக்கவைத்து அவனது ஸந்நிதியில் எல்லாரும் ஸந்நிஹிதர்களாயிருந்து வேதம் தமிழ்வேதமென்னும் இரண்டுவேதத்தின் வைத்துக்கடைந்தெடுத்த அமிர்தரஸமாயும் தமிழ்ச்செய்யுளினது சாரங்கொண்டமைக்கபட்டதாயும் மஹத்-தாயுமுள்ள என்னுடைய ஸ்தலபுராணமாகிய கோயிற்புராணத்தை மூன்றுபக்ஷபர்யந்தம் அனுதினமும் காலையில் ஸங்கவ காலத்தில் சிரவணம் பண்ணிக்கொண்டு வாருங்கள். அதில் முதற்-செய்யுளைச் சொல்லும் சமயத்தில் சிவகாமியோடியைந்து நான் சித்ஸபையில் பிரவேசித்து உங்களெல்லாருடைய காட்சிக்கும் கோசரனாவேன். ஆதலினால் நீங்களெல்லோரும் சடிதியாக உமாபதிதீக்ஷிதனது மடம் போய்ச்சேருங்கள்'' என்று நமக்கு

15280

அனவரத தாண்டவநிலயமாய்த் தாமென்றும் விட்டகலாத சித்-ஸபையைவிட்டு எழுந்தருளத்துணிந்த ஸ்தலத்தையும், தாம் எழுந்தருளியிருந்த முறைமையையும் பொதுவார்களாகிய திருவுடையந்தணர்களுக்கெல்லாம் தெரிவித்து அனுப்பிவிட்டு அம்மையோடு சித்ஸபையில் கலந்தருளினார்.

ராஜராஜரது ஆஜ்ஞையைத் தில்லைவாழ்ந்தணர்கள் சிரமேற்-கொண்டு கொற்றங்குடி மடாலயத்தை அடைந்து முனிவர்களுள் சிரேஷ்டராகிய உமாபதி சிவாசார்யரைத் தரிசித்து வணங்கி ''ஸ்வாமீ, நீரியற்றியருளிய **கோயிற்புராணத்தைக்** கேட்டற்-கண்ணே மனம்பற்றி வந்திருக்கின்றோம். பரமாத்மஸாக்ஷாத்கார-வானாகிய தேவரீர் சீக்கிரம் எழுந்தருளல் வேண்டும்'' என்று பிரார்த்தித்தார்கள். உமாபதி சிவாசார்யரும் அவர்களது வசனத்-தைக் கேட்டு அவர்களோடு எழுந்தருளிவந்து சித்ஸபையில் பிரவேசித்து என்றும் கண்டாமணி கட்டி ஒலித்தலால் அப்பேர்-பெற்ற மணிமண்டபநடுவே அமைக்கப்பட்ட பீடத்தின்மேல் கிழக்கு நோக்கி உயர்த்திய கையையுடையராய்ச் சித்ஸபா-நாயகரை ஹிருதயகமலமத்தியிலே தியானித்துப் பீடாரூடராய் வீற்றிருந்து திருவுடையந்தணர்களைப் பார்த்துத் தமது **கோயிற்-புராணத்தைப்** படித்துப் பொருள் சொல்லுதற்குத் தொடங்கினார். அப்பொழுது ஸ்ரீமந்நடராஜராஜர் சிவகாமியம்மையாரோடியைந்து சித்ஸபைக்கு எழுந்தருளி வழக்கம்போல எல்லாருக்கும் காட்சி-கொடுத்தருளினார்.

ராஜராஜர் அங்ஙனம் காட்சிகொடுத்தமாத்திரத்தில் தில்லை-வாழந்தணர்கள் அவரையும் உமாபதி சிவாசார்யரையும் ஒருங்கே தரிசித்துப் பரமானந்த ஸமுத்திரத்தில் முழுகின சித்தர்களாய்ப் புராணவசனம் முழுதையும் அத்தியந்த சிரத்தையோடு இனிது கேட்பாராய் அதுதொடுத்து நாற்பத்தைந்துநாளாகிய மூன்று-பக்ஷமாக ஆலயத்தில் ஆரம்பம்முதலாக நடுவில் இடையறாமல் சமாப்திபர்யந்தம் உமாபதி சிவாசா்ர்யரது வசனத்தால் பிராமண-ஸமாராதனம் செய்து முடிவில் ராஜராஜருக்கு மஹாபூஜை செய்து இங்ஙனம் **கோயிற்புராணத்தை** உலகமெல்லாம் கொண்டாடக்

கோயிற்பட்டவர்த்தன யானையின் மேல்வைத்துத் திருவீதியில் திருவுலா வருவித்துச்[5] சித்ஸபையிலரங்கேற்றிப் பரிஸமாப்தி செய்வித்தார்கள்.

உமாபதிசிவாசார்யரும் தமது கொற்றங்குடி மடாலயத்தில் வசித்திருந்தபோதிலும் தில்லைவாழந்தணர்களைத் தம்மவர்களென்னும் உரிமை பாராட்டுவதன்மேலும் தமக்குப் பூஜ்யர்களெனவைத்தும் போற்றிவருவாராயினர்.

அதன்மேல் ஆசார்யர் சிவஸமாதியினாலும் சிவார்ச்சனை முதலியவற்றாலும் ஸற்காலக்ஷேபம் செய்வாராய்ச் சீடர்களைத் தத்துவோபதேசங்களால் பரிபாலித்து வந்தார். தம்மையடுத்த சீடஸமூகத்தைப் பாதுகாத்தலில் கங்கணங்கட்டிக்கொண்டவரும் பக்திசாலியுமாகிய உமாபதி சிவாசார்யரது மந்திரோபதேசத்தால் பூர்வபுண்ணிய பரிபக்குவர்களாகிய சீடர்கள் பல்லோர் தத்தம் பக்குவ தாரதம்மியத்திற்கேற்பச் சிவஸாலோக்கியம், சிவஸாமீப்பியம், சிவஸாரூப்பியம் பெற்றவர்களாய்க் கிருதார்த்தர்களானார்கள்.

இங்ஙனம் கிருதார்த்தர்களாகிய சிஷ்யர்களுள் குடவுழுந்து முனிவரென்னும் பெயரினர் ஒருவரிருந்தார். அவர் பரமாத்மாவாகிய நடராஜராஜரது பாதாரவிந்தத்தையும் உமாபதி சிவாசார்யரது பாதாரவிந்தத்தையும் தியானித்துவரும் நியமமுடையவராய் ஆசார்யர்பால் பஞ்சாக்ஷரோபதேசம் பெற்று அதனை ஜபித்துக்கொண்டிருந்து தேகாவசானகாலத்தில் திருக்கைலாஸத்தை அடைந்தார்.

இன்னும் சிவயோகி ஒருவர் வினைவசத்தால் கருடனாய் வந்துபிறந்தவர் அனுதினமும் மத்தியான்ன காலங்களில் ஆசார்யர்-

---

5. கோயிற்புராணத்தைக் கோயிற்பட்டவர்த்தன யானையின்மேல் வைத்துத் திருவுலாவருவித்தமை புராணத்தில் வெளிப்படச்சொல்லாவிடிலும் அது ஆப்தபரம்பரையில் வழங்கிவருவதால் குறிப்பாலுணரவைத்தது என வைத்துப் புராணத்தோடு சேர்த்து எழுதப்படுவதாயிற்று.

பெருமானை வந்து தரிசித்து வலம் வந்துசெல்லும் நியமமுடைய-ராயிருந்தார். அவருக்கு ஆசார்யர் சிவமூலமந்திரமாகிய முக்தி-பஞ்சாக்ஷரத்தை உபதேசித்து அனுதினமும் அதனை அவர் ஜபித்துவந்த புண்ணியத்தினாலே அவரைக் கைலாஸத்தில் பிரமதகணங்களில் ஒருவராய் வாழும்படி வைத்தார்.

உமாபதி சிவாசார்யராலே சிலர் சித்தசுத்தி படைத்து மஹாத்மாக்களாய் உண்மைச்சிவஞானத்தை அடைந்து இம்மை-யில் ஆகற்பாலனவாகிய சுகங்களையெல்லாம் அனுபவித்து உடல்விடுங்காலத்தில் பரமசிவதனுவில் கலத்தலாகிய சிவ-ஸாயுஜ்யத்தை அடைந்தார்கள். சிலர் ஜோதிஸ்வரூபர்களாய்ச் சித்ஸபையை என்றும் விட்டுவிலகாது வசிப்பவர்களானார்கள். சிலர் பிரமபாவத்தையடைந்தார்கள். இங்ஙனம் தாம்தாம் செய்த புண்ணியபரிபாகத்தால் பிராம்மண க்ஷத்திரிய வைசிய சூத்திர-ரென்னும் நான்கு வருணத்தாருள் உமாபதி சிவாசார்யரது பிரஸாதத்தினாலே பதமுக்தி பரமுக்திகளை அடைந்து கிருதார்த்-தர்களானோர்கள் பல்லோர்.

இங்ஙனம் உமாபதிசிவாசார்யர் நானா யோனிகளிலும் பிறந்த-வர்களாய்ப் புண்ணியபரிபாகத்தால் தம்மையடுத்த உத்தமர்களா-கிய சீடஜனங்களுக்கெல்லாம் போகமோக்ஷப்பிரதராயிருந்து அனுக்கிரஹம் பண்ணுதலாகிய தமது திருவவதாரத்தின் பலம் முடிந்து தமது பரிபூர்ணகாலத்தை ஸ்ரீமந்நடராஜராஜரது கடாக்ஷத்-தினால் உணர்ந்து தம்முடைய ஆசார்ய பீடத்தில் வைத்தற்குரிய சுசீலனாகிய சீடன் யாரென்பதைத் திருவுளத்தின் கண் ஆராய்ந்-தனர். அங்ஙனம் ஆராய்ந்த அளவில் தம்முடைய சீடர்களுள் ஒருவராய் நான்காம் வருணத்தவராகிய ஸ்வாமிநாதர்[6] என்னும்

---

6. உமாபதிசிவாசார்யருக்குப்பின் குருசந்தானபீடாரூடராய்வந்தவர் அரு ணமச்சிவாயர் என்று **பார்த்தவனமான்மியத்தில்** கூறிவிட்டு ஈண்டு **ராஜேந்திரபுரமான்மியத்தில்** ஸ்வாமிநாதர் என்று கூறுவது விரோத-மன்றோ எனின், சீடர் ஒருவர்க்கே தீக்ஷாநாமம் ஒன்றும் வழக்கநாமம் ஒன்றுமாக வழங்கப்படுதல் ஒரோவழிக்காணப்படுதலின் விரோத-மின்மை தெளிக. அருணமச்சிவாயர் என்பது தீக்ஷாநாமம்போலும்.

பெயருடையாரைப் பண்டிதராகவும் ஞானவானாகவும் தெரிந்தெடுத்துத் தமது பீடத்தின்மேல்வைத்து ஆசார்ய பட்டாபிஷேகம் செய்து குருஸந்தானம் தழைக்கவைத்துச் சிவத்தியான தற்பரராய்ச் சிவஸமாதிநிஷ்டராயினர்.

இங்ஙனம் சிவஸமாதிநிஷ்டராய் வைதிக சைவசித்தாந்த ஸந்தானகுலப் பிரதீபராய் எழுந்தருளியிருந்த உமாபதி சிவாசார்யர் இவ்வர்த்தமான கலியப்தம் நாலாயிரத்தில் ஈசுவரவருஷத்தில் சித்திரைமாஸத்தில் ஹஸ்தநக்ஷத்திரத்தில் பரப்பிரம பரஞ்ஜோதி பரமானந்தகனமாகிய ஸ்ரீமத்குஞ்சிதபத நிழலையடைந்தார்.

"சுருதியில் விதிக்கப்பட்ட சிரௌதகர்மத்தை ஆசரிக்கும் தீக்ஷிதரது புத்திரரும், சுருதியின் முடிவினதாகிய மோக்ஷஜ்ஞானத்தின்கண்ணே நன்றாக நிச்சயித்தெழுந்த முடிபையுடையவரும், சுருதியிலே புகழ்ந்துரைக்கப்பட்ட கீர்த்தியை உடையவருமாகிய உமாபதி சிவாசார்யர் மானுடசரீரியாய்க் காணப்படுபொருளாயிருத்தலைக் கைவிட்டு ஸச்சிதானந்த சிவதனுமானாய்க் கேட்கப்படுபொருளெனப்படும் சுருதிகோசரராயினர்." சுருதி கோசரர் —கேட்கப்படுபொருளானவர்.

"சந்தோகவம்சத்திலே உதித்த மௌக்திகமணியும் நடராஜராஜரது பத கமலத்தைவைத்த ஹிருதயகமலத்தை உடையவரும் ஆச்சர்யங்களாகிய செயல்களினாலே மஹாமஹிமை படைத்தவருமாகிய உமாபதிசர்மாவின் பொருட்டு எமது நமஸ்காரம் உளதாகுக".

"இவ்வர்த்தமானகலியில் நாலாயிரத்தெண்ணூறுவருஷங்கள் சென்ற அளவில் பிரபவவருஷத்தில் பரப்பிரம பரசிவ பரஞ்சோதி ஸாக்ஷாத்காரவானாகிய உமாபதிசிவாசார்யரது இந்தத் திவ்விய சரித்திரம் ஏற்றக்குறைவின்றி நிகழ்ந்தவாறு புராணரூபமாக இயற்றப்பட்டது."

''அற்புததரமாகிய உமாபதிசிவாசார்யரது சரித்திரம் நூறு சுலோகங்களால் இயற்றப்பெற்றமைந்தது. இதனைப் பிராமணன்-றான் க்ஷத்திரியன்றான் வைசியன்றான் சூத்திரன்றான் யதிதான் எவன் விபூதி ருத்திராக்ஷமாலாலங்கிருத சரீரியாய்க் கிழக்கு நோக்கிய முகமுடையனாய்ச் சுத்தனாயிருந்து பக்தியோடு படிக்கின்றான் அவன் இம்மையிற்றானே சகலசௌக்கியத்தையும் அனுபவித்து தேகாந்தத்தில் நித்தியானந்தப் பெருவாழ்வாகிய முக்தியை அடைகின்றான்.''

இங்ஙனம் ஸ்ரீசிதம்பர தஹரவித்யோபாஸகராகிய சிவானந்த தீக்ஷிதரால் இயற்றப்பெற்ற ''ஸ்ரீராஜேந்திரபுரமான்மியம்'' எனப் பெயர்படைத்த ஸ்ரீமதுமாபதிசிவாசார்யவிஜயம் முற்றுப்பெற்றது.

॥ श्रीमदुमापतिशिवचरित्रसंग्रहः ॥*

श्रीमत्त्रिसहस्रभूसुरकुलोत्पन्नैः परमहंसपरिव्राजकैः
श्रीमद्भिः श्रीचिदम्बरब्रह्मयतिवर्यैः विरचितः ।

किञ्चित्कुञ्चितवामपादविलसन्मञ्जीरमञ्जुक्वणत्
चञ्चत्काञ्चनकिङ्किणीझणझणाकारावबद्धं जगत् ।
कालीताण्डवखण्डनं प्रविलसद्गण्डोल्लसत्कुण्डलं
चण्डं रक्षतु चण्डिकापतिभवं संपत्करं ताण्डवम् ॥ १

पाषण्डोपहतां स्वकीयसरणिं प्रोद्धर्तुमभ्यर्थनात्
देवानां भुवि **पुण्डरीकनगरे** देवः शिवः स्वांशतः ।
त्रैसाहस्रमखीन्द्रवंशजलधौ **शम्भोश्च गौर्यां** पुरा
जातस्तत्र महान**ुमापति**समाख्यातो बभौ देशिकः ॥ २

बाल्ये ताव**दुमापति**श्च सखिभिः चिक्रीड देवैर्मुहुः
आश्चर्यं शिव एष एव भवतीत्यालोकितः **शम्भुजः** ।
श्रीबोधायनसूत्रचोदितपथात् पित्रोपनीतः क्रमात्
अन्यान् ऋक्प्रमुखानवाप्तुमवहन्मौञ्जीं च **वत्सान्वयः** ॥ ३

तातादेशिकतो यजूंष्यृचमपि श्रीशौनकात् जैमिनेः
साम श्रीकुशिकादथर्वणमसौ मध्यन्दिनात् कण्वतः ।
शुक्लं वेदमनादिमौक्तिकनिकरान् कल्पांश्च गाधास्तथा
सर्वानङ्गवरान**ुमापतिशिवो** लब्ध्वा चकासेतराम् ॥ ४

---

* From the *Kuñcitāṅghristava,* Introduction, pp. 3-6, Sri Nataraja Vidya Sabha Publication No.1, Chidambaram, 1958. Originally found in the Ānandāśramanilaya collection at Chidambaram.

तिल्वारण्यनिवासिभूसुरकुलाकूपारशीतांशुमान्
स्नास्यन् कान्तिविनिर्जितामरवधूं ताताज्ञया होतृजाम्।
गृह्णन् मातुलसंभवांश्च जनयन् पुत्रान् गणेशाग्रतः
पातालाध्वबिले नियम्य भुजगं ह्यस्थापयत् श्रीद्रुमम्॥ ५

सर्वज्ञश्च पुरा **पतञ्जलि**मुनेर्गत्वाऽऽश्रमं तत्र तं
दृष्ट्वा योगपदार्चनौषधविधीनाशीर्भिरव्याहतैः।
लब्ध्वा लोकगुरुः प्रकाशितपराकारप्रवेशादिभिः
कृत्यैस्सर्वनृपान् जनांश्च भुवने स्वाधीनतां प्रानयत्॥ ६

शम्भोर्मन्त्रमखीश्वरादविकलं **श्वेतात् गुरोर्व्यासतः**
सम्बन्धादपि वेदमूर्धसु गतं तत्त्वं परं शाम्भवम्।
लब्ध्वा योऽधिमहीतलं प्रकटयन् शैवाध्वसारं तथा
रेजे श्रीमद**ुमापतिः** शिवसमः त्र्यन्तविद्यागुरुः॥ ७

वाञ्छाकल्पलता-गणेश्वरमदात् **चैदम्बरं** भैरवं
यन्त्रं स्फाटिकलिङ्गमप्यतुलितं श्वेतश्च यस्मिन्गुरौ।
भूत्या मान्त्रिककृत्यनिश्चलघधोद्धारात् तदाकर्षणात्
यन्त्रात् भूपजपुंस्त्वदानविभवात् ख्यातस्स च**ोमापतिः**॥ ८

हस्ते यज्ञहवींषि दातुमसहं यं प्रत्युदेत्यादरात्
पञ्चाशत्समजीवनं वरमदात् शक्रः शिवस्याज्ञया।
यः स्वान्तेवसदुत्तमं प्रतिवचोभङ्ग्या ररक्षाहिराट्
भीतेः श्रीमद**ुमापतिः** गुरुवरो विभ्राजते स्मानिशम्॥ ९

जातु श्रीमद**ुमापतिः** परशिवक्षेत्राटगत्या पुरं
काश्मीरं समुपेत्य योगविभवात् सर्वज्ञपीठं वरम्।
अध्यारुह्य विचक्षणान् विजितवान् सिद्धान्तयुक्त्या च यं
सोऽयं शङ्कर एव सद्गुरुरिहायातीति तत्रास्तुवन्॥ १०

गृध्राद्रेस्तु **चिदम्बरं** प्रतिनिशं त्वागत्य संसत्पतिं
दृष्ट्वा दक्षिणगोपुरं च समया वासं मुदा कुर्वतोः।
गृध्राधीश्वरयोः सुसद्मनि नवीभूते तथोदग्दिशि
द्वारे सप्तमुनिः सभावनविधौ येनैव संयोजितः॥ ११

सूतो माषघटश्च कण्टकतरुः तार्क्ष्योऽपि यद्दीक्षया
मुक्तास्ते ह्यभवन् पुरा ध्वजपटस्त्वारोपितः सूक्तिभिः।
योगात् नागसरोबिलान्तरपथात् गत्वाचलं राजतं
स्तुत्वा तत्र शिवं पुनर्भुवमगात् योगी स **चोमापतिः**॥ १२

अन्ते **श्रीमदुमापतिः** गुरुवरः स्वान्तेवसन्तं पदे
स्वीयेप्यङ्घ्रिजनिं नियोज्य गणराड्यन्त्रौ च लिङ्गं पुनः।
दत्वा तं च जगद्धिताय नितरां सम्बोधयन् पश्यतां
सर्वेषां धुरि चित्सदो नटपतिर्ज्योतिर्मयोऽन्तर्दधे॥ १३

शम्भोरंशस्य लेशो भुवि कलिविभवात् लुप्तमप्यात्मतत्त्वं
प्रोद्धर्तुं ह्याविरासीत् **त्रिनयनशिव** इत्याह्वयः **कालहस्तौ**।
तिल्वारण्ये तथोमापतिरिति मखिराड**प्पयाख्योऽथ कांच्याः**
पर्यन्ते तान् वरिष्ठान् शिवसमयगुरून् शाम्भवान् नौमि नित्यम्॥ १४

उमापतिं नमस्कुर्वे ह्यूर्ध्वस्रोतोविहारिणम्।
ऊर्जितात्माविनाभूतनिष्ठमप्यूर्ध्वरेतसम्॥

SECTION II

TRADITIONAL BIOGRAPHIES ON UMĀPATI
(Sanskrit & Tamil)

UMĀPATI TUDIPPĀḌALGAḶ

UMĀPATIYIṈ VĀḺKKAI VARALĀṞU

ஸ்ரீஉமாபதிசிவ சரித்திர சுருக்கம்*

(அவதாரம்) ஸ்ரீஉமாபதிசிவம் சாலிவாஹந சகம் 1200 ஆண்டுக்குமேல் (ஸ்ரீமுகளு தைமீ சுக்லபக்ஷ திரயோதசி ஸோம வாரம் விருஷப லக்னத்தில்) ஸ்ரீசிதம்பர க்ஷேத்திரத்தில் தில்லை வாழந்தணர்கள் வம்சத்தில் சம்பு தீக்ஷிதர் என்கிற நடராஜ தீக்ஷிதருக்கும் கௌரீ என்னும் அன்னைக்கும் புதல்வனாக உதித்தவர். இவருடைய கோத்திரம் ஸ்ரீவத்ஸ கோத்திரம். வேதம் யஜுர்வேதம். ஸூத்திரம் போதாயனம். இவருடைய மாதாமஹர் கோத்திரம் விச்வாமித்திர கோத்திரம். வேதம் ரிக்வேதம். ஸூத்ரம் ஆச்வலாயனம். பாஷண்டர்களை அடக்கி சைவத்தை நிலை-நாட்டவேண்டி தேவர்களின் வேண்டுகோளால் ஸ்ரீபரமேச்வரனே தனது அம்சத்தால் ஸ்ரீஉமாபதிசிவமாக அவதரித்தார் என்று கூறப்படுகிறது.

இவர் பிறந்த காலத்தில் இவரிடத்தில் ஸ்ரீநடராஜரின் தேஜஸ்ஸு பிரகாசித்ததால் ஸ்ரீநடராஜரே அவதரித்தார் என்று எல்லோரும் மகிழ்ந்தனர். அக்காலத்தில் சுபக்குறிகள் பல உண்டாயின. இவர் பால்யத்தில் செய்த லீலைகள் அளவு கடந்தனவே.

இவர் முறையே நான்கு வேதங்களை கற்கவேண்டி அந்தந்த வேதங்களுக்குரிய முறைப்படி உபநயனமும் செய்விக்கப்-பட்டவர் ஆவர். ஸாமவேதம் கற்கவேண்டி த்ராஹ்யாயன விதிப்படி உபநயனச் சடங்குகள் செய்விக்கப்பட்டபடியால் (छन्दोग:) சந்தோகர் என்று ஒரு சரித்திரம் கூறுகிறது.

இவர் தனது தந்தையிடமும் சௌனகர், ஜைமினி, குசிகர், மத்யந்தினர், கண்வர், வியாஸர் முதலிய மஹரிஷிகளிடமும் வேதம் முதலிய ஸகல கலைகளையும் கற்றவர். ஸ்ரீமந்திரமூர்த்தி தீக்ஷிதர் என்கிற பெரியோரிடம் ஸ்ரீவித்யோபதேசம் பெற்று

---

* From the *Kuñcitāṅghristava,* Introduction, pp. 6-14.

ஸ்ரீசிவகாம ஸுந்தரியின் ஸன்னதியில் ஸ்ரீவித்யாஜபயஜ்ஞத்தை அனுஷ்டித்து அம்பிகையின் அருளையும் அணிமாதி ஸித்தி-களையும் அடைந்தவர்.

இவருக்கு உரிய காலத்தில் இவரது மாதுலரான ஸபேச தீக்ஷிதர் என்பவரின் புதல்வியான பார்வதீ என்னும் கன்னிகையை மணம் செய்வித்து இவரது தந்தை மறைந்தனர்.

பிறகு இவருக்கு ஸ்ரீமூலநாதர் (சிதம்பரயந்திரோத்தாரத்திற்கு வியாக்யானம் செய்தவர்), விருஷபத்துவஜர் என்கிற இரண்டு புதல்வர்களும் ஸுசீலா என்கிற ஒரு கன்னிகையும் பிறந்தார்கள்.

இவர் ஸப்தபாகஸம்ஸ்தை, ஸப்தஹவிஸ்ஸம்ஸ்தை, ஸப்த ஸோமஸம்ஸ்தை முதலிய ஸகல வைதீக வேள்விகளை முறைப்-படி அனுஷ்டித்தவர். ஸ்ரீநடராஜரைத் தனது ஸ்வதந்திர காலங்-களில் பூஜித்தும், ஆருத்திரை முதலிய மஹோத்ஸவங்களிலும், ஸம்புரோக்ஷணம் முதலிய பிரதிஷ்டைகளிலும் ஆசார்யராக இருந்தும் நன்கு கொண்டாடப்பட்டவருமாவர்.

இவர் தனது 26 வயதில் மஹாவிரதம் என்னும் ஓர் பெரிய யாகத்தைச் செய்தார். அவ்வமயம் பிரதான தினத்தில் தேவேந்-திரன் இவர் முன் தோன்றி பிரதானமான ஹவிஸ்ஸை எனது கையில் கொடு என்று கூறினன். அதுகேட்டு இவர் அத்தேவேந்-திரனை நன்கு பூஜித்துப் போற்றி அக்னியில் ஹோமம் செய்யும்படித்தான் விதி உளது என்று அவ்விதியைக் கூறி கையில் கொடுக்க மறுதளித்தார். அதுகேட்டு தேவேந்திரன் மிகவும் ஸந்தோஷித்து அவ்விதம் செய்து உனது வேள்வியைப் பூர்த்தி செய்துகொள்வாயாக. உனது வயது இன்றோடு முடிவு அடைந்த-படியால் ஸ்ரீபரமேச்வராஞ்ஞையால் இவ்விதம் உன்னைப் பரீக்ஷித்தேன். உனக்கு இது முதல் 50 ஆண்டு ஜீவித்திருக்க அருளினேன். பூமியில் துர்மதங்களை அகற்றி வைதீக தர்மங்களை ஸ்தாபித்து ஸநாதனமான சைவ மதத்தை பிரகாசப்படுத்துவாயாக என்று அருளி மறைந்தனன்.

இவர் ஒரு ஸமயம் சுவேதாசாரியரைத் தரிசித்து அவரிடமிருந்து ஒரு ஸ்படிக லிங்கம், ஸ்ரீசிதம்பர மேருயந்திரம், வாஞ்சா கல்பலதாகணபதியையும் பெற்றும் ஸ்ரீ சிதம்பரரஹஸ்ய தத்துவத்தை உணர்ந்தார்.

பிறகு ஒருஸமயம் ஸ்ரீபதஞ்ஜலி முனிவரின் ஆச்ரமத்தை (அனந்தேசுவரன்கோயில்) அடைந்து அங்கு ஸ்ரீபதஞ்ஜலி பகவானைத் தரிசித்து அவரது அனுக்கிரஹத்தால் யோகதத்துவத்தை நன்கு உணர்ந்து அந்த யோகத்தின் வல்லமையால் நாகச்சேரிக்குளத்தில் உள்ள பிலத்துவார வழியாக ஸ்ரீகைலையை அடைந்து அங்கு பரமனை தரிசித்துப் போற்றிப் பரமனது அருளையும் பெற்றார். அங்குள்ள தாழ்வரைகளில் பற்பல சித்தர்களையும் முனிவர்களையும் தரிசித்து வணங்கி அவர்களால் சிதிலமான சைவமதத்தைப் புவியில் நன்குப் பிரகாசப்படுத்தும்படி உணர்த்தப்பட்டார்.

மறைஞ்ஞானஸம்பந்தரிடம் (அப்பய தீக்ஷிதர் மணிவாசகரிடம் உபதேசம் பெற்றதுபோல்) உபதேசம் பெற்று அவரிடமிருந்து ஸகல ஆகமங்களையும் அடைந்து அதிலுள்ள சைவ ஸித்தாந்த ஸாரங்களைத் தென்மொழியிலும் வடமொழியிலும் தெளிவுபெற வெளிப்படுத்தினார்.

பிறகு இவருடைய அன்னை மறைய தனது குமாரர்களிடம் எல்லாப்பொருள்களையும் ஒப்புவித்து தனது மனைவியான பார்வதி அம்மையோடு வானப்ரஸ்தாச்ரமியாய் சுவேதாசார்யர் ஆச்ரமத்தின் (வெள்ளைகுளம்) வடபுறத்தில் ஓர் ஆச்ரமம் வகுத்து அங்கு தனது ஆத்மார்த்த பூஜையை செய்துகொண்டும், அனேக சிஷ்யர்களுக்கு ஸ்ரீசிவதத்துவத்தை உபதேசித்தும் மிகவும் விளங்கினார். சில நாட்களில் இவர் மனைவியாரும் இவரது அனுக்கிரஹத்தால் முக்தி இன்பம் பெற்றவளானாள்.

இவ்விதம் ,இருக்குங்கால் ஒரு நாள் இவர் சிஷ்யனான ப்ராம்மணச் சிறுவன் ஒருவன் ஆசாரியரின் பூஜைக்கு வேண்டி பில்வம் எடுத்துக்கொண்டு வரும் தருணம் அவனுடைய

தேஜஸ்ஸைக்கண்டு பொறாமைகொண்ட ஓர் முனிவர் எதிரில் நின்று தடைசெய்து ''எனது வினாவுக்கு விடை கூறி அப்புறம் கடக்கக்கடவாய். மீறினால் சபிப்பேன்'' என்றார். அதை அச்-சிறுவன் கேட்டு கொஞ்சம் கூட லக்ஷியம் செய்யாமல் தனது ஆசாரியரின் பூஜைக்குத் தவக்கம் ஏற்படாமல் இருக்கவேண்டி ஒன்றும் பேசாமல் நடக்கலானான். அது கண்டு அம்முனிவர் சினங்கொண்டு உனது குருவுக்கு முன்பாகவே உன்னை அரவம் தீண்டி இறக்கக்கடவாய் என்று சபித்தனர். அச்சிறுவன் அதைக்-கேட்டு அஞ்சாமல் பில்வக்கூடையுடன் ஆசார்யர் ஆச்ரமத்தை அடைந்து குருவை வணங்கி வழியில் நிகழ்ந்த விருத்தாந்தத்தைத் தெரிவித்தான். அதுகேட்டு சுவாமிகள் புன்சிரிப்புடன் உன்னை அரவந்தீண்டி இறக்கக்கடவது என்றும் மறுமொழி கூறினர். அத்தருணமே பேருருக்கொண்ட கருத்த ஓர் அரவம் ஆசாரியருக்கு முன்பாகவே அம்முனிவரின் சாபப்படி அச்சிறுவனைத் தீண்டிற்று. உடன் ஆசாரியர் வாக்குப்படியே உயிர் நீங்கிற்று. இது கண்டு அங்குள்ள மற்ற சீடர்கள் களித்தனர். பிறகு இறந்த அவ்வரவு உடல் நீங்கி ஓர் சந்நியாசி வடிவந்தாங்கிற்று. அச்சந்நியாசியார் ஆச்சாரியரை அணுகித் தண்டம் ஸமர்ப்பித்து விண்ணப்பிக்கலானார்: ''சுவாமி, நான் பூர்வ ஜன்மத்தில் சந்நியாசி-யாக இருந்தும் சைவமதத்தை நிந்தித்தேன். அவ்வாறே சாஸ்திரங்-களையும் தொகுத்தேன். இக்காரணம் பற்றிக் கோபம்கொண்ட சுவேதாசாரியரின் சாபத்தால் இவ்வரவவடிவம் பெற்றேன். இப்பொழுது தங்கள் சீடனைத் தீண்டினதால் அவ்வரவவடிவம் நீங்கப்பெற்றேன். இனி எனக்கு நற்கதி கிடைக்க உபாயம் செய்தருளல் வேண்டும்'' என்று பலமுறை வணங்கிப் போற்றி-னார். அதுகேட்டுச் சுவாமிகள் சந்தோஷத்துடன் தனது ஆசார்ய பெருமானாச்ரமத்தின் முன்புறத்திலுள்ள சுவேத தடாகத்தில் ஸ்நாநம் செய்வித்து ஸ்ரீபஞ்சாக்ஷரத்தை உபதேசித்து ''இனி சிவத்தியானபரனாய் இருக்கக்கடவாய்'' என்று அனுக்கிரஹித்தனர். அம்முனிவரும் அதுமுதல் ஆசார்யரின் ஆணைப்படி ஸ்ரீபஞ்சா-க்ஷரத்தை ஜபித்து சிவத்தியானபரராய் இருந்து நற்கதியை அடைந்தார்.

பிறகு மற்றொரு ஸமயம் ஸ்ரீநடராஜருக்கு கும்பாபிஷேகம் நிகழ்ந்தது. அத்தருணம் ஓர் மந்திரவாதி காரப்பெருமாள் என்னும் சாஸ்தாவின் ஆலயத்தின் பின்புறமுள்ள குளத்தில் கழுத்தளவு நீரில் நின்று யாகசாலையிலுள்ள பிரதான கடத்தை எடுக்க முடியாமல் ஸ்தம்பனம் செய்து ஜபித்துக்கொண்டு இருந்தான். அதனால் பிறகு குறித்த காலத்தில் பலர் முயன்றும் அக்கடம் எடுக்க இயலாதது கண்டு இவர் அதன் ஸமீபத்தை அணுகி விபூதியைத்தூவி 'அம்பிகே' என்று கையை ஏந்தினார். உடன் அக்குடம் தானாகவே இவரது கையை அடைந்தது. பிறகு அக்கும்பாபிஷேகமும் ஒரு விக்னமன்றி நிறைவேறிற்று. பின் இரண்டு இளநீர் மூலம் அம்மந்திரவாதியைத் தனது அருகில் வரவழைத்து அவனது மந்திர ஸித்தியையும் அபஹரித்தார்.

அக்கும்பாபிஷேகத்தை நடாத்திய ஓர் அரசனின் மனதிலுள்ள ஸந்தேகத்தை அகற்ற அவனது அலியான குமாரனை அழைத்து ஆசனத்திலமர்த்தி ஓர் கும்பத்தில் அவனது ஜீவகலை தவிர மற்ற கலைகளை ஆகர்ஷித்து யோஜனம் செய்தார். அக்குமாரனும் கீழே சாய்ந்து அசைவற்றவனானான். அதுகண்டு பயந்து அவ்-வரசன் இவரை அடிபணிந்து குமாரனை எழுப்பித்தர வேண்டி போற்றினான். மறுபடி இம்முனிவர் முன்போல் அக்கும்பத்தி-லிருந்து அக்கலைகளை அக்குமாரனிடம் அடைவித்தார். அவனும் அலித்தன்மை நீங்கி தூங்கி விழித்தவன்போல் எழுந்-தனன். இவ்விதம் நிகழ்ந்ததைக்கண்டு களித்த அரசன் உள்பட்ட எல்லோரும் இவரை நம்போன்ற மனிதனாகக் கருதுதல் கூடாது. இவர் ஸாக்ஷாத் சிவமே ஆவர் என்று கூறி மகிழ்ந்தனர். அது முதற்கொண்டு இவர் உமாபதிசிவமென்று கூறப்பெற்றார்.

மேற்கு கோபுரம் ஸ்ரீகல்பகவிநாயகராலயத்தின் முன்புறத்தி-லுள்ள பாதாளலோக பிலத்வாரவாசலை அண்டி இருந்த ஐந்தலை நாகத்தை அடக்கி அங்கு ஒரு பில்வ மரத்தையும் ஸ்தாபித்தார். அம்மரம் இன்றும் விளங்கா நிற்கின்றது. அம்மரத்தைப்போல் வேறு எங்கும் காண்பதரிதே.

திருக்கழுக்குன்றத்திலிருந்து ப்ரதிதினமும் இரவில் ஸ்ரீ நடராஜரை தரிசிக்க வருகிற இரு கழுகுகளின் நிலைய மண்டபம் இரண்டையும் புதுப்பித்தார். அம்மண்டபம் தெற்கு கோபுரத்திற்கு முன்புறம் உளது.

வடக்கு கோபுரத்தில் துஷ்டர்களை அடக்கவேண்டி ஜடாதரர் என்னும் ஓர் தேவதையையும் ஸ்தாபித்தார்.

பரமன் தன்னை கௌரவித்துக் கைச்சீட்டு அனுப்பின காரணம் பற்றிப் பெற்றான்சாம்பானென்னும் புலையனுக்கும், சோழமன்னனின் ஸந்தேகத்தை அகற்றவேண்டி முள்ளிச் செடிக்கும், குடஉளுந்து முனிவருக்கும், ஒரு கருடனுக்கும் சிவஸாயுஜ்ய பேரின்பத்தை அடையும்படி செய்தவருமாவர்.

ஒருஸமயம் ஸ்ரீநடராஜர் ஆனிமாஸ மஹோத்ஸவத்தில் முயன்றும் ஏறாமலிருந்த கொடியை நான்கு பாசுரத்தால் தானாகவே ஏறும்படி செய்தும் மூன்று தடவை பூமண்டலத்தை பிரதக்ஷிணம் பண்ணியும் அதில் ஒரு தடவை காச்மீரத்தில் வான் வழியாக ஸர்வஞ்ஞபீடமமர்ந்து எல்லாவித்தைகளிலும் தனது வல்லமையைக் காட்டிச் சைவ மதத்தை நிலைநாட்டி இரண்டாவது சங்கரரோவென்று அங்குள்ள அனைவரும் அதிசயித்துப் போற்ற ஒருவராலும் அடையமுடியாத பிருதுகளையும் கீர்த்தியையும் அடைந்தார்.

ஸ்ரீதுர்வாஸ முனிவரால் ஸ்தாபிக்கப்பட்ட அகோர சிவாசாரிய மடத்தில் மூன்றாவது பட்டம் சுவாமிகள் இவருடைய சிஷ்யரென்றும் அவரிடம் **தீக்ஷாநிர்ணயம்** முதலிய கிரந்தங்களைக் கொடுத்தாரென்றும் சொல்லப்படுகிறது.

நான்காம் வருணத்தார்களை அனுக்ரஹிக்க வேண்டித் தனது பீடத்தில் ஸ்வாமிநாத தேசிகர் என்பவரை ஸ்தாபித்து பட்டாபிஷேகம் செய்து தனது ஆத்மார்த்த பூஜையை அளித்தும் உலகத்துக்குச் செய்யவேண்டிய கடமையைப் போதித்தும் அருளினர்.

இவ்வாறு 76 ஆண்டு அனேக சிஷ்யர்களுக்கு உபதேசம் செய்துகொண்டும் அக்காலத்திலுள்ள அனேக துர்மதங்களை வென்றும் வைதீக சைவ தர்மத்தை நன்கு விளக்கியும் ஆங்காங்கு ஜீர்ணித்துள்ள சிவாலயங்களை ஜீர்ணோத்தாரம் செய்து நித்திய பூசை முதலிய வழிபாடுகளை முறைப்படி செய்வித்தும் பல மன்னர்களால் போற்றப்பட்டும் லோகாசாரியராக விளங்கினார்.

ஒரு ஸமயம் தனது இறுதியை அறிந்து எல்லா மாணாக்கர்களையும் மன்னர்களையும் வரவழைத்து ''ஸ்ரீ பரமேச்வராஞ்ஞைபடி என்னால் செய்யவேண்டியது யாவும் நிறைவேறிற்று. இனி நீங்கள் ஸ்ரீபரமேச்வரனை எக்காலமும் மறவாமல் வழிபட்டுக் கொண்டு இருக்கக் கடவீர்கள்'' என்று அனுக்ரஹித்து வருகிற நாளது சித்திரை மாத ஹஸ்த நக்ஷத்திர தினத்தில் ஸ்ரீநடராஜ மூர்த்தியை அடையப் போகிறேன் என்று கூறி அவர்களை நன்கு ஆசீர்வதித்தனர்.

பிறகு சித்திரை மாத ஹஸ்த நக்ஷத்திர தினத்தில் எல்லாச் சீடர்களும் மன்னர்களும் மற்றுமுள்ளவர்களும் போற்றி நிற்க தான் யோக ஸமாதியில் அமர்ந்து திருச்சிற்றம்பலமென்னும் பொற்சிற்சபையில் விளங்காநிற்கின்ற ஸ்ரீநடராஜமூர்த்தியின் ஜ்யோதிஸ்ஸில் ஐக்கிய நிலையை அடைந்தார். அவ்வமயம் இவரது உருவதேஜஸ் ஸ்ரீநடராஜரோடு கலந்துகொண்டதாக அங்குள்ள எல்லோருக்கும் தோன்றினது. வானிலிருந்து புஷ்பவர்ஷங்கள் நிகழ்ந்தன. எல்லோரும் பரமனைப் போற்றி மகிழ்ந்தனர்.

இன்னும் இவரது சரித்திரம் பலவாறாக ஆன்றோர்களால் கூறப்படுகிறது. அவைகளை விரிக்கிற் பெருகுமென அஞ்ஜிவிடுத்தனம்.

இம்முனிவரை ஸ்ரீபரமேச்வரனின் அம்சம் என்றும் வித்யேச்வர்களில் ஒருவராகிய ஸ்ரீகண்டரின் அவதார மென்றும் வர்ணித்திருக்கிறார்கள்.

இம்மஹான் ஸ்ரீ காளஹஸ்தி க்ஷேத்திரத்தில் ஸ்ரீகண்ணப்ப நாயனாரின் பக்தியின் மஹிமையை நேரில்கண்டு களித்த

ஸ்ரீசிவகோசரரின் புதல்வரான திருலோசனனாகவும், கலி 4700ல் அவதரித்தவரும், உலகிலுள்ள துர்மதங்களை அகற்றினவரும் உபாஸனையால் ஸாக்ஷாத்கரித்த ஸ்ரீமணிவாசகரிடம் உபதேசம் பெற்றவரும், 104 கிரந்தங்களை இயற்றியவரும், மீமாம்ஸாமூர்-தன்னியரும், அத்வைதாசாரியரும், சிவாதிக்கியவாதியுமான ஸ்ரீ அப்பய தீக்ஷிதராகவும் அவதரித்தவராவர்.

दीक्षितोऽपि भवेत्कश्चिन्मदंशो भूसुरोऽम्बिके।
भासुराचारनिरतः शैवः छन्दोगवंशजः।
शैवशास्त्रं तदा भूमौ लुप्तं विस्तारयिष्यति॥

தீக்ஷிதோऽபி பவேத்கச்சித் மதம்சோ பூஸுரோம்பிகே।
பாஸுராசாரநிரத: சைவச்சந்தோகவம்சஜ:।
சைவசாஸ்த்ரம் ததா பூமௌ லுப்தம் விஸ்தாரயிஷ்யதி।

(இ-ள்) ஓ அம்பிகே, புவியில் ஸாமவேதிகள் குலத்தில் உதித்தவரும், எனது அம்சம் தாங்கினவரும், தீக்ஷிதரும், சிவ பக்தி நிறைந்தவருமான ஓர் பிராம்மணர் அவதரிப்பார். அக்காலம் அவர் பூமியில் மறைந்துபோன சைவ சாஸ்திரங்களைப் பிரகாசப்படுத்துவார்.

कलौ छन्दोगोऽपि श्रुतिशिखरतात्पर्यवचनैः
मम ग्रन्थोद्बन्धैर्जयति मदवादिद्विपहरिः।
भिनत्त्येवं दीक्षाक्षपित-सुखवृत्तिश्शिवपदे
शिवे दभ्रस्थाने भवति च ततोऽन्ते मम गणः॥

கலௌ சந்தோகோऽபி சுருதி - சிகரதாத்பர்யவசநை:
மம க்ரந்தோத்பந்தை: ஜயதி மதவாதித்விபஹரி:।
பிநத்யேவம் தீக்ஷாக்ஷபித - ஸுகவ்ருத்தி: சிவபதே
சிவே தப்ரஸ்தாநே பவதி ச ததோऽந்தே மம கண:।

(இ-ள்) கலியில் சிவமாயும் சிவஸ்தானமாயுமுள்ள சிதம்பரத்தில் (எனது கணத்தில் ஒருவர்) ஸாமவேதி குலத்தில் அவதரித்து எனது கிரந்தங்களான வேதாந்த தாத்பர்ய வசனங்-களால் துர்மதங்களாகிற யானைகளுக்கு சிங்கம்போல் இருந்து பேதித்தும் தீக்ஷை முதலியவைகளால் பாபங்களை அகற்றி நல்ல

விருத்தியோடு விளங்குவார். கடையில் நமது கணநாதராகவும் ஆகுவார் என்றும் **சிவரஹஸ்யம்,** நவமாம்சம், அஷ்டமாத்யாயத்திலும் மற்றவை கூறுதலும் இம்மஹானை குறித்ததே.

சிற்றம்பலமன்னும் சின்மயராந் தில்லை நகர்க்
கொற்றங்குடி முதலைக்கூறு நாளெந்நாளோ.
குறைவிலருண் ஞானமுதல் கொற்றங்குடியடிக-
ணரைமலர்த்தாட்கன்பு பெற்றுநாமிருப்ப தெந்நாளோ.

என்று தாயுமான ஸ்வாமிகளும் போற்றுகிறார் (**குருமரபின் விளக்கம்** 6,7).

இம்மஹானைச் சைவஸித்தாந்த ஸந்தானாசார்யர்களில் ஒருவராகச் சைவ உலகம் போற்றுகிறது உலகறிந்ததே.

இவருடைய ஆச்ரமம் சிதம்பரம் ரயில்வேஸ்டேஷன் கீழ்புறத்தில் விளங்கா நிற்கின்றது. அங்குள்ள இவரது உருவ விக்கிரஹம் பார்க்க மிகவும் ஆனந்தத்தை அளிக்கிறது. பின்னும் அவ்வாச்ரமம் விசேஷ கௌரவத்தை அடையத் திருவருளைப் பிரார்த்திக்கின்றனம்.

இவருடைய சிஷ்ய ஸந்தானம் திருவாவடுதுரை ஆதீனமாகும். அவ்விடம் இவருடைய ஆத்மார்த்த பூஜையும் நித்தியம் பூஜிக்கப்படுகிறது.

இவ்விதம் பெருமைவாய்ந்த ஸ்ரீஉமாபதிசிவத்தால் இயற்றப்பட்ட வடமொழி தென்மொழி நூல்கள் பல உள. அவைகளில் இத்துதியும் ஒன்று ஆகும். இதிலுள்ள இரண்டு சுலோகங்கள் மட்டும். . . . ஸ்ரீநடராஜரின் ஸபையின் முன்புறத்தில் வரையப்பட்டுள்ளன.

உமாபதி சிவாசாரியர் சருக்கம் *

தில்லையினடிக்குஞ் சிவனொடுசேர்த்துச் செப்புமூ வாயிரர் தம்மி
லெல்லையிலுணர்ச்சி பெறுமுமாபதிப்பே ரேய்ந்தவனொருவன் வந்துதித்துத்
தொல்லைவல்வினையைத் தொலைத்துமெய்யருட்சீர் தோயுமாறேமிகக்கருதி
வல்லையாண்டருளத் தக்கசற்குரவன் வரவுபார்த்திருந்தனன் மன்னோ (1)

பக்குவமுதிர்ந்துங் கருமநூற்சடங்காற் பரதவிப் பாரொடுபழகித்
திக்குமுற்றுணரு மாலயபூசைத் திருப்பணி யாதியுஞ்செய்து
விக்கு தொண்டையன்போற் பிறருடனிந்த விதமெடுத் துரைக்குமாறின்றி
யக்கும்வெண்ணீறு மிகைபடப்புனைந்தே யைந்தெழுத் துருச்செபித்தயர்ந்தான். (2)

அந்தநாளதிவன் னாச்சிரமத்தோ னாமறை ஞானசம்பந்தன்
செந்தழன்மேனிச் சிவபிரானுரையாற் றில்லையம் பதியினிற்சென்று
பைந்தமிழ்க்கவிக்காத் தேர்நடைதருசீர் பதிதரு தெருவினோர்பாங்க
ரிந்தமாதவவே தியன்வருமாறே யெண்ணுபு படுத்திருந்தனனே. (3)

அன்றுதான்பூசை செயுமுறைவரலா லவனொரு சிவிகையிலருகு
துன்றுதீவெட்டி முதலியசிறப்புத் துலங்கவந் தனன்பகற்குருடா
மொன்றுபட்டமரத் தேகுகின்றதெனா வுரைத்தனன் முனியவனுருவ
மன்றுளாடினராத் தோற்றலினிறங்கி மலரடி மிசைவிழுந்தனனே[1]. (4)

---

* From **Pulavar purāṇam** by Vaṇṇaccarabam Srilasri Dandapani Swamigal, Madras, 1931. Chapter 44.

1. சிவபிரானுத்தரவு பெற்றுச் சிதம்பரத் திருவீதியில் உமாபதியார் வரவு நோக்கி யோகநித்திரைபுரிந்து விளங்கிய மறைஞான சம்பந்த நாயனாரென்பவர் தாம் குறித்தபடி அவர் ஆலய பூஜை நிமித்தம் அலங்காரச் சிவிகையில், தீ வெட்டி முதலிய சிறப்புகளுடன் அங்கு வரக்கண்டு, ஞான நோக்கம் புரிந்து அவரது சூக்கும அறிவில் தொடர்பு செய்து "பகற்குருடு பட்டமரத்திற் போகின்றது" என்றோதினர். அவ்வொலி புறவெளியிலுள்ள வேதவொலி, வாத்தியவொலி, முதலியவற்றைக் கடந்து உமாபதியாரது செவியிற் புகுந்து, தேகவாசனை, லோக வாசனை, சாத்திரவாசனை, முதலியவற்றை நீக்கித் தூய்மை செய்ததால் இவர் திரும்பிப்பார்க்கையில் மறைஞான சம்பந்தரது வடிவம் கனகஸபையினிடத்துப் பஞ்சகிருத்தியத் திருநடம் புரியும் ஸ்ரீ நடராஜப் பெருமானது திவ்விய திருவுருவாய் விளங்கக்

தொழுமிவனெழுமுன் னவனெழுந்தோடத் தொடர்ந்திவ னோடினன்சூழக்
குழுமினர்பலரீ தென்னெனவியந்தார் கூடவுஞ் சிற்சிலர்போனார்
பழுதிலம்முனிவன் சென்றுசெங்குந்தர் பாவடிக் கூழ்கையேற்றருந்த
நழுவுதன்முழங்கை வழியிவனயின்றா னாட்டினர் நக்கிகழ்ந்தனரே. (5)

அற்றைநாட்பூசை யடுத்தநாண்முறையோ னாற்றின னவ்விருவோரு
மொற்றைபட்டொழுகிச் சிறிதுநாளையிற்றம் முளத்தது பூதியிலொத்தார்
மற்றையசரித மொன்றுமக்குரவன் மாட்சியென் றியான்வினவில்லேன்
பொற்றைவிற்பரமன் றிருவடிமலரிற் புகுந்ததற் கையமின்றம்மா. (6)

குரவனீங்கியபி னவனருட்டிறந்தோய் கோளரி யேறனான்கோதி
லிரவலனாகி முறைப்படி தவமே யிழைத்தன னவனுடலினத்தார்
பரவுபண்பினற்கித் தீங்கியன்றிடலென் பாவமென் றிரங்கினர்பணங்காட்
டரவுலாஞ்சடையார் விடைக்கொடித்திருநா ளானிமா தத்தணுகியதே. (7)

அத்திருநாளின் முன்னைநாளிரவே யாங்குளார் பலர்கனவினும்போய்ச்
சத்திமுன்னடிப்பா ரியாந்திருக்கோயி றனிலிலே முமாபதிமுனிவ
னத்தியபூசைப் பெட்டகக்கோயி னண்ணுபு வசித்துளேமென்றா
ரித்திறமுணர்ந்துங் கொடியுயர்த்தினராங் கேறிடா திற்றுவீழ்ந்ததுவே. (8)

அவ்வதிசயங்கண் டரசனும்பிறரு மம்முனி யிருந்துழியடைந்து
செவ்வனக்கமலத் திருவடிபணிந்து சிவன்செய லனைத்தையுஞ்செப்பிற்
றவ்வருங்கருணை யுறுமவனுடன்போய்த் தன்மனைப்பெட்டகந்தருவித்
தெவ்வமில்கோயிற் கொடிமரத்தருகி லியாவருங்காணுறத்திறந்தான். (9)

கண்டமையின், கீழ்க்குதித்து அவரது செந்தாமரை மலரையொத்த திருவடிகளில் அடியற்ற மரம்போல் விழுந்து பணிந்தனர் என்பதாம்.

குருவடிவைத் தெய்வவடிவாக உள்ளிலும் வெளியிலும், காண்பதே தவம் நிறைந்த பெரியோர்க்கு அமையும் ஞானபக்குவ நிலையாதலின் அது அவனருளாற் கிடைத்தற்பாற்று என்பதும், அதனையடைந்தோர்க்கே பரமுத்தி சித்தியாகுமென்பதும், மேலோர் நூல்களின் முடிபாதலின், அவ்வாற்றிற்கு இவர் இலக்கியமாயினர் என்க.

முன்றனோர்குருப்பின் போனநாட்டரித்த முகுளநாண் மலர்த்தி ரண்முழுது
மன்றணிந்தனபோன் றிருக்கைகண்டியாரு மதிவியப்பொடு மிகமதித்தார்
குன்றவிற்பெருமான் கொடியுமேறியது குலத்தினர் களுமிகமகிழ்ந்தார்
மன்றலந்தடந்தோண் மன்னவன்பலகால் வணங்கியோர் வேண்டுகோள்
வகுப்பான். (10)

உன்றவத்தருமை யுலகமுற்றுணர்ந்த தென்னினு மொருமடாலயத்துற்
றின்றமிழ்ப்புலவோர் களுந்தவத்தினரு மிறைஞ்சுமா றியற்றிட வேண்டு
மென்றனனிசைவு கண்டுதான்கொற்றங் குடியிலஃ தியற்றியீந் திட்டான்
மன்றகத்திறைவ ரருடரும்பயனை மாற்றிட யாவரேவல்லார். (11)

அம்மடத்தவன்போய்ப் புகுந்தினத்தரிதன் னரிவையுமயன்மனை யாளுந்
தம்மலர்ப்பீட மாமெனவிழைந்து தாங்களு முடன்புகந்தனராற்
செம்மணிக்கவினார் தானைமாதவரும் புலவரா தியர்களுஞ் செறிந்தார்
கைம்மணிப்புலமைக் காழியூர்ப்புதல்வன் கழகமே யெனக்கவின்றதுவே. (12)

கோயின்மான்மியமுஞ் சேக்கிழார்புகழுங் குறிதிரு முறைபெறுங்கதையும்
பாயிரத்தெழில்சேர் புராணமாச்செய்து பழுதில்சித்தாந்த நூல் பதினான்
காயினவவற்றுட் சிவப்பிரகாச மருட்பயன்முத லிருநான்கு[2]
வாயினாலியற்றிச் சைவதேகிகனென் மாட்சியும் பெற்றனன்மன்னோ (13)

குலையொடுபழுத்தாங் கனைவரும்வேள்விக் கொலைசெயுங் குலத்தினிற்பிறந்தோ
னிலையிடுவார்க்குங் கதியை நல்கிடுந்தன் னிணையடிப்பெருமைதேர்ந்தெனைத்தும்
புலையுறாச்சைவா சிரியனாகிடவும் புரிந்தருள் புராணபுங்கவன்றான்
மலையணுவாக வணுமலையாகச் செய்யவும் வல்லவன்றானே[3]. (14)

---

2. இருநான்கு — சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது. உண்மை நெறிவிளக்கம், சங்கற்ப நிராகரணம், என்னும் சித்தாந்த சாத்திரங்கள் எட்டுமாம்.

3. தில்லை மூவாயிரவேதியரென்பார், சைவசமயாசாரியராகிய, தமிழ்விரகர் திருக்கடைக்காப்பிற் புகழப் பெற்றும், நம்பியாரூரருக்குத் தியாகேசர் திருத்தொண்டத் தொகைப்பதிக முதலாக அடியெடுத்துக் கொடுக்கப்பெற்றும், நாரையூர் நம்பிகளால் அந்தாதியிலும், அருண்மொழித் தேவரால், பனிரண்டாந் திருமுறையிலும்

மைந்தருந்தேவர் தாமுமிக்குவப்ப வயங்குகொற் றங்குடிமடத்தி
லந்தமாமுனிவன் வாழுநாள்கனக வம்பலத் தாடல்கூரமலன்
முந்தவீடடைந்தோ ரொருவருஞ்செய்யா முறையவன் றனைக்கொடுமுடிப்பான்
கந்தனைப்பயந்த திருவுளந்தன்னிற் கருணையாற் கருதினானன்றே. (15)

அத்தினமெந்த வூரினிலிருந்தோ வநந்தமுற் பிறப்பினிலரன்பாற்
பத்திசெய்ததன்பின் பிறந்தவனாமோர் பஞ்சமன் பன்னிதன்னோடு
முத்திதானடையு நிமித்தமோர் மனதா முதிர்புகழ்த்தில்லையிற்சேர்ந்தா
னத்தியமனைவி யபக்குவியானா னாயகன் பின்வரா ளம்மா. (16)

அவன்பெத்தான்சாம்பா னெனச்சொல்வாரவள்பே ரறைபவர்க் காண்கிலனன்னோன்
சிவன்பதங்கருது மாறவனுருவ சிந்தனை யேயவள்செய்வா
ளுவந்தசில்பணியா லுடல்புரந்ததற்பி னும்பரு முனிவருமுலவுந்
தவந்தழைத் திடுமவ் வூர்த்தெருவிளக்கித் தகைமலிசிகரிகை தொழுதார். (17)

அன்னணஞ்சிலநா ளியற்றலுமரிவாட் டாயனார்கழுத்தரிந்திடுமட்
டின்னல்செய்தவர்தந் திருவுளமிரங்கி யிரவெலா மவன்மனக்கனவிற்
பொன்னதாற்சமைந்த வம்பலமுதலாம் பொற்பெலாம் பொலிவுறக்காட்டிப்
பின்னரோர்தினத்திற் பிறைச்சடைமுதலா முறுப்பெலாம் பிறங்கநேர்வந்தார். (18)

துதிக்கப்பெற்றும், உள்ளவரென்பது பொதுவில் உண்மையேனும், சிறப்பில் நோக்குமிடத்து, கருமம், பக்தி, ஞானம், என்னும் மூன்றினுள் குறைந்த தூல விவகாரமான கருமத்தைப் பிரதானமாகக் கொண்டு, பக்தி ஞானங்களுக்கு மாறுபட்ட உயிர்வதை, நிணஅவி ஆனவற்றை வினைத்தொடர்புக்கேற்ப ஒரு சாரார் கொள்ளினும், மற்றொரு சாரார் நீங்கினரென்பதின்றி அனைவரும் ஒருங்கு கைக்கொண்டு ஒழுகுவோராதலில் ஜீவகருணை என்னும் முதற்படியைச் சேதித்தவரெனக் கொண்டு அக்குலத்திற் பிறந்த உமாபதியார் எவ்வகையிலும் எத்துணையும் கொலை புலையையுடன்படாத சிவாகமசாரமான சைவசமய சந்தான குரவராய் அமையும்படி ஸ்ரீ ஐந்தொழிற் கூத்தனருள்புரிந்தனனென்பதை ஆசிரியர் தனது கூற்றாக விளக்கிச் சைவ சித்தாந்த விசேடத்தையும் கொலையினிழிவையும் துலக்கினரென்பதன்றி வேதியர் நிந்தை விளம்பியதென்று வாதியராகி வருந்த வொண்ணாதே.

அங்கியில்விழுந்தார் கழுத்தறுத்திட்டா ரசலமேற் போய்நிலத்துருண்டார்
பொங்கியகடனீ ரிடைபுகுந்திறந்தார் பொறியடக் குபுத வஞ்செய்தார்
கங்கிளைதுறந்தார் தமிழ்த்துதிசெய்தார் தாங்களுங் காண்பரிதாய
செங்கிரியனையாற் றில்லையிற்பெத்தான் சேவைசெய் திடலருமையதே. (19)

காண்டலுமுருகிக் கண்கணீர்சொரியக் கரங்குவித் திறைஞ்சியேவிழுந்தா
னீண்டவனறியாத் துணைப்பதத்தொருவ னின்விருப் பியாதெனவினவ
வீண்டயன்படையாப் பெருங்கதியன்றி யாதும்வேட் டிலனெனவிசைத்தா
னாண்டஙனிரக்குந் தகைமையோரான்மா வடைகுவதரி தரிதரிதே. (20)

தலைகளையுடலைக் கனலிடையெரித்துந் தவளமால்விடைமிசைதகைசான்
மலைமகண்முருகோ னுடனுறச்சகலவானவரிடையரற்கண்டு
நிலைபெறுபயன்வேண்டாதழிந்திட்ட வுயிர்களு நிலத்திருந்தனவாற்
புலையரிற்பிறந்த வுயிரிதுகேட்ட புதுமையென் னெனப்புகல்வேனே. (21)

தேவர்தானவர்மா முனிவரர் மனிதர் திரள்களிற் றவஞ்செய் தோர்க்கெல்லாஞ்
சேவதன்முதுகிற் பலர்தனைச்சூழச் சேணிடை திகழ்தருமீச
னாவலந்தீவின் றில்லையிற்பெத்தா னனவினிற் றனிவருமாட்சி
யாவரேயறிவா ரவன்செய்மாதவத்தை யென்னென வியந்துரைப்பதுவே. (22)

அவ்விதவரங்கேட்டலுமிகமகிழ்வுற் றரனிடக் கையினருக்கோலை
செவ்விதிற்பிடித்து வலக்கையினெழுத்தா ணியையதிற்சேர்த்துமெய்யடியார்க்
கெவ்விதத்தினுமிக் கெளியவன்சிற்றம் பலவன்கொற் றங்குடியாற்கு
வெளவியேயெழுது நீட்டிதென்னென்னின் மண்மிசை வருபெத்தான்சாம்பான். (23)

தனக்குநீபேத மறும்படிதீட்சை செய்துமுத் தியிற்றனிசேர்க்கை
யெனக்குநல்லுவகை தருமுறையென்றோர் வெண்கவி[4] யெழுதியன்னவற்கீந்
துனக்குவீடவனே தருவனங்கேகென் றுரைத்துருக் கரந்தனனவன்போ
யினக்குழாம்வருந்தி யழைப்பினும்போகா தியன்மனை யொடுபணி செய்தான். (24)

---

4. அடியார்க் கெளியவன்சிற் றம்பலவன் கொற்றங்
குடியாற் கெழுதியநீட்டு—படிமீதிற்
பெத்தான்சாம் பான்றனக்குப் பேதமறத் தீக்கைசெய்து
முத்திகொடுக்க முறை.

என்பணிசெய்தா ரென்னினாடோறு மிந்தனக் கட்டிரண்டெடுத்துப்
பொன்பரிந்தளிப்பார்க் கொன்றுவிற்றுதர போசனஞ் செய்துமற்றொன்றை
மின்படுஞ்சடையா னடியர்வாழ்மடத்தின் மெல்லெனப் பிற்புறத்திட்டா
ரன்பராயாங்குற் றவரளிதயெடுத்தே யடுவன முழுதுமாற்றினரால். (25)

ஒருதலைச்சுமையாம் விறகதன்விலையா லுண்பன முழுதுதவினனும்
பெருமடத்தடுவ யாவுமற்றொன்றாற் பிழையற நடக்கைகண்டவனு
மிருவர்[5]கைக்காசொவ் வொன்றுபெற்றெண்ணா யிருமற்றவர்க்கிரட்டியருந்
திருவொடுபொலியச் செய்தருள்சிவனாஞ் செட்டியென்றுணர்பவர்சிலரே. (26)

மதுரையூர்மறுகில் விறகொடுபோயவ் வருத்தமுற் றுணர்தரும் வள்ள
லதுசகியாராய்த் தமதுகைத்திருச்சீட் டருமைகுன் றுபுகும்மாடதன்கிழ்ச்
சிதறும்வேர்வையினாற் றினநனைந்துலருஞ் சீர்த்தியுங் கருதுபு பேராற்
றெதுவுமோர்நிமித்த மின்றியே வெள்ள மிருகரை பிறழல் செய்தனரே. (27)

அந்தநாளினிலவ் விருவருமுணவே யயின்றிலர் மடத்தமுதடுவா
ரிந்தனமிலதாற் பொழுதுபோக்கினர்வே றியாவனெங் கோபுகுந்திரந்து
வந்தபின்பூசை நடந்ததாற் றினமும் வரும்விதமி யாதெனவினவி
லெந்தஞாயத்தோ வீங்கொரு பெருங்கட்டிருக்குமின்றின்றெனப்புகன்றார். (28)

அத்திறங்கருதி நாளையங்கதுவீ ழமையமா ரெனவினாவுதிரென்
றுத்திசொற்றிருந்த வுமாபதிமுனிவ னுளத்தரன் சிலகுறிப்புணர்த்த
நத்திநெஞ்சழிந்தா னங்ஙனநேர்கா னல்லவர் வியப்புறநழுவாப்
பத்திஞானத்தோ ரின்புறவிரித்துப் படிப்படி யுரைத்தனன்சாம்பான். (29)

அவ்வுரைபெற்றார் நிற்கவென்றவன்பா லறைந்துபோ யருண்முனிக் குரைத்தா
ரிவ்வுழிக்கொணர்மி னெனக்குலமுறைமுற்றிகந்தழைத் தனனவனேகிச்
செவ்வுருச்சிவனே யிவனெனக்கருதித் தெண்டனிட் டளித்தனன்சீட்டை
யெவ்வுலகத்தியார் பெற்றனரிப்பே றெனக்களித் திருகரத்தேந்தி. (30)

---

5. இருவர் - திருநாவுக்கரசுநாயனாரும், திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரும்.

கவுரிதன்வளைக்கை பற்றியதிருக்கைக் கவினெழுத் துணர்ந்துகண்சாத்தி
மவுனயோகியரும் பெறலரும்பேறு வழங்குவான் றன்னெதிர்வைத்துத்
தவுதலிலுணர்ச்சி பெற்றவர்சிலருந் தன்னரு கிருந்துபார்த் துவக்க
நவுமுதலெழுத்தோ ரைந்துளானருளை நாடியன் னவன்றலை தொட்டான் (31)

தொடுதலுமவன்றன் னுடனொடிப்பொழுதிற் சோதியாய் வெளியினிற்கலந்த
தடுதொழிற்கூற்றை யடர்கழற்பெருமா னருட்டிற மாரறிகிற்பார்
நடுநடுங்கினரா யங்குளார்பலரு நன்கவன் பெருமையோர்ந்தமைந்தார்
விடுபடும்வினையாற் கக்குலத்துடலம் வேதிய னமைத்ததோர்வியனே. (32)

அன்றிலின்பெடொத் தவன்மனைவெகுவா யலமரற் றெரிந்துசிற் சிலர் போய்
நின்றிருக்கணவன் முத்திபெற்றுய்ந்தா னீயுமேன் றனசெய் தீண்டிருந்தாற்
றென்றிசைச்சமன்றூ துவர்தொடாநெறியிற் செல்லலா மென்றலுந்திருத்தி
யின்றியமனத்தா ளாகியந்நாட்டி னிறையெதிர்போய் முறையிட்டாள். (33)

வெள்ளநீர் த்தடையா லொருதினங்கொடுபோய்விறகிடாநிமித்தமென் கணவற்
கொள்ளருமுறையான் மடத்தினுட்கொடுபோய்க் கொன்றன றென்றவள்கூற
வள்ளனீர்ப்புவியி லப்பெருநிந்தை யதிகரித் திடுதலினரசன்
வள்ளலந்தகைசா லம்முனிவசிக்கும் வயினடைந் தன்பொடுவணங்கி. (34)

தினந்தினம்பணிதாஞ் செய்ததுமொருநாட் டிற்றியும்பெற்றிலாமையுஞ்சேர்த்
தனந்தலற்றவடான் முறையிடுமோசை யளவறப்பரந்ததாலடிக
ளினந்தனைப்புரைவார் களும்புறச்சமயத் தீனரு நன்குணர்ந்திறைஞ்ச
முனந்தருமுத்தி மற்றுமோருயிர்க்கும் வழங்கலே கடனென மொழிந்தான். (35)

இதுவுநம்பெருமான் றிருவருட்குறிப்பே யிசைபெருக் கிடும்பொருட்டென்றவ்
வதுலமாமுனியோர்ந் ததுபெறத்தக்க வாருயி ரின்மையாலவற்கே
மதுரமார்தருகாய் தினந்தருமுள்ளி வண்செடி யொன்றிருப்பதுகண்
டுதுபெறக்கொடுக்கின் றாமுனுட்கருத்தின் படியென வுரைத்தனன்மன்னோ. (36)

மன்னனக்கணமே பறையறைவித்து வரத்தக்கார் பலரையும்வருத்தி
யன்னமாமுனிவ னடிதொழவவன்போ யச்செடியருகில்வீற்றிருந்து
பொன்னதாற்சமைந்த வம்பலமுடையார் பூங்கழல் கருதியேபுரைதீர்
தன்னதுகரத்தாற் றொட்டனனொளியாய்த் தனிவெளி யிடைகலந்ததுவே (37)

கண்டவர்பலரு மெய்மையாமுத்திக் காரணந் தெரிந்துளங்களித்தா
ரண்டரூர்வரைபோ யவனிசையொலித்த தாருயி ரனையனையிழந்தாள்
விண்டசொன் மறந்தேன் றளவினிற்றொண்டே விழைந்துசெய் திடுமுண வருந்திச்
சண்டவாதனைதீர்ந் திந்திரனுலகோர் தமரெனத் தழுவவேகினளே. (38)

அந்தமாமுனியு மன்னனுமனையா ரகிலமீ தவிர்தருநாளிற்
சந்தநாண்மலரோன் வேதமுநுதற்கட் கடவுளா கமப்பெருங்கடலுஞ்
செந்தமிழ்ப்புலவோர் கழகமுமடவார் திரளுறுங் கற்புமானினமு
மெந்தஞாயமுமோ ரிடருமெய்தாதே யிலங்குறுமென்கைசத்தியமே (39)

கற்றைவார்சடையார் கைத்திருச்சீட்டுக் காண்டலுங் காட்டினன்கருத்தொத்
தற்றையேமுத்தி யளித்தவன்றனிவீ டடைந்தது மறைய வேண்டுவதோ
மற்றையோரறியா தடைபவர்தாமு மாநிலத் திற்பலராமா
லெற்றையுமழியாப் புகழ்நிறீஇக்கதிபெற் றிடுதலே யேற்றமாமம்மா. (40)

முள்ளியென்செடியு மடைந்ததேயாமான் முத்தி[6]மாத் திரம்பெறலரிதன்
றெள்ளிடுங்கொடியோர்க் கிடர்மிகவிளைத்திட் டேத்துநர்க் கின்பமீந்தருளி
வள்ளிநாயகனோ மாயனோவெனப்பார் மதிப்பவாழ்ந் ததன்பின் வீடடைத
றெள்ளிமையாமென் றுணர்ந்துழைக்குநருந் திரைகடற் புவியிலுள்ளாரே. (41)

திண்புவித்தவரி லுயர்ச்சிமிக்கடைந்து செழுந்தமிழ்ப் புலமையுஞ் செய்த
வண்புகழ்க்கடறோ யுமாபதிமுனிவன் வான்கதை யுணர்ந்தவாவகுத்தே
னொண்புனற்கம்பை நதிகுலாங்கச்சி யூருடைக்குமரகோட்டத்தி
னண்புறுங்குரவ னாகுமோர்புலவ னலஞ் சிறிதுரைக்கநாடினனே. (42)

உமாபதிசிவாசாரியர்சருக்க முற்றிற்று.

---

6. சித்தி முத்தி யென்னுமிரண்டும் ஆன்மாக்களிறைவனாலடைதற்குரிய முக்கிய பயன்களௌன்பதும், அவற்றுள் முத்தி சிறந்தது சித்தி அதற்கு அங்கமாகி அமைவதென்பதும் உண்மை. முத்தியாகிய முடிந்த பயன் ஒன்றையே பெறுதல் சாலும், சித்தி வேண்டா மென்று எண்ணுவோர் பலர் உண்டு. அவ்விரண்டனுள் முத்தியானது உமாபதி முனிவரது மடத்திலமைந்த முள்ளிச் செடியுங் கூட அடைந்த பயனாகும்; சித்தியாகிய அதிகாரத்தை (குமாரத்தன்மையை) முதலிற் பெற்று உலகத்திற்கு வேண்டிய நன்மைகளை விளைத்து, தீமைகளை நீக்கி மேலோர்களால் முருகனென்றும் நாராயணனென்றும் புகழும் கீர்த்திபெற்று அதன் முடிவில் முத்தியடைவதே அறிஞர் தன்மையாகும். அங்ஙனமின்றி அடைவோர் செடியைப் போன்ற சடத்தன்மையினரேயன்றிச் சிறந்தோராகார், அவரது முத்தியைப் புகழவுலகம் கடமைப்பட்டதன் றென்பது தமது கூற்றாதலை மீண்டு விளக்கினர்.

கொற்றவன்குடி

ஸ்ரீ உமாபதிதேவ நாயனார் துதிப்பாடல்கள்

அடியார்க் கெளியன் எனத்தில்லை
அண்ணல் அருளுந் திருமுகத்தின்
படியே பெற்றான் சாம்பாற்குப்
பரம முத்தி அப்பொழுதே
உடலும் கரைவுற் றடைந்திடுவான்
உயர்தீக் கையினை அருள்நோக்கால்
கடிதிற் புரிகொற் றங்குடியார்
கமல மலரின் கழல்போற்றி.

சொற்றகு முதல்வழித் தொன்மை நூன்முறை
கற்றொளிர் சிவப்பிர காச நூல்புகல்
கொற்றவன் குடிவரு குரவன் எம்மையாள்
நற்றவன் பதம்அகம் நாட்டு வாமரோ.

— சிவபுண்ணியத் தெளிவு

திருவார் கயிலைத் திருநந்தி தேவர் திருமரபில்
வருமா சிரியன் மறைஞான சம்பந்த மாகுரவன்
அருள்சார் உமாபதி தேசிகன் செஞ்சர ணாம்புயமென்
மருவார் மலரிணை யுள்கி வழுத்தி வணங்குதுமே.

— குருபரம்பரை விளக்கம்

சிற்றம் பலமன்னும் சின்மயராந் தில்லைநகர்க்
கொற்றங் குடிமுதலைக் கூறுநாள் எந்நாளோ.

குறைவிலருள் ஞானமுதல் கொற்றங் குடியடிகள்
நறைமலர்த்தாட் கன்புபெற்று நாமிருப்ப தெந்நாளோ.

— தாயுமான சுவாமிகள்

எட்டுருக் கொள்ளும் சிவத்தினை எவரும்
எளிதினில் எய்திடற் கெனவே
எட்டெனும் வரிசை எழிற்குரு வாகி
எம்பிரான் ஏவலின் செடியார்
எட்டுறச் சிவத்தை இயற்றிய பெருமான்
எட்டெனும் நூலருள் செய்தோன்
எட்டக மலரால் சிட்டர்கள் பரவும்
இறைஉமா பதி சிவம் தொழுவாம்.

— தே. ஆ. ஸ்ரீநிவாஸன்

இப்பிறப்பே சிவன்முத்தி யெய்துவித்து மேற்பிறக்கும்
அப்பிறப்பும் இங்கே அறுத்தருளி - ஒப்பறவே
உண்மையருள் கொற்றங் குடிவாழ் உமாபதிதன்
வண்மையருட் குண்டோகைம் மாறு?*

உமாபதி சிவாசாரியார் புராண சாரம்**

தில்லைச் சிற்றம்பலத்தில் நடனம் ஆடித்
திருவருளைப் புரிபரமன் பூசனைக்கு
வல்லமறை யோர்மரபில் வந்து சைவ
மறைஞான சம்பந்தர் மதித்தாட்கொள்ள
நல்லசிவப் பிரகாசம் முதலாய் உள்ள
ஞானநூல் ஆதியன நவின்று சாம்பான்
கொல்லைவளர் முள்ளிக்கும் முக்தி ஈந்து
கூத்தனடிக் கமலங்கள் குறுகினாரே.

சிவஸ்ரீ தத்புருஷ தேசிகர்

---

* Meykaṇḍa Cāttiram Padinānġu, Kazhagam, 1972, p.303.

** சந்தானாசாரியர் வரலாறு, சைவசித்தாந்தப் பெருமன்றம், மயிலாப்பூர், 1983, p. 33.

ஸ்ரீஉமாபதிசிவம் - வாழ்க்கையும் நூல்களும்

ஆர். சுப்பிரமணியன்

இலக்கண இலக்கியங்களால் தூய்மையுற்ற மொழி ஸம்ஸ்க்ருதம். இவ்வாறே இலக்கண இலக்கியங்களால் தூயமொழி செந்தமிழ். ஸம்ஸ்க்ருதம் - செந்தமிழ் எனும் இரு சொற்களும் ஒத்தப் பொருளுள்ளவை. தமயந்தியின் ஸ்வயம்வரத்திற்கு வந்த பன்னாட்டரசர்களும் ஒருவரோடொருவர் ஸம்ஸ்க்ருதத்தில் உரையாடினர் என்று **நைஷதம்** (10 . 34)[1] எனும் காவியம் கூறுகிறது. இதனால் பண்டைய காலத்தில் ஸம்ஸ்க்ருதம் அரசியல் பொதுமொழியாக இருந்தது என்று அறிகிறோம். தமிழ், ஸம்ஸ்க்ருதம் ஆகிய இரு மொழிகளிலும் நூல்கள் செய்தவர் ஸ்ரீ உமாபதி சிவம். இவர் சைவசித்தாந்தக் கோட்பாடுகள், சைவ தத்துவ நெறிகள் முதலியவற்றை விளக்கும் பல நூல்களை எழுதியுள்ளார்.

சைவ சித்தாந்த சமய வரலாற்றில் ஆசார்ய பரம்பரை என்பது மெய்கண்டாரோடு தொடங்குகின்றது. இவரே சைவ சித்தாந்தத் தத்துவநூல் மரபுக்குரிய மூல சாஸ்திரமாகிய **சிவஞானபோதத்தை** இயற்றியவர். இவரையடுத்து அருணந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவம் ஆகியோர் சந்தானாசார்யர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர்.

உமாபதியாரின் வாழ்க்கை பற்றிய பரம்பரைச் செய்திகள்:

நான்காவது சந்தானாசார்யரான உமாபதிசிவம் சிதம்பரத்தில் தீக்ஷிதர் குலத்தில் பிறந்தவர். இவர் வேத சிவாகமங்களை ஓதி உணர்ந்து தமக்குள்ள முறைப்படி நடராஜப் பெருமானைப் பூஜித்து வந்தவர். தகுதி காரணமாக சிவிகையில் வந்து கொண்டிருந்த இவர், ஒருநாள் ''பட்ட மரத்தில் பகல் குருடன்

---

1. अन्योन्यभाषानवबोधभीतेः संस्कृत्रिमाभिर्व्यवहारवस्तु।

ஸ்ரீஉமாபதிசிவம் - வாழ்க்கையும் நூல்களும்

ஆர். சுப்பிரமணியன்

இலக்கண இலக்கியங்களால் தூய்மையுற்ற மொழி ஸம்ஸ்க்ருதம். இவ்வாறே இலக்கண இலக்கியங்களால் தூயமொழி செந்தமிழ். ஸம்ஸ்க்ருதம் - செந்தமிழ் எனும் இரு சொற்களும் ஒத்தப் பொருளுள்ளவை. தமயந்தியின் ஸ்வயம்வரத்திற்கு வந்த பன்னாட்டரசர்களும் ஒருவரோடொருவர் ஸம்ஸ்க்ருதத்தில் உரையாடினர் என்று **நைஷதம்** (10 . 34)[1] எனும் காவியம் கூறுகிறது. இதனால் பண்டைய காலத்தில் ஸம்ஸ்க்ருதம் அரசியல் பொதுமொழியாக இருந்தது என்று அறிகிறோம். தமிழ், ஸம்ஸ்க்ருதம் ஆகிய இரு மொழிகளிலும் நூல்கள் செய்தவர் ஸ்ரீ உமாபதி சிவம். இவர் சைவசித்தாந்தக் கோட்பாடுகள், சைவ தத்துவ நெறிகள் முதலியவற்றை விளக்கும் பல நூல்களை எழுதியுள்ளார்.

சைவ சித்தாந்த சமய வரலாற்றில் ஆசார்ய பரம்பரை என்பது மெய்கண்டாரோடு தொடங்குகின்றது. இவரே சைவ சித்தாந்தத் தத்துவநூல் மரபுக்குரிய மூல சாஸ்திரமாகிய **சிவஞானபோதத்தை** இயற்றியவர். இவரையடுத்து அருணந்தி சிவாசாரியார், மறைஞான சம்பந்தர், உமாபதிசிவம் ஆகியோர் சந்தானாசார்யர்களாக ஏற்றுக் கொள்ளப்பட்டனர்.

உமாபதியாரின் வாழ்க்கை பற்றிய பரம்பரைச் செய்திகள்:

நான்காவது சந்தானாசார்யரான உமாபதிசிவம் சிதம்பரத்தில் தீக்ஷிதர் குலத்தில் பிறந்தவர். இவர் வேத சிவாகமங்களை ஓதி உணர்ந்து தமக்குள்ள முறைப்படி நடராஜப் பெருமானைப் பூஜித்து வந்தவர். தகுதி காரணமாக சிவிகையில் வந்து கொண்டிருந்த இவர், ஒருநாள் ''பட்ட மரத்தில் பகல் குருடன்

---

1. अन्योन्यभाषानवबोधभीतेः संस्कृत्रिमाभिर्व्यवहारवत्सु।

செல்கின்றான்'' எனும் மறைஞான சம்பந்தரின் வார்த்தைகள் காதில்பட, அதன் பொருளுணர்ந்து அவருடைய சீடரானார். மெய்கண்ட பரம்பரையில் இவர் சீடரானதால் தில்லை மூவாயிரவர் கூட்டத்திலிருந்து விலக்கப்பட்டவராக, சிதம்பரத்-திற்குத் தெற்கே கொற்றவன்குடி எனும் இடத்தில் மடம் அமைத்து நிஷ்டையிலிருக்க ஆரம்பித்தார். இவரது மானஸ-பூஜையில் மகிழ்ந்து இறைவன் தில்லைக்கோயிலை விடுத்து இவரிடத்தில் குடிகொண்டபோது தில்லை மூவாயிரவர் இவருடைய பெருமையை அறிந்து மீண்டும் ஆலயபூஜை நடத்த வேண்டிக் கொண்டனர். இதனால் ஸ்ரீ உமாபதி சைவசித்தாந்தி-களால் திருக்கயிலாயப் பரம்பரையைச் சார்ந்த சந்தானாசார்யராக-வும் சிதம்பரம் தீக்ஷிதர்களால் தம் குலத்திற்குப் பெருமை தேடித் தந்தவராகவும் ஏற்றுக் கொள்ளப்பட்டு மிகவும் மதிக்கப்படுகிறார்.

உமாபதியாரின் சரித்திரத்தைக் கூறும் நூல்கள்

*1. **பார்த்தவன மாஹாத்ம்யம்**[2] (சிதம்பரஸாரத்தின் 35 - 40 அத்யாயங்களில் உள்ள பகுதி), 240 ச்லோகங்களில் ஸ்ரீ ப்ரஹ்மானந்த யதிக்கும் சங்கரருக்கும் இடையே நடக்கும் உரையாடல் மூலமாக ஸ்ரீ உமாபதியின் சரித்திரத்தைக் கூறுகிறது.*

*2. **ராஜேந்திரபுர மாஹாத்ம்யம்**[3] எனும் 108 ச்லோகங்களில் தில்லை சிவானந்த தீக்ஷிதர் அவர்களால் எழுதப்பட்ட நூலிலும் உமாபதியின் வாழ்க்கை வரலாறு சொல்லப்படுகின்றது.*

3. சிதம்பர ப்ரஹ்மயதியால் எழுதப்பட்ட பதினைந்து ஸ்லோகங்களை உடைய சிறு நூல்.[4]

*4. **சந்தானாசார்ய புராண சங்கிரஹம்**[5] எனும் தமிழ்நூல்*

---

2. See Section II. pp. 189-214
3. Ibid., pp. 225-37
4. Ibid., pp. 256-58
5. Dharumaiyadinam, 1964, pp. 33-56

சென்ற நூற்றாண்டின் இறுதியில் திருவாரூரில் வாழ்ந்த ஸ்வாமி-நாத தேசிகர் அவர்களால் பாடப்பெற்றது.

வரலாற்று முறையில் வடமொழி நூல்களில் உமாபதியின் வாழ்க்கை குறித்துப் பல முரண்பாடுகள் காணப்படுகின்றன. உதாரணமாக இரு நூல்களிலும் உமாபதியாரின் பெற்றோரின் பெயர்கள் மாறுபடுகின்றன.

மேலே சொல்லப்பட்ட எந்த நூல்களிலும் உமாபதியாரின் 'தீக்ஷாநாமம்' பற்றிக் குறிப்பிடப்படவில்லை. அவருடைய நூல்களிலும் அவரைப் பற்றிய நூல்களிலும் அவருடைய பெயர் 'உமாபதி சிவம்' (சிவாசார்யர்), 'உமாபதி தேவர்' (அல்லது 'தேவ நாயனார்'), 'கொற்றவன்குடி உமாபதி சிவம்' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிசயிக்கத்தக்க சில நிகழ்ச்சிகள் உமாபதியின் வாழ்க்கை-யில் நடந்ததாக இந்நூல்களிலிருந்து தெரிகிறது. அவையாவன:

(1) உமாபதியின் தீவிர பக்தியால் கட்டுண்ட நடராஜப் பெருமான் தில்லையை விடுத்து கொற்றவன்குடியில் குடிபுகுந்தது.

(2) ப்ரஹ்மோத்சவத்தின்போது 'த்வஜாரோஹணம்' செய்ய முடியாமல் போக, தீக்ஷிதர்களின் அழைப்பின் பேரில் உமாபதி கொடிக்கவி (நான்கு பாடல்கள்) பாடிக் கொடியேறச் செய்தது.

(3) பெற்றான்சாம்பான் எனும் கடையனுக்கு நிர்வாண-தீக்ஷை அளித்தது.

(4) முட்செடிக்கு முக்தி அளித்தது.

(5) தில்லை மேற்குகோபுர வாயிலில் உள்ள கற்பக விநாயகர் ஸந்நிதானத்தில் இருந்த பாம்பை அடக்கியது.

மேற்கூறியவற்றில் சில நிகழ்ச்சிகள் அவருடைய நூல்களிலேயே குறிப்பிடப்பட்டுள்ளன.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் திருவாரூரில் வாழ்ந்த ஸ்வாமிநாத தேசிகர் அவர்களால் பாடப்பெற்றது.

வரலாற்று முறையில் வடமொழி நூல்களில் உமாபதியின் வாழ்க்கை குறித்துப் பல முரண்பாடுகள் காணப்படுகின்றன. உதாரணமாக இரு நூல்களிலும் உமாபதியாரின் பெற்றோரின் பெயர்கள் மாறுபடுகின்றன.

மேலே சொல்லப்பட்ட எந்த நூல்களிலும் உமாபதியாரின் 'தீக்ஷாநாமம்' பற்றிக் குறிப்பிடப்படவில்லை. அவருடைய நூல்களிலும் அவரைப் பற்றிய நூல்களிலும் அவருடைய பெயர் 'உமாபதி சிவம்' (சிவாசார்யர்), 'உமாபதி தேவர்' (அல்லது 'தேவ நாயனார்'), 'கொற்றவன்குடி உமாபதி சிவம்' என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

அதிசயிக்கத்தக்க சில நிகழ்ச்சிகள் உமாபதியின் வாழ்க்கையில் நடந்ததாக இந்நூல்களிலிருந்து தெரிகிறது. அவையாவன:

(1) உமாபதியின் தீவிர பக்தியால் கட்டுண்ட நடராஜப் பெருமான் தில்லையை விடுத்து கொற்றவன்குடியில் குடிபுகுந்தது.

(2) ப்ரஹ்மோத்சவத்தின்போது 'த்வஜாரோஹணம்' செய்ய முடியாமல் போக, தீக்ஷிதர்களின் அழைப்பின் பேரில் உமாபதி கொடிக்கவி (நான்கு பாடல்கள்) பாடிக் கொடியேறச் செய்தது.

(3) பெற்றான்சாம்பான் எனும் கடையனுக்கு நிர்வாண-தீக்ஷை அளித்தது.

(4) முட்செடிக்கு முக்தி அளித்தது.

(5) தில்லை மேற்குகோபுர வாயிலில் உள்ள கற்பக விநாயகர் ஸந்நிதானத்தில் இருந்த பாம்பை அடக்கியது.

மேற்கூறியவற்றில் சில நிகழ்ச்சிகள் அவருடைய நூல்களிலேயே குறிப்பிடப்பட்டுள்ளன.

சரித்திர அகச் சான்றுகள்:

சிவப்பிரகாசம் பாயிரப்பகுதியில் சந்தான பரம்பரையைக் கூறும் இடத்தில் ''விறலார் செல்வத்தாவில் அருள் மறைஞான சம்பந்தர்'' என்றும், ''பார்திகழ'' எனும் பாடலிலும் தமது குருவாகிய மறைஞான சம்பந்தரைப் பற்றிக் குறிப்பிடுகிறார். மேலும் **வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, சங்கற்ப-நிராகரணம்** ஆகிய நூல்களிலும் தமது குருவைப்பற்றிக் கூறு-கிறார். **நெஞ்சுவிடு தூது,** உமாபதி தமது குருவுக்குத் தமது நெஞ்சையே தூதுவனாக அனுப்புவதாக அமைந்துள்ளது.

குஞ்சிதாங்க்ரிஸ்தவம், 107-வது[6] ச்லோகத்தில் தம் மரபினர்-கள் வைதிக நெறியிற் செல்பவர்கள் என்றும், அனைவருக்கும் ஆகமநெறியை உபதேசிப்பவர் என்றும் குறிப்பிடுகிறார். தம்-முடைய கல்வித்திறம், வைதிக கர்மாக்களைத் தாம் ஆரம்பித்த முறை இவைகளைப் பற்றியும் இந்நூலில் அவர் குறிப்பிட்டிருக்-கிறார்.

மேலும் இந்நூலில் 305-வது[7] ச்லோகத்தில், இறைவன் தமக்கு ஓலையை அனுப்பியதையும், அதில் கூறியபடி தாம் பெற்றான் சாம்பானுக்கு ஸத்யோநிர்வாணதீக்ஷை செய்து முக்தியளித்ததையும் குறிப்பிட்டுள்ளார்.

உமாபதியாரின் காலம்:

உமாபதி சிவம் தாம் எழுதிய **ஸங்கற்ப நிராகரணம்** எனும் நூலின் பாயிரப் பகுதியில் ''ஏழஞ்சிரு நூறெடுத்த வாயிரம்'' என்று சக வருடக்கணக்கில் 1235-ம் வருடத்தில் இந்நூல்

---

6. शिष्याणां वेदबाह्यस्थितिमधिजुषतां बोधनार्थं पठन्तः
चर्यायोगाङ्घ्रिभेदप्रकटितविभवान्कामिकाद्यागमांस्तान्।

7. सूतादीनां विमुक्तिप्रदमपि महितं गौरवं पत्रमूलं
स्वं वृत्तं दर्शयित्वा सुखयति नितरां कुञ्चिताङ्घ्रिं भजेऽहम्॥

பாடப்பெற்றது என்று தெரிவிக்கிறார். இது கி.பி. 1313-ம் ஆண்டுக்குச் சமமானது. இவ்வரிதான் உமாபதியாரின் காலத்தைக் காட்ட உறுதியான சான்று. இதைக் கொண்டு உமாபதியார் கி.பி. 13-ம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 14-ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் வாழ்ந்தவர் என ஆராய்ச்சியாளர்கள் முடிவு செய்துள்ளனர். **நியூ கேடலாகஸ் கேடலாகாரத்தில்** (New Catalogus Catalogorum Vol.II., p.383. Madras University, 1966). உமாபதியாரின் காலம் 1270 - 1315 A.D. என்று காணப்படுகிறது.

அக்கால அரசியல் நிலை:

உமாபதிசிவம் வாழ்ந்த காலம், தமிழ்நாட்டுச் சரித்திரத்தையே மாற்றியமைத்த காலம். மூன்றாம் ராஜேந்திரன் கி.பி. 1246 முதல் 1279 வரை அரசாண்டார். இவ்வரசருக்கு வாரிசு இன்மையால் இவர் இறந்தவுடன் சோழ அரசு மறைந்தது. பின்னர் பாண்டியரின் ஆட்சி ஓங்கியது. ஒரு தந்தை இரு தாய் வயிற்று மக்களாகிய சுந்தர பாண்டியனும் வீர பாண்டியனும் ஆட்சியின் நிமித்தம் தமக்குள் போரிட்டுக் கொண்டனர். ஆட்சியின் மீதுள்ள பேராசையால் சுந்தர பாண்டியன் டில்லி அலாவுதீன் கில்ஜியின் படைத்தலைவனான மாலிக்காபூரைத் தனக்கு உதவி செய்ய அழைத்தான். மதுரையில் மாலிக்காபூரின் நுழைவால் பாண்டியரின் ஆட்சி கி.பி. 1310-ல் மறைந்தது. இவ்வாறு சோழநாடு, பாண்டியநாடு எங்கும் தமிழர்களின் ஆட்சி மறைந்து அந்நியர்களின் ஆட்சியால் மிகவும் குழம்பிய காலம்.

சமயநிலை:

வேதம் சிவபெருமானால் அருளப்பெற்றது. அவன் அனைத்திற்கும் முதல்வன்; பிறப்பிலி; எண்வகை உருவினன்; முத்தொழில் புரிபவன்; வேதத்திற்குச் சிவபெருமானே பொருள்; வேள்விகள் சிவ வழிபாடே; திருநீறணிந்து திருவைந்தெழுத்தைச் ஜபித்து, சிவபூஜை மற்றும் அடியவர் பணியும் ஆலயசேவையும்

செய்யவேண்டும் என்ற கருத்துடையது தமிழகத்தின் பண்டைய சைவம். இவைகளைச் சங்கப்பாடல்களாலும்[8] திருமுறைப் பாடல்களாலும்[9] உணரலாம்.

பிற்கால சோழமன்னர்கள் தமிழ்நாட்டுக்கே உரிய முறையில் சிவபக்தியைப் பின்பற்றவில்லை. தமிழ்நாட்டு மறையவர்களைத் தங்கள் குருக்களாக வைத்துக் கொள்ளவுமில்லை. மாறாக, காசி,லாடதேசம், காச்மீரம், மத்தியதேசம், ஆந்திரம் போன்ற இடங்களிலிருந்து கோளகிமடம், ரணபத்ரம், ஆமர்த்தகம், புஷ்பகிரி, லக்ஷாத்யாய மடம், பிக்ஷாமடம் முதலியவற்றைச் சார்ந்த சைவர்களையும், மீமாம்ஸை போன்ற சாஸ்திரங்களைக் கற்ற வல்லவர்களையும் அழைத்து வந்து சோழமண்டலத்தில் குடியேற்றினர்.

இவர்களுக்குச் சோழமன்னர்கள், அகரம், சதுர்வேதிமங்கலம் போன்றவைகளைக் கொடுத்தார்கள். பிரம்மராயர் என்னும் பட்டத்துடன் அமைச்சர்களாகவும் வைத்துக் கொண்டார்கள்; ஆனால் தங்களுக்கு ஆசார்யர்களாக வைத்துக் கொள்ளவில்லை. இதே போன்று, ஆடவல்லானை ஆராதித்தார்கள். தில்லை வாழ் அந்தணர்கள் திருக்கைகளால் முடி சூட்டிக்

---

8. நன்றாய்ந்த நீணிமிர்சடை
முதுமுதல்வன் வாய் போகா
தொன்று புரிந்த வீரிரண்டின்
ஆறுணர்ந்த வொருமுது நூல்
இகல் கண்டோர்... — **புறம்** - *166*.

9. வேத நாவினர் *(1879)*; வேதமாம் வேள்வியாகி *(3421)*; வேதத்திலுள்ளது நீறு *(2179)*; அங்கமும் வேதமும் ஓதும் நாவர் *(55)*; வேதம் பல ஓமம் வியந்தடி போற்ற *(1871)*; மறை நான்காய் *(109)*; வேதர்வேதமெல்லாம் முறையில் விரித்து ஓத நின்ற ஒருவனார் *(1450)*; வேத நான்கினும் மெய்பொருளாவது நாதன் நாமம் நமச்சிவாயவே *(3320)*; நால்வேதம் மூன்றெரி இரண்டு பிறப்பென ஒருமையாலுணரும்..... உணர்ந்தவர் வாழும் ஓமமாம் புலியூர் *(4116)*.

கொண்டார்கள்; ஆனால், அவர்களையும் ஆசார்யர்களாகக் கொள்ளவில்லை.

வடக்கே இருந்து வந்தவர்களால் தமிழ்நாட்டில் ஆசாரக் குழப்பம் ஏற்பட்டிருக்கும். மாலிக்காபூரின் நுழைவால் தமிழர்களின் ஆட்சி மறைந்து சமுதாயமே குழம்பியிருந்த காலம். இவையனைத்தும் குகையிடிக்கலகத்தை[10] ஏற்படுத்தியிருக்க வேண்டும். இவற்றுடன் சங்கரரின் அத்வைத பாஷ்ய பிரசாரம் மற்றும் இராமானுஜர் முதல் வேதாந்த தேசிகர் வரையுள்ள வைணவ ஆசார்யர்களின் பிரசாரம் வேறு. இவைகளால் சமய நம்பிக்கைகளிலும், பழக்கவழக்கங்களிலும், குழப்பம் ஏற்பட்டிருக்கும். இவ்வளவு குழம்பிய காலத்தில்தான் உமாபதிசிவம் தோன்றினார்.

உமாபதியாரின் தேவை, அவர் சாதித்தவை:

1. ஞான சம்பந்தரின் வழியில் தமிழ், வடமொழி, வைதிகச் சைவம், ஆகமநெறி இவைகளைக் காக்க உமாபதி தேவைப்பட்டார்; அதற்காகப் பலவழிகளும் அவர் முயன்றார்.

2. ஸத்யோஜோதி முதலான வடமொழி உரையாசிரியர்கள் தீக்ஷை முதலான கர்மாவே முக்கியம், ஞானம் அதற்கு

---

10. ***குகையிடிக்கலகம்:*** 'குகை' எனும் சொல் பழந்தமிழில் 'முனிவர் இருப்பிடம்' எனப் பொருள்படும். அந்தவிதத்தில் அக்காலத்தில் துறவிகள் தங்கி இருக்க இடம் கட்டிக்கொடுக்கப்பட்டதாகத் தெரிகிறது. இங்கு தேசாந்தரிகளும் தங்கிச் செல்வது உண்டு. மூன்றாம் குலோத்துங்கன் பட்டமேறி 22-வது வருடத்தில் (கி.பி. 13-ம் நூற்றாண்டின் தொடக்கத்தில்) முதன் முதலாக 'குகை இடித்தல்' ஆரம்பமாகியது. அதைத் தொடர்ந்து மூன்றாம் இராஜராஜ சோழனின் காலத்தில் இக்கலகம் மிகப்பெரிய முறையில் நடைபெற்றதாகத் தெரிகிறது. ஆனால் இக்குகையிடிப்பின் காரணம் என்னவென்று தெரியவில்லை என்று ஸ்ரீ கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார் தமது *The Cōlās* எனும் நூலில் (Vol., II., p. 500) குறிப்பிட்டுள்ளார்.

அங்கம்தான் எனும் கொள்கையுடையவர்கள். இந்தக் கருத்துக்கு மாறுபட்டு ஞானமே முக்கியம் என ஞானதீக்ஷையை உபதேசித்தவர் உமாபதி. சதரத்னஸங்கிரஹம் போன்ற நூல்கள் ஞானதீக்ஷயை உபதேசிப்பவைகளே. இவ்விதம் ஞானதீக்ஷயை ஏற்றது உபதேசக்கிரியையில் ஆகமிகர்களுக்கும் வைதிகர்களுக்கும் இடையில் வேற்றுமையைக் குறைக்க உதவியது.

3. சிவபக்தர்கள் மிகுதியாக வாழும் சிதம்பரத்தில், அவர்களுக்குள் ஆகம, வைதிக நெறிப்பிளவு ஏற்படாத வண்ணம் செய்தவர் உமாபதிசிவம்.

4. சித்தாந்தசாஸ்திரநூல்கள் மிகுதியாக எழுதிய பெருமையை உடையவர் உமாபதி.

5. புதிய மரபுகள் தோன்றக் காரணமாக இருந்தவர்.

6. புராணங்களாலும், திருமுறைகளாலும், சோழர்களாலும், சிதம்பரமும் அம்பலவாணரும் போற்றப்பெற்றிருந்தாலும், கோயில் என்றதும் 'தில்லை' என்ற பெருமையைத் தேடித் தந்தவர். திருப்பதிக் கோவையில் ''கோயில் வேட்கள நெல்வாயில்'' என்று தில்லையை முன்வைத்தே பாடியிருப்பதால், தலமுறைத் தேவாரம் தில்லையை முன் வைத்தே ஆரம்பிக்கிறது. இப்பெருமை உமாபதியையே சாரும்.

7. நாயன்மார்களிடத்தில் மிகுந்த அன்புடைய உமாபதியார் அவர்கள் வரலாறுகளைத் திருத்தொண்டர் புராணசாரம், சேக்கிழார் புராணம், நாயன்மார் திருநட்சத்திரம், திருமுறைகண்ட புராணம் முதலிய நூல்களின் மூலம் சரித்திரமாக்கியிருக்கிறார். நடேச தண்டகத்திலும் குஞ்சிதாங்கிரிஸ்தவத்திலும் நாயன்மார்களிடத்தில் தமக்குள்ள அன்பை வெளிப்படுத்தியிருக்கிறார்.

உமாபதியார் எழுதிய நூல்கள்[11]

உமாபதிசிவம் ஸம்ஸ்கிருதத்திலும் தமிழிலும் பலநூல்கள் எழுதியதாகக் கூறப்படுகிறது. வழக்கத்திலுள்ள முறைப்படி நூற்பெயர்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன:

உமாபதிசிவம் ஸம்ஸ்க்ருதத்தில் பௌஷ்கராகம ஞானபாத பாஷ்யம், ஸ்ரீ ருத்ர பாஷ்யம், சமக பாஷ்யம், வாயு ஸம்ஹிதை மற்றும் கர்ஷணம் முதலான எட்டு ஸம்ஹிதை-களின் உரைகள், சதரத்னஸங்கிரஹம், குஞ்சிதாங்க்ரி-ஸ்தவம், நடராஜ ஸஹஸ்ரநாமம், (உரையுடன்), நடராஜ - த்வனி - மந்த்ரஸ்தவம், நடேச தண்டகம், ஆகிய நடராஜப் பெருமான் மீதான ஸ்தோத்திரங்கள், மற்றும் கல்பக - கணேச - பஞ்சரத்ன - ஸ்தவம், பாதஞ்சல ஸூத்ர உரை, சிதம்பர - யந்த்ரோத்தார உரை முதலிய நூல்களை எழுதியுள்ளதாகத் தெரிகிறது.

சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப் பஃறொடை, கொடிக்கவி, உண்மைநெறிவிளக்கம், சங்கற்ப நிராகரணம், நெஞ்சுவிடுதூது எனும் சித்தாந்த அஷ்டகத்துடன் கோயிற்புராணம், திருப்பதிக்கோவை, திருப்பதிகக் கோவை, திருமுறை கண்டபுராணம், சேக்கிழார் புராணம், திருத்தொண்டர் புராண சாரம், நாயன்மார் நட்சத்திரம், சிவஸ்தல நாமக்கலி-வெண்பா, தேவார அருண்முறைத்திரட்டு, ஞானசாஸ்திர பஞ்சகம் அல்லது ஞானசரிதை எனும் பதினெட்டு நூல்களைத் தமிழில் உமாபதி செய்ததாகத் தெரிகிறது.

மதுரை சிவப்பிரகாசர் எழுதிய சிவப்பிரகாச உரை, வள்ளலார் சாத்திரம், நிரம்பவழகிய தேசிகர், மறைஞான தேசிகர் இவர்கள் எழுதிய சிவஞான சித்தியார் உரை, சிவாக்ரயோகிகள் எழுதிய சிவஞான பாஷ்யம், ஞானாவரண விளக்கம், பாடியம், பார்த்தவனமாஹாத்ம்யம், சந்தானாசார்ய புராண ஸங்கிரஹம்,

11. See below Bibliography for Umāpati's works.

சிவஞான சுவாமிகள் எழுதிய சிவஞான மாபாடியம் ஆகிய நூல்களிலிருந்து உமாபதியார் எழுதிய நூல்களின் பெயர்களை அறிய முடிகிறது.

பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த மதுரை சிவப்பிரகாசர் உரையில், சித்தாந்த சாத்திரங்கள் எட்டு, கோயிற்புராணம், திருத்தொண்டர் புராணசாரம் முதலிய நூல்கள் குறிப்பிடப்படு-கின்றன.

இதே நூற்றாண்டைச் சேர்ந்த வள்ளலார் சாத்திரமான ஞானப்பிரகாசவெண்பா (பாட்டு 72), சிவப்பிரகாசத்தைப்பற்றி, ''உமாபதியார் சொற்ற சிவப்பிரகாசத் தொன்னூல்'' என்று கூறுகிறது.

சிவஞானசித்தியார் உரையில் சங்கற்ப நிராகரணமும், மறை-ஞான தேசிகருடைய உரையில் சிவப்பிரகாசம், திருவருட்பயன் ஆகியவையும், சிவஞானபோத சிவாக்ர பாஷ்யத்தில், சதரத்ன சங்கிரஹமும் மேற்கோளாகக் காட்டப்படுகின்றன.

ஞானாவரணவிளக்கமும் மாபாடியமும் எனும் நூலிலிருந்து சங்கற்ப நிராகரணம், சிவப்பிரகாசம், ஞானசாத்திர பஞ்சகம், பௌஷ்கர பாஷ்யம் ஆகிய நூல்கள் உமாபதியுடையவையென்று அறியமுடிகிறது.

ராஜேந்திரபுர மாஹாத்ம்யத்தில் (ச்லோ. 45-8), பாதஞ்சல-ஸூத்ர உரை, ருத்ரம், சமகம், வாயு ஸம்ஹிதை மற்றும் கர்ஷணம் முதலான எட்டு ஸம்ஹிதைகளின் உரைகள், பௌஷ்கர ஞான-பாத உரை, திருத்தொண்டர் புராண சாரம், கொடிக்கவி, கோயிற்புராணம் முதலிய நூல்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

பார்த்தவன மாஹாத்ம்யம், உமாபதியார் கொடிக்கவியை இயற்றினார் என்றும், அவருக்கு பௌஷ்கரஞான பாதத்தை மறைஞான சம்பந்தர் உபதேசித்தார் என்றும் தெரிவிக்கிறது.

சந்தானாசார்ய புராண ஸங்கிரஹத்தில் - கொடிக்கவி, சிவப்பிரகாசம், வினாவெண்பா, திருவருட்பயன், உண்மை நெறி-

விளக்கம், நெஞ்சுவிடுதூது, போற்றிப்பஃறொடை, சங்கற்பநிராகரணம், திருப்பதிக்கோவை, திருப்பதிகக் கோவை, சேக்கிழார் புராணம், திருத்தொண்டர் புராண சாரம், கோயிற்புராணம் ஆகிய நூல்களன்றி வடமொழி நூல்கள் எவையும் குறிப்பிடப்படவில்லை.

உமாபதியார் சங்கற்ப நிராகரணத்தில் தாமே சிவப்பிரகாசத்தைப் பற்றி

''தவப்பிரகாசத் தன்மையில் விரித்த
சிவப்பிரகாசர் செழுந்தமிழுண்மையை
அருளுடன் ஆய்ந்து கொள்ளத்
திருவருள் வினவல் திருந்திடு மன்றே,

என்று குறிப்பிடுகிறார்.

நடேச ஸஹஸ்ரநாம பாஷ்யம், ருத்ர சமக பாஷ்யங்கள், வாயுஸம்ஹிதை முதலான எட்டு ஸம்ஹிதைகளின் உரைகள், யந்த்ரோத்தார உரை ஆகியவைகள் தேடிய வரையில் கிடைக்கவில்லை.

மீதி நூல்களை இயற்றியவர் உமாபதிதானா எனும் ஐயப்பாடு அறிஞர்களிடையே உள்ளது.

(1) பெரிய புராணத்தைப் பதிப்பித்த யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலரவர்கள் முதற்பதிப்பில் சிவஸ்தலநாமக் கலிவெண்பா குறித்து, ''இதனை இயற்றியவர் யார் என்று அறியக்கூடவில்லை. சிலர் உமாபதிசிவம் என்று கூறுவர்,'' என்று எழுதியிருப்பதிலிருந்து இந்நூலை எழுதியவர் பற்றிய ஐயம் இருப்பது தெரிகிறது.

(2) திருவாவடுதுறை ஆதீனத்தின் வெளியீடான ஞானபூசை எனும் நூலின் முன்னுரையில் ''இந்நூல் உமாபதியாருடையது அன்று. வேறு யாரோ எழுதியிருக்கலாம்'' என்று கூறப்பட்டுள்ளது. மேலும் மு. அருணாசலம் அவர்கள் தமது தமிழ் இலக்கிய வரலாறு எனும் நூலில் ''பதினான்காம் நூற்றாண்டுச் சைவ

இலக்கியம் I' என்ற பகுதியில் **ஞானசாத்திர பஞ்சகம்** அல்லது **ஞானசரிதை** என்னும் நூல் அருணமச்சிவாயரால் எழுதப்பெற்றது என்று கூறுகிறார்.

(3) தருமபுர ஆதீன வெளியீட்டில் **நாயன்மார் திருநட்சத்திரம்** எனும் நூலை உமாபதியாருடையது என்று கூறவில்லை.

(4) **சதரத்ன ஸங்கிரஹத்தின்** உரையான **சதரத்னோல்லேகனி,** உமாபதி எழுதியதா இல்லையா என்பது குறித்தும் ஐயப்பாடு உள்ளது.

(5) இது போலவே **பௌஷ்கராகம ஞானபாத பாஷ்யம்** உமாபதியினுடையது என்று வழக்கில் இருந்தாலும் அது குறித்து ஐயம் எழுகிறது. பிரமாண படலத்தில் (p.519),

''तदुक्तं **न्यायामृते** -
त्रिकाल-सर्वदेशीय-निषेधे प्रतियोगिता।
असत्ता प्रोच्यतेऽध्यस्ते तुच्छे तु प्रतियोगिनि॥ इति॥''

எனும் **ந்யாயாம்ருத** ச்லோகத்தை மேற்கோளாகக் காட்டுகிறார். இந்நூல் வ்யாஸதீர்த்தர் எனும் மத்வ ஆசாரியரால் எழுதப்பட்டது. இவரது காலம் கி.பி. *1470-1539* என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. உமாபதியின் காலத்திற்கு நூற்றைம்பது ஆண்டுகளுக்கும் மேல் பிற்பட்ட நூலான **ந்யாயாம்ருதம், பௌஷ்கராகம ஞானபாத பாஷ்யத்தில்** மேற்கோளாகக் காட்டியிருப்பதிலிருந்து, இந்நூல் உமாபதியாருடையதுதானோ எனும் ஐயம் தோன்றுகிறது.

உமாபதி சிவத்தின் வழிபாட்டு மூர்த்திகள் இருக்கும் இடங்கள்:

உமாபதியார் தம் சீடரான அருள்நமச்சிவாயரிடம் தனது ஆன்மார்த்தமூர்த்தியான ஞானமா நடராஜப் பெருமானைக் கொடுத்தார் என்றும் அது, சித்தர் சிவப்பிரகாசர் நமச்சிவாய தேசிகர் வழியாகத் திருவாவடுதுறையில் பூஜிக்கப்பட்டு வருவ-

தாக திருவாவடுதுறை ஆதீன வரலாறு கூறுகிறது. துறையூரி-லிருக்கும் வீரசைவ மடத்தில் உமாபதியாரின் ஆன்மார்த்த மூர்த்தி இருப்பதாக அம்மடத்தின் வரலாறு கூறுகிறது. கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியாரின் மடமும் மேற்படி மடத்தைச் சேர்ந்தவர்களிடமே இருக்கிறது. இவ்வரலாறு சரி என்று தோன்றவில்லை.

உமாபதியாரின் திருவுருவம்:

ஆகமநெறி, வைதிகநெறி இரண்டையும் வளர்த்தவர் உமாபதி என்பதைக் காட்டுவதைப்போல ஒரு உருவம் சிதம்பரம் ஸ்ரீ ஸபாநாயகர் கோயிலில் உள்ள பாண்டிய நாயக்கர் சந்நிதி மயில் மண்டபத்து அருகில் உள்ள சுவரில் உள்ளது:

உச்சிக்குடுமி, வலது கையில் வியாக்யான முத்திரை, இடது கையில் புத்தகம், இவற்றுடன் யோகபட்டம் கட்டி அமர்ந்த நிலையில் ஒரு தீக்ஷிதர் உருவம் காணப்படுகிறது. கல்வியறிவும் ஞானத்தினால் ஏற்பட்ட சாந்தநிலையும் கொண்டு விளங்குகிறது இவரது திருமுக மண்டலம். இவரது வலது புறத்தில் தலையில் சடை, காதில் ஆறுகட்டு என்னும் குண்டலம் இவற்றுடன் ஒரு சைவத்துறவி தீக்ஷிதரிடம் பாடம் கேட்கும் முறையில் பணிவுடன் அமர்ந்திருக்கிறார். இதே போல தீக்ஷிதரின் இடது புறத்தில் வைதிகப் பிராமணர் ஒருவர் பின்குடுமி, பஞ்சகச்சம், மார்பில் பூணூல் இவற்றுடன் தீக்ஷிதரிடம் உபதேசம் பெறும் முறையில் அமர்ந்திருக்கிறார். இவ்வுருவ அமைப்பு விஜயநகர காலத்ததாக இருக்கலாம். தீக்ஷிதர்களின் சமூகத்தில் உமாபதியாரைத் தவிர வேறு யாரும் இவ்விதம் இருப்பதாகத் தெரியவில்லை. காலத்-தினால் சிதைவுற்றிருப்பினும், அவருடைய இயல்பை இவ்-வுருவம் நன்கு காண்பிக்கிறது.

கொற்றவன்குடி உமாபதி சிவாசாரியார் மடத்தில் உள்ள திருவுருவம் மிகவும் பிற்காலத்தது. ஒரு சைவத்துறவியைப் போல் உள்ளதே தவிர தீக்ஷிதரின் உருவம் போல் இல்லை.

Śrī Umāpati Śivam with his disciples

Found on the wall of Mayil Maṇḍapa, Pāṇḍiya Nāyakkar Sannidhi,
Śrī Sabhānāyakar Kōil, Chidambaram
Courtesy: Sri R. Subramaniyan

Śrī Umāpati Śivācāriyār
(Koṟṟavankuḍi, Chidambaram)

உண்மையில் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள உமாபதியாரின் உருவங்களில் ஸபாநாயகர் கோயில் பாண்டியநாயக்கர் சந்நிதியில் உள்ள உருவமே மிகப்பழமையானது என்று கூறுவதில் கருத்து வேறுபாடு வராது.

உமாபதியாருக்குப் பின் வந்த சைவப் பரபம்பரை:

உமாபதியாருக்கு அருள்நமச்சிவாயர் என்பவர் சீடர். இவருக்கு மச்சுச் செட்டியார் எனும் பெயருமுண்டு. இவர் முதலில் மறைஞான சம்பந்தரிடம் உமாபதியாரின் சக சீடராக இருந்து பின் உமாபதியாரிடமே சீடரானவர். இப்பெரியாருக்குச் சித்தர் சிவப்பிரகாசர், காழிகங்கை மெய்கண்டார், திருவையாறு சந்திரசேகரர் என்னும் அந்தணர் ஆகிய மூவரும் சீடர்கள். இம்மூவர் வழியாகத் திருவாவடுதுறை ஆதீனம், திருத்தருமபுர ஆதீனம், செப்பரை ஆதீனம் ஆகிய மூன்று சைவப்பரம்பரைகள் தோன்றின. இத்திருமடங்களிலிருந்து பல அநுபூதிமான்களும், புலவர்களும் சிவபக்தர்களும் தோன்றி சிவபக்தியை வளர்த்ததை உலகம் அறியும்.

BIBLIOGRAPHY OF UMĀPATI ŚIVAM'S WORKS

I. TAMIL

(i) SIDDHĀNTA WORKS (Individual)

Koḍikkavi, see collection

Neñjuviḍutūdu, with an old com., Saivasiddhanta Mahasamajam, Madras, 1940.

----, with *Nīrmaikkaṭṭurai,* Tiruvavaduturai Adinam, 1959.

Poṟṟipaḷiṟoḍai, with an old com., Saivasiddhanta Mahasamajam, Madras, 1940.

----, with *Ēṟpukkaṭṭurai* of T.A. Srinivasachariar, Tiruvavaduturai Adinam, 1956.

----, with *Teḷivurai,* ed. K. Sundaramurthy, Kasimatam, Tiruppanandal, 1981.

Saṅkaṟpanirākaraṇam, with an old com., Saivasiddhanta Mahasamajam, Madras, 1940.

----, with an old com., critical ed. by T.S. Meenakshisundaram Pillai, Tiruvavaduturai Adinam, 1953.

----, with the com. of Jñānaprakāśa Deśikar, ed. with expln. by P. Ramanatha Pillai, Tirunelveli, 1968.

----, with *Sārbukkaṭṭurai* of T.A. Srinivasachariar, Tiruvavaduturai Adinam, 1958.

----, with com. and Eng. tr., with notes, by N. Murugesa Mudaliar, Dharmapuram Adinam, 1976.

----, in prose by K. Subramania Pillai, Dharmapuram Adinam, 1963.

Śivaprakāśam, with the com. of Jñānaprakāśa Deśikar, Salem, 1981.

----, with *Urai* by Madurai Sivaprakasar, Saivasiddhanta Mahasamajam, Madras, 1940.

----, with *Urai* (of an unknown Swāmigaḷ), Nellai, 1963.

----, with *Cindaṉai Urai* of Nallasiva Devar, Saivasiddhanta Mahasamajam, Madras, 1934.

----, with a new com. by M. Tiruvilangam, Kannagam, 1933 (2nd Edn.)

----, crit. ed. with com. by T.S. Meenakshisundaram Pillai, Thirūvavaduturai Adinam, 1953.

----, with *Poḻippurai,* ed. by T.S. Meenakshisundaram Pilai, Thiruvavaduthurai Adinam, 1967.

----, crit. ed. with modern com. by Muttu S. Manikkavacaka Mudaliar (articles) in *Siddhāntam,* 1950-51.

----, with *Cīrmaikkaṭṭurai* of T.A. Srinivasacariyar, in four parts, Thiruvavaduturai Adinam, 1960 etc.

----, with Eng. tr. by H.R. Hoisington, *Journal of the American Oriental Society,* IV, 1853-54, pp.127-244.

----, with Eng. tr. by K. Subrahmania Pillai, Dharmapuram Adinam, 1967.

Tiruvarutpayan, ed. V.S. Ranganathan, Kasimatam, Thiurppanandal, 1966.

----, ed. K.Sundaramurti, 1964.

----, with the com. of Niramba Azhakia Desikar and *Cindanai Urai,* Saivasiddhanta Mahasamajam, Madras, 1934, 1940.

---, with the com. of Niramba Azhakia Desikar and an explanatory com. by K. Vellaivaranam, Chidambaram, 1965.

----, with the com. of Salem S. Ramalinga Mudaliar, Salem, 1974.

----, with the com. of S. Sivapadasundaram, Jaffna, 1918, 1932.

----, with *Teḷivurai,* Kasimatam, Tiruppanandal, 1978.

----, with *Terivukkaṭṭurai* by T.A. Srinivasachariyar, Thiruvaduturai Adinam, 1957.

----, with *Viḷakka Uraigaḷ,* K. Vajravelu Mudaliar, Thiruvaduturai Adinam, 1976.

----, in prose, by K. Subramania Pillai, Dharmapuram Adinam, 1962.

----, with Eng. tr. by J.M. Nallaswami Pillai, Dharmapuram Adinam, 1896, 1945.

----, chapter V, Eng. tr. with notes by G.U. Pope in *Thiruvācagam,* Oxford, 1900.

Uṇmaineṟiviḷakkam, with *Padavurai* and *Karuttukkaḷ* by Tirunelveli A. Iswaramurti Pillai, Chengelpet, 1939.

----, with *Teḷivurai,* ed. K. Sundaramurti, Kasimatam, Tiruppanandal, 1978.

Viṉāveṇpā, with the com. by E. Sellatturai, Yazhpanam, 1966.

(ii) SIDDHĀNTA WORKS (Collection)

Koḍikkavi-Uṇmaineṟiviḷakkam, with *Kuṟippu viḷakkak kaṭṭurai* of T.A. Srinivasachariar, Tiruvavaduturai Adinam, 1956.

Koḍikkaviyum Viṉāveṇpāvum, with com. ed. K. Sundaramurti, Kasimatam, Tiruppanandal, 1980.

Koḍikkavi, Viṉāveṇpā, Uṇmaineṟiviḷakkam, Saivasiddhanta Mahasamajam, Madras, 1940.

Meykaṇḍa Sāttiram (Siddhānta Sāttiram) ed. M. Arunachalam Pillai, Dharmapuram Adinam, 1942 (2nd edn. 1956)

Meykaṇḍa Sāttiram (Siddhānta Sāttiram). Text and com., Saiva Siddhanta Mahasamajam, Madras, 1934.

Meykaṇḍa Sāttiram Patiṉāṅgu with an Introd. by K. Subramania Pillai, Tirunelveli, 1972.

Meykaṇḍa Sāttiram (*Tiruvaruṭpayaṉ* and *Viṉāveṇpā*) with an old com., Tiruvavaduturai Adinam, 1953.

Meykaṇḍa Sāttiram Vol.II (*Śivappirakāsam* with a com. of P.Ramanatha Pillai), Kazhagam, 1968.

Poṟṟipaḥṟoḍai, Viṉāveṇpā, with the com. of A. Eswara Murti Pillai, Madras, 1928.

Siddhānta Sāttiram (Patiṉāṉgiṉ mūlam), pub. by Sri K. Kuppuswami Mudaliar, under the guidance of A. Singaravelu Mudaliar. Other details not available.

Siddhānta Sāttiram (Texts with comm.), Saivasiddhanta Mahasamajam, Madras, 1940.

Siddhānta Catuṣṭayam, tr. of Umāpati's *The Fruit of the Grace Divine, Interrogation in verse, The Flag Hymn,* and *The Light of Righteous Way* by T.N. Ramachandran, Mannargudi, 1980.

Siddhānta Trayam (*Viṉāveṇpā, Koḍikkavi* and *Uṇmaineṟiviḷakkam*) with Tamil expln., and Eng. tr. by J.M. Nallaswami Pillai, Dharmapuram Adinam, 1946.

Tiruvaruṭpayaṉ, Viṉāveṇpā, ed. with notes by P. Ramanatha Pillai, Tirunelveli, 1965, 1975.

Tiruvaruṭpayaṉ, Viṉāveṇpā, Poṟṟipaḥṟoḍai, Koḍikkavi, Neñjuviḍutūdu and *Uṇmaineṟiviḷakkam,* in prose by K. Subramania Pillai, Dharmapuram Adinam, 1962.

(iii) OTHER WORKS*

***Jñānasāra-śāstra-pañcakam* or *Jñānacaritai,* Dharmapuram Adinam, 1934.

Kōyiṟpurāṇam with the new com. of Arumuga Navalar, Madras, 1884 (2nd edn); Chidambaram, 1952.

----, ed. with com. by Subbaraya Nayakar, Chidambaram, 1890.

----, with *Poḻippurai,* Tiruvavaduturai Adinam, 1965.

***Nāyaṉmār Tirunaṭchattiram,* pub.by Dharmapuram Adinam.

Sekkiḻār Purāṇam or *Tiruttoṇḍar Purāṇa Varalāṟu,* Tirunelveli, 1965.

----, with *Padavurai* of Pon. Subramania Pillai, Tiruvidaimarudur, 1967.

***Śivasthala - nāmakkaliveṇbā* pub. by Dharmapuram Adinam, 1964.

Tevāra Aruḷmuṟaittiraṭṭu or *Tirumuṟaittiraṭṭu* with the com. of M.V. Nallaiyappa Pillai, Saiva Siddhanta Maha Samajam, 1933, 1934.

---

*Compiled from Dr. T.B. Siddhalingaiah's *Origin and Development of Saiva Siddhanta Upto 14th Century,* Madurai, 1979.

**Authorship doubtful.

Tirumuraikaṇḍa Purāṇam Mudalia Tirunūl Aindu (including *Tiruppadigakkovai*) with *Kurippurai* of Vidvan S. Singaravelan, Dharmapuram Adinam, 1967.

Tirumuraikaṇḍa Purāṇam, Tiruttoṇḍarpurāṇa-sāram and *Tiruppadikkovai* found in *Periya Purāṇam* ed. Arumuga Navalar, Madras, 1951 (8th edn).

II. SANSKRIT

(i) Major Works

Pauṣkarāgama (Jñānapāda) with the *Bhāṣya* of Umāpati Śivam, ed. by Polagam Sri Rama Sastrigal and Sri Ambala Navala Jnanasambandha Parasakti Svami, Chidambaram, 1925.

----, in Gr. Script, ed. with Tamil tr., Shanmuga Sundara Mudaliar, Madras, 1890.

Śataratnasaṅgraha with the com. *Śataratnollekhini*, ed. Panchanan Sastri, Calcutta, 1944. Arthur Avalon's Tantric Texts, Vol.XXII

----, with *Śatamaṇimālai* of Turaimangalam Sivaprakasa Swamigal, with Introd., tr., and notes in Eng. by P. Thirugnanasambandan, Madras University Philosophical Series 20, 1973.

----, with com., ed. by A. Sundaresa Sivachariar, Tanjore Saraswathi Mahal Publication, No. 157, 1976.

Śrī Kuñcitāṅghristava or *Laghusahasra Stuti* with Tamil tr. by K.M. Rajaganesa Dikshitar, Chidambaram, 1958.

(ii) Minor Works

Kalpaka-Gaṇeśa-Pañcaratnastava, printed in the *Śrī Kuñcitāṅghristava.*

Naṭarāja (Naṭeśa) Daṇḍakam, Chidambaram, 1964.

(iii) Works Known Through References

Naṭarāja-dhvani-mantrastava.

Bhāṣyas on:
Cidambarayantroddhāra (*Yantravidhāna*), *Nateśasahasranāma*, *Pātañjala-sūtra*, *Śrīrudram* and *Camakam*, the eight Saṁhitās, *Vāyu*, *Karṣaṇa*, etc.

15280